160

உ

கணபதிதுணை.

கிரகஸ்தாஸ்ரம சுபோதினியென்னும்

# இல்லறசாரசங்கிரகம்

OFFICE OF ... 12 OCT 192...

இஃது

சிலர் வேண்டுகோளின்படி

சென்னை வேப்பேரி

சிவனேசன் அண்டு கம்பெனி,

பூ. ரா. அப்பாதுரை முதலியாரால்

பிரசுரிக்கப்பட்டு,

நான்காம்பதிப்பு காப்பி-1000.

சென்னை-சூளை,

ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்,

பதிப்பிக்கப் பட்டது.

1920.

Registered Copy Right.

விலை — அணா 10.

...nly Printed at the A, D, Press, Madras

R4
N20
17400.

உ

கணபதிதுணை.

கிரகஸ்தாஸ்ரம சுபோதினியென்னும்

# இல்லற சார சங்கிரகம்

இஃது
சிலர் வேண்டுகோளின்படி

சென்னை வேப்பேரி
சிவனேசன் அண்டு கம்பெனி,
பூ. ரா. அப்பாதுரை முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டு,

நான்காம்பதிப்பு காப்பி-1000.

சென்னை-சூளை,
ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத்திற்,
பதிப்பிக்கப் பட்டது.

1920.

Registered Copy Right.

இதன் விலை — அணா 10.

OFFICE OF T... 12 OCT ... MADRAS

12 OCT 1928

உ

கணபதி துணை.

# இல்லற சார சங்கிரகம்.

## கணபதி தோத்திரம்.

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு—முருவாக்கு
மாதலால் வானோரு மானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

## கடவுள் வணக்கம்.

ஊரிலான் குணங்குறியிலான் செயலிலானுரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான்வரல் போக்கிலான் மேலிலான்றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்.

## சிறப்புப் பாயிரம்.

மல்லன் ஞாலத்திலில்லறம் போலொன்றுமதியார்
சொல்லுமுத்தொழிற் கருத்தருமுனிவருஞ் சுரரும்
வல்லசித்தரும் பெரியருங்கொண்ட வவ்வறத்திற்
சொல்லும்யாவு மிங்குரைத்துணர் வளிப்பாம்.

## இல்லறச் சிறப்பு.

தேவருமுனிவர்தாமுஞ் செங்கண்மாலயனு மற்றும்
யாவருமடந்தை மாரோடில்லறத் தொழுகுந்தன்மை
மேவரப்பணித்தானன்றே விமலையோ டணுகி மேனாட்
டாவரும்புவனமாதி சராசரம் பயந்ததாணு.

மேனவியல்பான் வரையு மெல்லியலைமேவிற்
ஞானமுளதாகு மரிதான தவமாகும்
வானமுளதாகு மிவன்மண்ணு முளதாகு
மூனமிலதாகு மரிதொன்றுமிலை யன்றே.

காண்டகையதங்கணவரைக் கடவுளார்போல்
வேண்டலுறுகற்பினர்த மெய்புனாயினிற்கு
மீண்டையுளதெய்வ தருமமாமுகிலுமென்று
லாண்டகைமையோர்களு மவர்க்குரிகரன்றே.

அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லையானன்றென்று வள்ளுவனர்
மேற்கொண்டு காட்டினரேன் மேதினியீரிங்கிதற்கு
மேற்கொளற மில்லையிது மெய்.

துறவறமே கொண்டதெய்வச் சொற்புலமை யெளவையரும்
இறமுறவே யில்லறமே சீர்த்ததெனப்—பறையறைந்தா
கேற்றமாச் சொற்றனரே யெம்மவர்காளில்லறமே
யேற்றமெனக் காண்மினினி.

## ஆடவர் தருமம்.

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானுடராத லரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வி நயத்தலரிது
ஞானமுங் கல்வியு நயந்தகாலைத்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே."

**கருத்து.** அரியதனைக் கேட்பையாயின், நீண்டவடித்தவேலை டையவனே மனிதராகப் பிறப்பது, அரியது அரியது அரியது. மனிதராகப் பிறந்தாலும், கூன், குருடு, செவிடு, பேடு என்பவற் றையொழித்துப் பிறப்பது அரியது. கூன் குருடு செவிடுபேடொ ழிந்து பிறந்தகாலத்திலும், ஞானத்தையும் கல்வியையும்விரும்பு தல் அரிது, ஞானத்தையும் கல்வியையும் விரும்பினகாலத்திலும் தானத்தையும் தவத்தையும் செய்வது அரிது. தானத்தையும் தவ த்தையும் செய்வாராயின் அவர்களுக்குச் சுவர்க்கலோகம் தானாக வே வழிதிறந்து விடப்படும் எனவும்,

"எண்ணரிய பிறவிதனின் மானுடப்பிறவிதா
　　னியாதினும் மரிதரிதுகா
ணிப்பிறவிதப்பினு லெப்பிறவிவாய்க்குமோ
　　வேதுவருமோ வறிகிலேன்
கண்ணகனிலத்துநா னுள்ளபொழுதேயருட்
　　ககனவட்டத்தி ணின்று
காலூன்றி நின்றபொழி யானந்தமுகிலொடு
　　கலந்துமதி யவசமுறவே
பண்ணுவதுநன்மையிந் நிலைபதியுமட்டுமே
　　பதிமாயிருந்த தேகப்
பவுரிகுலையாமலே கௌரிகுண்டலியாயி
　　பண்ணவித னருளினலே
விண்ணிலவுமதியமுத மொழியாதுமபொழியவே
　　வேண்டுவேனும் தடிமைநான்
வேதாந்தசித்தாந்த சமரசநன்னிலைபெற்ற
　　வித்தகச்சித்தர் கணமே."

**கருத்து.** எண்ணுதற்கரிதாகிய பிறவிகளுள் மனிதப்பிறவி எல்லாப் பிறவிகளினும் மிகவும் அரியது. இந்த ஜன்மந்தவறினுல் எந்த ஜன்மங் கிடைக்குமோ? என்ன அநர்த்தங்க ளுண்டாகுமோ தெரிகிறேன். (ஆதலால்) இடமகன்றபூமியில் நான் இருக்கும்பொழுதே திருவருளாகிய ஆகாய மண்டலத்தில் நிலைத்து நின்று இன்பமழையைப் பொழியாநின்ற மேகத்துடன் சேர்ந்து என் அறிவானது பரவசப்படும் செய்வது நன்மையாகும். இந்தநிலையில் அழுந்துகிறவரைக்கும் எனக்கு இடமாயிருந்ததேகமாகிய பவுரிக்கூத்துக்கலையாமல் கௌரியாகிய குண்டலிசத்தி என்கிறதேவியினது கிருபையினுல் சிதாகாசத்தில் நிலைபெற்றிருக்கிற சந்திரனிடத்திலுள்ள அமிர்தமானது இடையருதுபெய்ய உமதடிமையாகியநான் விரும்புவேன், என்றதாயுமானவர் வாக்கின்படி பெறுதற்கரியமானுடதேகம் பெற்றும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைவதற்குக் காரணம் இல்லறமாகையால் ஔவையும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்றும் பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் நான்கு

ஆச்சிரம வாசிகளுக்குள் கிருகஸ்தாஸ்ரமத்திலுள்ளவன் மற்றைய மூன்றாச்சிரமத்தையுடையவர்களுக்கும் உண்டி முதலானவைகளை க்கொடுத்து உபசரிப்பதற்கு மிகவும் உபயோகமுள்ளவனாதலால்,

" இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை."

இல்லறத்தோடுகூடி வாழ்வானென்று சொல்லப்படுவான், அற வியல்பினையுடைய ஏனைமூவர்க்கும் அவர்செல்லும் நல்லொழுக்க நெறிக்கண் நிலைபெற்ற துணையாம். என்னும்,

" துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான் றுணை."

சகலபற்றுக்களையும் விட்டுத் துறக்கப்பட்டார்க்கும், நல்கூர்ந்தார்க்கும், ஒருவருமின்றித்தான்பால் வந்திறந்தார்க்கும், இல்வாழ்வானென்று சொல்லப்படுவான் துணை, என்றும்,

" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலு னென்றாங்
கைம்புலத்தாறோம்ப றலை."

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார்; தானென்றுசொல்லப் பட்டஐந்திடத்துஞ்செய்யும் அறநெறியைவழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம் எனத்தெய்வப்புலமைதிருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தும் தாமேநடத்தியுங்காட்டினர். இவ்வாச்சிரமத்தையே சுருதி ஸ்மிருதி இதிஹாசாதிகளில் சொல்லியவண்ணம் குறைவறநடத்தினால் முக்தி என்னும் மோக்ஷ வீட்டையடைவதற்குச் சந்தேகமில்லை,

## இல்லற வியல்பு.

**இல்லறமாவது.** நற்குண நற்செய்கைகளையுடை மனைவியோடு கூடி தருமத்தைச் செய்தலாம். "இல்லறமல்லது நல்லறமன்று" என்றார் தெய்வப்புலமை ஔவையாரும் இல்வாழ்வான்என பான் வேதம் நான்கினுள் ஒன்றனையேனும் இரண்டினையேனும் மூன்றனையாகிலும் நான்கனையேனும்சந்தேகமற ஓதியறிந்து, ஆகமங்களையுஞ் சித்தாந்த சாஸ்திரங்களையும், மற்றையகலைகளையும் ஓதிமுடித்து ஆசாரியார்க்குத்தக்ஷிணைகொடுத்து அவரநுமதியுடன் தங்குலமுறைப்படி விவாகஞ்செய்து ஒழுகவேண்டும்.

விரதங்களை யநுட்டித்துச் சமாவர்த்தனம்பண்ணி, தான் வளர்த்தமயிர், நகம் இவைகளைக் களைந்து, விபூதி உருத்திராக்கம் பூமாலை, குண்டலம் என்னுமிவை தரித்து, மெலிந்தகோல்பிடித்து, குடையேந்தி, சந்திரன்போன்ற வெள்ளைப்பட்டு வஸ்திரமே தரித்தொழுகக்கடவன். தோளில் வண்ண வுத்தரீயமிட்டு, சிரசில் வெண்பட்டுச் சுற்றி, காலிற் செருப்பு மாட்டி, கமண்டலங் கைக்கொண்டு போதல்வேண்டும். கற்பியலும் அழகுகுண மாட்சிமையுங் கூடிய பெண்ணையே வேதாகமவிதிப்படி மணஞ்செய்க. மனைவி பூப்பெய்தின் விலக்கிய நாள்களிற் புணராமல் விதித்த நாட்களில் சற்புத்திரப்பேறு கருதிப் புணரக்கடவன். கேள்வி, அக்கினிகாரியம் ஒழியாமல் செய்து, வேதாகம வொழுக்கத்தில் நின்று, பஞ்சமகா யஞ்ஞங்களையுஞ்செய்க, இராசதரிசனம், தேவாலயதரிசனம், குருதரிசனமென்பவற்றைக் கைவிடக்கூடாது.

தான்செய்த பாவங்களை மறைக்காது சொல்லவேண்டும், யாவருக்கும் உபகாரஞ் செய்யவேண்டும். தந்தையெப்படி யொழுகினானோ அவ்வாறுதானு மிருத்தல் முறை. பின்னர், தெய்வம், விருந்து, சுற்றத்தார், தான் என்ற ஐந்திடத்தும் தருமஞ் செய்தல் தலைமையானதாகும். தானுண்பது இல்லையாயினும் விருந்தினோடு உண்க. இன்சொல், அடக்கம், செய்ந்நன்றியறிதல், நல்வழியிற் பொருள் சம்பாதித்தல, குலவொழுக்கம் போற்றல், உலகத்தாரோடொத்து நடத்தல், அன்புடைமை, தாய்தந்தையர்ப்பேணல், குருவாணைகடவாது ஒழுகல் இவைகளை யுடைமையாக் கொள்க. தீயனவெவற்றையும் செய்யாதிருக்கக்கடவன். பதினான்கு வித்தைகளையுங்கற்று, சிவபெருமானது திருவடியே கதியென்று தெளிந்து நடக்கவேண்டும் இங்ஙனம் நடப்போர் பிரமலோகத்தையடைந்து இறுதியிற் சிவகதியை யடையவர். இது சத்தியம்.

## இல்லறபேதம்.

கிரகஸ்தர் — அசாதகர், சாதகர், சூரதரர், கும்பதரர் எனநால் வகைப்படுவர். இவர்க்கு முறையே மூன்று கிரியை, ஆறுகிரியை, இரண்டு கிரியை, ஒருகிரியை, என்பனவிதிக்கப்பட்டன இவருட் சாதகராய கிருகஸ்தரே விசேஷ முடையார். அவர் கிரியை ஞானமிரண்டினு நிற்போர். தக்கமனைவியில்லா வழியில்லறம்நடவாது.

"மருவியகாதன் மனையாளுந்தானு
மிருவரும் பூண்டீர்ப்பினல்லா - லொருவரால்
இல்வாழ்க்கையென்னு மியல்புடையவான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று. என்றார்பெரியோர்.

நித்திரைசெய்யவேண்டியவிதி.—முறைப்படி இடதுபக்கமாகப் படுத்துக் காலைநீட்டிக்கொண்டு நித்திரை செய்தால் பஞ்சேந்திரியங்களினயர்வும் சரீரவருத்தமும் நீங்கி, இளைத்தமனதிற்கு உற்சாகமும் ஆயுள்விருத்தியு முண்டாம்.

முக்காடிட்டு நித்திரை செய்யும் விதி.—கேசாதிபாதம் வரைக்கும் வஸ்திரத்தால் மூடிக்கொண்டு நித்திரைசெய்யின் இரண்டுநேத்திரங்கட்கும் இரண்டுபுஜங்கட்கும் வன்மையுண்டாகும், அன்றியும் குளிர், மண், வெயில், தூசி, மேகம், இவைகளால்விளைகின்ற குற்றங்களணுகாதென்றறிக.

தோக்கண நித்திரை விதி.—தொக்கணத்தினால் இரத்தமானது சருமம் மாமிசம் ஆகிய சப்ததாதுக்களும் போஷணையாவதுந்தவிர, தேகபுஷ்டியுஞ் சுகநித்திரையும் புணர்ச்சியிலின்பமும் அதிகரிக்கும். வாதாதிக்கமும் உழைப்பினால் வந்தவருத்தமும் நீங்கும். தொக்கணம் என்பது குத்துதலும் தேகத்திக்கும் இதமாகப் பிடிப்பதுமாம்.

இராநித்திரைப்பங்க விதி.—இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்திமயக்கம், தெளிவின்மை, ஐம்புலச்சோர்வுபயம், அக்கினிமந்தம், முதலியநோய்கள் மெத்தவும் நம்பிக்கையாகத் தொடரும். அதுவுமன்றி வேடருடைய நாய்கள் கவ்வுதல்போல நித்திரையில்லாதவரைப் பற்பலநோய்கள் சூழ்ந்துகொள்ளும்.

"இந்திரற்கு நிதிசேரு மேமன் றனக்காயுள்
பிந்தா வருணன் பிரபலமா—மைந்தாகேள்
பொன்னின் குபேரன் பிணியாகு நித்திரைக்கு
முன்னுரைத்த திக்கே முயல்." என்றபடி,

சயனிக்குந் திசைகளின் விதி.—இந்திரதிக்கென்னும் கிழக்கில் சிரம்வைத்துப்படுத்தால் ஐஸ்வரியம் சேரும். எமன் திக்கென்னும் தெற்கில் சிரம்வைத்துப்படுத்தால் ஆயுள்விர்த்தியாம். வரு

ணதிக்கென்னும் மேற்கில் சிரம் வைத்துப்படுத்தால் பிரபலமும் கீர்த்தியும் உண்டாகும். குபேரதிக்கென்னும் வடக்கில் வியாதி சம்பவிக்குமாதலால் வடக்கில் சிரம் வைத்துப்படுக்கலாகாது. படுக்கும்போது கௌபீனமில்லாமலும், நிருவாணமாகவும் படுக்கலாகாது. இரவில் போஜனஞ்செய்த பிறகு நூறு அடி உலாவிப் பின்னர் நித்திரைசெய்வதே உத்தமம்.

## நித்திரைசெய்யும் பாய்களின் விதி.

தாழம்பாயில் சயனிப்பவர்களுக்குத் தலைச்சுழற்றல் பாண்டு ரோகம் பித்ததோஷம் நீராமைக்கட்டி வெகுமூத்திரம் இவைகள் விலகும்.

கோரைப்பாயில் சயனிப்பவர்களுக்கு அக்கினிமந்தமும் சுரதோஷமும்நீங்கும். தேகக்குளிர்ச்சியுமுண்டு, சுகநித்திரைவுண்டாகும்.

சாதிப்பாயில் அதாவது பிரப்பம்பாயில் சயனிப்பவர்களுக்கு மூலரோகம், சீதமலம், சீதசுரம், சிரோரோகம் இவையுண்டாகும்.

பேரீச்சம்பாயில் சயனிப்பவர்களுக்கு வாதகுன்மமும், சோகையும், நீங்கும்; பசி, பாண்டு, உஷ்ணதிக்கம் உண்டாகும்.

சிற்றீச்சம்பாயில் சயனிப்பவர்களுக்கு அதிகவுஷ்ணம், தேகவுளைவு, கபசினம் இவையுண்டாகும்.

மூங்கிற்பாயில் சயனிப்பவர்களுக்கு மூத்திரகிரிச்சினம்,உஷ்ணபித்தம் ஆகிய இவைகள் மேலும்மேலும் விருத்தியாகும்.

பனையோலைப்பாயில் சயனிப்பவர்களுக்கு அதிக உஷ்ணமும் வாதநிக்கிரகமும் உண்டாகும், சற்றே பித்தமும் விளையும்.

"இலவின்பஞ்சுப் படுக்கைக் கேகுமன வெல்லா
மலர்பருத்திப் பஞ்சுமா வணையோ—உலவிருத்தம்
விந்திவைகளைப் பெருக்கு மேல்விரக மூண்டாக்குங்
குந்துசுரத் தையமழக்குங் கூறு.

இலவம்பருத்திப் பஞ்சணையின் விதி —"இலவம்பஞ்சிற்றுயில்" இலவம்பஞ்சு படுக்கையால் உட்சூடு நீங்கும், பருத்திப்பஞ்சு மெத்தையிற் படுப்பவர்களுக்கு இரத்தம், விந்து,காமசுரம் இவைகள் விருத்தியாகும்.

"பஞ்சவன்னஞ் சேர்கம்பளத்துறுஞ் சலவைதோடம்
விஞ்சிடும் பித்தந்தாது விர்த்தியு முண்டாஞ்சீத
மஞ்சிடுங் கோபவைய மலந்திடும் பாண்டுவோடு
நஞ்சுசு ளெல்லாந்தீரு நலம்பெறு முஷ்ணமாமே."

இரத்தினக்கம்பள நித்திரை விதி.—வெள்ளை சிவப்பு, மஞ்சள், பச்சை, கறுப்பு என்னும் ஐந்துநிற ரோமங்களால் செய்த ரத்தினக் கம்பளத்தில் நித்திரை செய்பவர்களுக்கு சீதளதோஷம் குளிர், பாண்டு, வீக்கம், பித்தம் இவைகள் நீங்கும். சுக்கிலதாது உஷ்ணம் அதிகரிக்கும்.

சகலாத்துப் போர்வை விதி.—சகலாத்துப் போர்வையுடன் நித்திரை செய்பவர்களுக்குச் சுரம், குளிர் பனி முதலானவைகள் நீங்கும். வர்ணங்கள் சேர்ந்த சகலாத்திற்கு அற்ப உஷ்ணம்.

மலரணை விதி.

"தீபாக் கினிதலையுந் தின்றமருந் தாலெழுந்த
தாபாக் கினியுந் தலையுங்காண்—யாபார
நட்புவரும் விந்தூறும் நாளுமுட லுஞ்செழிக்கும்
புட்பணைக் கென்றே புகல்."

நித்திரை செய்யலாகாத காலம்.—பகற் காலத்தும், சிவராத்திரி முதலிய விரததினத்து இரவினும், விரததினத்துக்கு அடுத்த நாளினும், பிராதக்காலத்தினும், போசனஞ் செய்த உடனும், கிரகணகாலங்களிலும், அத்தோதய மகோதய காலங்களினும், வீட்டிற் பிணமிருக்கும் காலத்தும், நித்திரை பண்ணலாகாது. "நாளுங்கிழமையு நலிந்தோர்க்கில்லை" என்ற ஆன்றோர் வாக்கின்படி நோயாளர்க்கு இவ்விதிகளேற்கா.

மல்லிகை, முல்லை முதலிய புட்பவணையில் நித்திரை செய்பவர்கட்கு பசி, போகத்திலிஷ்டம் சுக்கிலவிர்த்தி, சரீரம் செழித்தல் இத்தகைய நற்குணங்களு முண்டாகும். மந்தத்தினாலுண்டாகிய வெப்பமும் நீங்கும்.

## சாலையில் நித்திரைவிட்டு நீங்குதல்.

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்டமுறை."

கருத்து.—பொழுதுவிடிவதற்குமுன் படுக்கையி னின்றெழுந்து, ஒருவன் தான் செய்யவேண்டிய தருமங்களையும், பொருள் தேடும் உபாயத்தையும் ஆலோசித்துத் தந்தைதாயாரை வணங்கிப் பிறகு காரியத்திற்கு செல்லக்கடவன் என்பதாம்.

"வைகறைத் துயிலொழி" சூரிய உதயத்திற்கு ஐந்து நாழிகைக்குமுன், அல்லது சூரிய உதயத்திற்கு முன் அரைஜாமத்தில் அடங்கிய பிராமம், ரௌத்திரம் என்னும் இரண்டு முகூர்த்தங்களில் பிராம முகூர்த்தத்தில் நித்திரைவிட்டெழுந்து தனக்கு இதத்தைமுன்னும், பின்பு தருமத்தையும், அதற்குவிரோதமின்றி அர்த்த காமங்களையும் சிந்தித்துத் தந்தைதாயாரை வணங்கி வேதத்தின் திரண்டபொருளான பரமாத்மாவைத் தியானித்தல்வேண்டும்.

**காலையில்நித்திரைவிட்டு நீங்குவதின்பலன்.**—உதயகாலத்தில் விழிப்பவர்களுக்குப் புத்திக்குத் தெளிவையுணர்த்து இன்றி சுத்தநரம்பு என்னும் ஒருவித நரம்பினது துவாரத்தினிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாயிருக்கும். பயித்தியம் கோபம் நீங்கும்.

**விழித்தவுடனே ஜலமருந்தலின் குணம்.**—நித்திரைசெய்து விழித்தவுடனே சுத்தோதகமென்னும் நீராகாரம் அல்லது தாக சாந்தி ஏதேனும் ஒன்றைப்பிராமணமாகப்பருகில் பயித்தியதோஷம் விலகும். அன்றியும் மலஜலபந்தங்களும் நீங்கும். வாதம் மூதலிய மூன்றுதோஷங்களும் தத்தம் நிலைகளிற் சஞ்சரிக்கும்.

**விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள்.**—"கண்ணாடிபித்தன் கருங்குரங்கு காட்டானை, மண்ணாளும் வேந்தனோடைந்து" நித்திரைசெய்து விழித்தவுடனே தாமரைப்புஷ்பம், தங்கம், தீபம், கண்ணாடி, சூரியன், புகையொழிந்த நெருப்பு, சந்தனம், கடல்,

வயல், சிவலிங்கம், முகில்சூழ்ந்தமலை, கன்றையுடைய பசு, தமது வலக்கை, மனைவி, மத்தளம் இவற்றுள்ளேதேனும் ஒன்றைப் பார்க்கில் உத்தமம். விழித்தவுடன் கண்ணாடியைப்பார்ப்பதினால் வீரியவிர்த்தியும், மகிழ்ச்சியும், சகலவசியமும், ஞானமும் கூடும்.

**பார்க்கத்தகாத வஸ்துக்கள்.**—அங்கவீனம், வஸ்திரவீனம், காவிவஸ்திரம், கிரகசங்கை, கூன், ஊமை, மொட்டைத்தலை, அழுகை, சண்டை, விரிந்த மயிர்த்தலை, அழுக்குமேனி, ஸதாநித்திரை, வியாதியஸ்தர், எண்ணெய்த்தலை, மனோவியாகுலம், உன்மத்தம், தரித்திரி, க்ஷயரோகம், ஆசூசம், இவைகளை யுடையவர் முகத்தையும், விதவா ஸ்திரீ பாம்பு, பூனை, சாம்பல், எருமை, விளக்குமாறு, உலக்கை, முறம், இவைகளையும் பார்த்தால் அன்றைக்குக்கெடுதியும், அசவுக்கியமும் உண்டாகும்.

**மலஜல நிவர்த்தி.**—நித்திரைவிட்டு எழுந்தவுடனே "காலையுபாதிமலஞ் சலமாம்" என்கிறபடி மலஜலபாதையை நிவர்த்திக்க வேண்டியது பெரியவேலை. பகலில் இரண்டு சந்தியாகாலங்களிலும் (காலைமாலைகளில்) வடக்குமுகமாயும். இரவில் தெற்குமுகமாயும் இருந்து நிவர்த்திசெய்ய வேண்டும் "பகற்றெற்கு நோக்கா பிரா வடக்கு நோக்கார்" பகலில் தெற்கு முகமாகவும் இரவில் வடக்கு முகமாயும் இருந்து மலஜலங் கழித்தல் செய்யலாகாது. சூரியன், அக்கினி, பசு, வாயு, பிராமணன ஆகிய இவர்களுக் கெதிரிலும், மறைவிடங்களிலும் நிவர்த்தி செய்யின் ஆயுளும் சம்பத்தும் க்ஷீணமாகும்.

"புற்பைங் கூழாப்பி சுடலை வழிதீர்த்தந்
தேவ குலநிழ லானிலை வெண்பலியென்
றீரைந்தின் கண்ணு முகிழ்வோ டிருபுலனுஞ்
சோரா ருணர்வுடையார்."

**கருத்து.**—அறிவுடையோர் புல்லுள்ள இடத்திலும், பயிருள்ள நிலத்திலும், சாணத்தின் மேலும், சுடுகாட்டிலும், போக்குவரவுக்குரிய மார்க்கத்திலும், தீர்த்தமுள்ள இடத்திலும், தேவாலய இடங்களிலும், நிழலுள்ள இடத்திலும், பசுக்கள் நிற்குமிடத்திலும், சாம்பலிலும் ஆகிய இப்பத்திடத்திலும் மலஜலங் கழியார்,

நந்தவனம், மாட்டுத்தொழுவம், மலை, புற்று, மரத்தின் அடி, படிக்கட்டு, மேடு, பள்ளம், ஜந்துக்கள்வசிக்கும் நிலப்பிளவுஇவ்வி டங்களிலும், நடந்துகொண்டும், நின்றுகொண்டும், மலஜலங்களைக் கழிக்கலாகாது. அமேத்தியம், சிறுநீர், செந்நீர், நஞ்சு இவைகளை உண்ணீர்க்குதவும் சுத்த ஜலத்திலும், பொதுவான நீர்நிலைகளிலும் போடப்பட்டது.

தந்தசுத்தி —முதலில் கைகால் முகங்களை அலம்பிக்கொண்டு கைப்பு, துவர்ப்பு, காரம், பரிமளம், முட்கள், பால், இவைகளையு டைய மரங்களில் பற்கொம்பு கிரகிக்கவேண்டும்: பிராம்மணருக் குப் பன்னிரண்டும், க்ஷத்திரியருக்கு ஒன்பதும், வைசியருக்கு, ஆறும், சூத்திரருக்கு நாலுமாகிய அங்குலநீளமுள்ளதாயும், சுட்டு விரற் கனமுள்ளதாயும் இருக்கவேண்டும்.

"வேலுக்குப் பல்விறுகும் வேம்புக்குப் பற்றுலங்கும்
பூலுக்குப் போகம் பொழியுங்கா—ணுலுக்குத்
தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி
கண்டால் வசிகரமாம் காண்."

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்கிறபடி கருவேல் குச்சியி ஞல் பற்களுக்குறியும், வேப்பங்குச்சியினல் பற்களுக்கொளியும், நீர்பூலாக்குச்சியினல் வீரியவிருத்தியும், ஆலம் விழுதினல் இல க்ஷமிகடாக்ஷமும், நாயுருவிவேரினல் முகவசீகரமும் உண்டாகும்.

"கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம்-பல்லதனைத்
தேய்த்திடுவா ராமாயின் சேராளே சீதேவி
வாய்த்திடுவாள் மூதேவி வந்து."

செங்கல்மா, மணல், மண்ணாங்கட்டி, சாம்பல், தென்னம்பாளை, வைக்கோல், ஓடு, கடம்பு, புங்கு, பச்சிலை, செங்குங்கிலியம், வாழை, தேவதாரு, புல், பருத்தி, நொச்சி, முருங்கை கீரைகள். இவைகளால் தினமும் தெற்குமுகமாக நின்றுகொண்டு பல்துல க்குமவரிடத்தில் மூதேவி வந்து சேர்வள்.

ஸ்நான தீர்த்த வகை.—ஸ்நானஞ்செய்தற்கு வகுத்த தீர்த்தங் கள் ஏழு, அவையாவன-பிரமதீர்த்தம், பாவகதீர்த்தம், மாருததீர்த்

தம், திவ்வியதீர்த்தம், வாருணதீர்த்தம், மானததீர்த்தம் என்பனவாம். அவற்றுள் தருப்பைநீரிலேமுழுகிச் சீரமுழுவதுந்தடவல் பிரமதீர்த்தமாகும். வெண்ணிற விபூதிகொண்டு உடல்முழுவதுந் தரித்தல் பாவகதீர்த்தமாகும். பசுவினது பாதப்பொடியிற்றோய்தல் மாருததீர்த்தமாகும். வெயிலெறிக்குங் காலத்திற் பெய்யும் மழையின் முழுகல் திவ்வியதீர்த்தமாகும். தடாகம் ஏரியிவற்றின் மூழ்குதல் வாருணதீர்த்தம் எனப்படும். மெய்ஞ்ஞானமாகிய சிவஞானாக்கினியின் முழுகல் மானததீர்த்தம். இவற்றுளொன்றனிற் றங்கள் தங்கள் சுகாதாரத்திற்கேற்பவுங் காலத்திற்குத் தக்கபடியும் முழுகல் வேண்டும்.

விசேட தீர்த்தங்கள்.—கங்கை,யமுனை,நருமதை,சிந்து,சோணநதி, துங்கபத்திரை,காவிரி,சரஸ்வதி என்பனவன்றி,பிரமதீர்த்தம், குருக்கள்தீர்த்தம், கோகன்னம், சித்தவாசம், மதுவனம்,கன்னியாகுமரி, சோமம், விசுவம், விரசை, மகாகாளம், வையை, கனகலம், கோதாவிரி, வைதரணி,சித்திரநதி,வியாகம்,பிருதுதுங்கம், கவுசிகம், கனகநந்தை, தசாச்சுவமேதம்,மாதுங்கம், சுவாமீயம், சுழுமுனை, புண்டரீகம், கரானனம், குபேரதுங்கம், பஞ்சநதி, திரிவேணிசங்கம்,பாவநாசம், சொர்ணவதி, சுரவதானம், காலசர்ப்பி, மானசவாவி, கேதாரம், அசுவம், மாகாளம்,மோக்கபிரிட்டம்,தன்மம், புருடை, சாளக்கிரமம் முதலிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வோர் இம்மை மறுமைப்பயன்களைக்குறைவறப்பெற்றுவாழ்வர்.

ஸ்நான விதி.—பிராதக்காலத்தில் ஒவ்வொருவரும் தம்சரீரஞ் சுத்திசெய்வதற்காக நதி, ஆறு, மடு, குளம், கிணறு, ஏரி முதலானவைகளில் ஒன்றில் நீராடவேண்டும், அது இராத்திரியில் செய்தபாவங்களையும் துர்ச்சொப்பனமுதலான தோஷங்களையும் நீக்கி இகத்திலும் பரத்திலும் பலனைத்தரும்.

ஒருவன் வெட்டிய தடாகத்தில் வேறொருவன் ஸ்நானஞ்செய்தால் ஸ்நானஞ்செய்தவன் தன்பலனை இழந்து தடாகத்தைவெட்டினவனுக்கு அல்லது சொந்தக்காரனுக்கு அவனுடைய புண்ணியங்கள்சேரும். ஆகையால் ஸ்நானஞ்செய்பவன் முதலாவது மேற்படி குளக்கரையிலிருந்து தன் இரண்டு கைகளினாலும் ஐந்து கைம்மண் வெளியே வாரிப்போட்டு இறங்கி ஸ்நானஞ் செய்வானால் இழக்கும்பலனை அடைவான் என்றும் ஸ்மிருதிகள் முறை

யிடுகின்றன நீராடும்பொழுது வஸ்திரமின்றி ஸ்நானம் செய்தல் உடுத்தவஸ்திரத்தைத் தண்ணீரில் பிழிதல், ஜலத்தில் தன்னிழலைப்பார்த்தல், நீந்தல் எச்சிலுமிழ்தல் ஜலத்தைக்குடைந்து கலக்கல், இவைமுதலானவைகள் செய்தலாகாது. கண்டஸ்நானம் செய்வதைப்பார்க்கிலும், ஸ்நானஞ் செய்வதே உத்தமம்.

நம்முடைய சரீரத்தின் மெல்லியதோலின்மேல் கண்ணுக்குப் புலப்படாத எண்ணிறந்தசிறுதுவாரங்க ளமைந்திருக்கின்றன. இத்துவாரங்களில் இரண்டுவகையுண்டு. ஒன்றுக்குச் சுவேததுளையென்றும் மற்றொன்றுக்கு நிணத்துளையென்றும் நாமங்களாம். இவைகளின் மூலமாய்த் தேகத்தினுட்பாகத்தின் விஷநீர்கள் வியர்வை நிண கல்மிஷம் இவைகள் கழிந்துபோகின்றன. இக்காரணங்களினால்தான் பிரதிதினமுங் குளித்து முழுகித் துவாரங்கள் அடைந்துபோகாதபடி வைக்கவேண்டும். இவ்விஷயத்தைக் கருதாதவர்களுக்கு மேற்மடி கோளங்கள் அடைப்பட்டுத் தேகக்கழிவுதங்கி உட்கிச்சொரி,சிரங்கு,கட்டிகள்,குளிர்காச்சல்உண்டாகும். இவ்வாறான வியாதிகட்கு தோலொட்டிய ரோகமென்றுபெயர்,

இவை நிமிஷந்தோறும் சரீரத்தினுட்பாகத்திலுள்ள தேகக் கழிவுகளை வியர்வையால் வெளிப்படுத்துகின்றன.

நிணகோளத் தொழில்.—இதுதேகம்வரண்டு வெடித்துப் போகாமல் இடைவிடாமல் கசிந்து தோலை ஈரப்படுத்திக்கொண்டுவருகிறது. இச்சுவேதக் குழல் இல்லாமல் அடைப்பட்டோரின் தேகம் வெடித்து இரத்தம் வடியுமென்பதே சாக்ஷி.

சாதாரணமாய் ஜனங்கள் அதிகாலையில்(சூரியன் உதயமாகிறதற்குமுன்)ஸ்நானம் செய்ய வேண்டும். அதாவது: தேகபலமுள்ளவர்கள் ஆகார முட்கொள்ளாமல் ஸ்நானஞ் செய்யலாம்.பல ஈனர்கள் இலேசான வுணவுகளைப் புசித்து (நொய்க்கஞ்சி, கோதுமை அப்பம், காப்பி, தேத்தண்ணீர்) ஸ்நானம் செய்ய வேண்டும். அப்படிச்செய்யாவிடில் ஸ்நான நேரத்தில் இளைப்பும் ஆயாசமும் சம்பவிக்கும். அதிக தேக இளைப்புள்ளவர்கள் வியர்வை வற்றும் வரையும் பொறுத்து,பிறகு குளிர்ந்த ஜலத்தில் குளிக்கவேண்டும். வயிறு நிரம்பப் போஜனஞ்செய்த பிறகு ஸ்நானஞ்செய்தால் உண்டபோஜனம் அஜீர்ணப்படும். அவை ஜீரணமாயினும் பல வியாதிகளைத்தரும்.

குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்ய முயன்றால் 12-நிமிஷத்திற்குள் மூழுகி முடிக்கவேண்டும். நெடுநேரஞ் செய்தால் சரீரஞ் சிலிர்த்து இரத்த ஓட்டம் நின்று திமிர் ரோகமுண்டாகும்.

சரீரத்தின் அழுக்குப்போகக் குளித்தவுடன் முதலாவது ஈரம் இழுக்கத்தக்க மிருதுவான துணியால் துடைத்துவிட்டு மார்பு, கும்பி, அரை, கழுத்து இவைகளை முரட்டுத் துவாலையினால் 4-அல்லது 5-நிமிஷம் வரையில் தேகத்தில் தோல் சிவக்கத் தேய்க்கவேண்டும். அப்படிச் செய்தால் சரீரத்தில் ஒருவித அனல் உண்டாகி ஆனந்தமாயிருக்கும்.

## விபூதி மான்மியம்.

சைவசமயமரபில் பிறந்தவர்கள்யாவரும் தினந்தோறும் சூரியோதயத்திற்கு ஐந்துநாழிகைக்கு முன்னாவது, இரண்டரைநாழிகைக்கு முன்னாவது நித்திரைவிட்டெழுந்து புறத்தேபோய் மலஜலங்கழித்து, ஸௌசம்பண்ணி உட்கார்ந்து தந்தகாஷ்டத்தினால் தந்தசுத்திசெய்து முகங்கழுவி சிவ சிவ சிவ என்று மூன்றுதரம் ஜெபித்து நெற்றியில் விபூதி தரித்தல் வேண்டும்.

**விபூதி சேகரிக்கும் விதி.**—நல்ல அழகையுடைய பசுவின்சாணத்தைப் பூமியில் விழாதபடி யெடுத்துருட்டி உலர்த்தி வெண்மையாக்குந் தன்மையுடைய உமி முதலியவற்றால் நன்குமூடி அக்கினியினாலே தகித்தலால் உண்டாகிய திருநீறு விபூதிஎனப்பெயர் கருநிற விபூதி-செந்நிற விபூதி,புகைநிற விபூதி,பொன்னிறவிபூதி, இவைகளை நீக்கி வெண்ணிறவிபூதியை மாத்திரம் சுத்தமான வஸ்திரத்தினாலே வடித்தெடுத்துப் புதுப்பாண்டத்தினுள்ளிட்டு, மல்லிகைமுல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை அதனுட்போட்டுச் சுத்தமான வஸ்திரத்தினால் அதன் வாயைக் கட்டி வைத்துக்கொண்டு வேண்டும்போது பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது, சுரைக்குடுக்கையிலாவது எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். குடுக்கைகளினுள்ள விபூதியைக் கழிக்கலாகாது.

**விபூதிவாங்கும் விதி.**—ஆசாரியராயினுஞ் சிவனடியாராயினும் விபூதிதந்தால் அவர்களை மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயி

னும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு முன்போல மீட்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

பரிதினி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையி லிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந்தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றாலும்விரன் மூன்றாலும் வாங்கினுந்
திகழ்தம் பலத்தினோடும்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநில மானவதிலு
மங்கே தரிக்கினுந் தந்திடிற் கொள்ளினு மவர்க்குநர
கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநாய கிதனை
மணந்துமகிழ் சகநாதனே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

**கருத்து.**—வாகனத்தின் மீதிருந்தும், பல்லக்குமீதிருந்தும், ஆதனத்தின்மீதிருந்தும், வெளியிலிருந்தும், திண்ணையிலிருந்தும், விபூதிகொடுப்பவர் கீழ்நின்று கொடுக்கில் மேனின்று வாங்கிடினும், இலக்ஷியமில்லாமல் ஒருவகை அல்லது மூன்று விரலினால் வாங்கிடினும், தம்பலம் தின்றுகொண்டு வாங்கிடினும் நடக்கின்ற போது வாங்கிடினும், அசுத்தமான விடங்களினின்று வாங்கித் தரித்திடினும் ரௌரவாதி நரகத்தையடைவர் என்பதாம்.

**விபூதிதரிக்கும் விதி.**—விபூதியைத்தரிக்கும்பொழுது வடக்குமுகமாக வேனும், கிழக்குமுகமாக வேனும் இருந்து தரித்தல் வேண்டும்.

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத்துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதி லொழுக

நித்தமு விரல்களா னெற்றியி னழுந்தலுற
நினைவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமல னங்கே
சத்தியொடு நித்தம்வினை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந்திரு
சஞ்சலம் வாராதுபர கதியுதவு மிவரையே
சத்தியஞ் சிவனென்னலாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான்மருக ஞானமுருகா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே.

**கருத்து.**—விபூதியை அதிபத்தியோடு சிவ சிவ சிவ என்று சிவநாமத்தை மூன்று முறையுச்சரித்து விபூதியை அன்புடன் வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் எடுத்துப் பூமியின்மீது சிந்தா வண்ணம் அண்ணாந்து செவியோடு செவிவரையில் பயமீது ஒழுகும்படி நெற்றியிலழுந்தப் பிரதிதினம் மூன்றுவிரல்களால் தரிப்பவர்கட்கு முற்பிறப்பிற்செய்த வினைகள் சாயைபோல் தொடர்ந்திருக்கினும் யாவையும் நீக்கிப்பரிசுத்ததேகமாக்கிப் பரமன் சத்தியோடு நித்தமு நீங்காமல் விளையாடிக்கொண்டிருப்பன் முகத்தில் இலக்குமி திருநடனம்புரிந்துக் கொண்டிருப்பாள் எவ்வித சஞ்சலமும் வராமற்காத்துக் கடைசியில் பரகதிக்கு ஆளாக்குவர்.

பூமியின்கண் சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்தத் தலத்தைப் பசுவின் சாணத்தினாற் சுத்திசெய்ய வேண்டும்.

வெண்மைபொருந்திய விபூதியைத்தரிப்பதே விபூதிமகாத்மிய வியாதியாகும்: அங்ஙனம் அதிபத்திசிரத்தை, விஸ்வாஸமுடன் தரிப்பவர் நற்கீர்த்தியும், அதி ஐஸ்வரியமு மடைவதுந்தவிர இகத்தில் பெரியோர்கள் சகவாசமும் பரத்தில் மோட்சஸாம்பிராச்சியமுமடைவது உண்மை.

விபூதியை நெற்றியில் பொட்டாகவும், சதுரமாகவும், சூலமாகவும், தலைநடுங்கிக்கொண்டும், தலை கவிழ்த்துக்கொண்டும், ஒருவிரலாலேனும், ஒருகையாலேனுந் தரிக்கலாகாது, நன்றாய் வேகாத விபூதியும், வெந்து கரிந்த விபூதியும், சிவந்த விபூதியும் தரிக்கலாகாதென்பது சிவாகம விதி.

விபூதியைச் சண்டாளர்முன்னும், பாவிகண்முன்னும் அசுத்த நிலத்தும், வழிநடக்கும்போதும், கிடைக்கும்போதுந் தரிக்கலாகாது.

சந்தியாகால மூன்றினும் சூரியாஸ்தமனத்தினும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்திற்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசலவிமோசனஞ்செய்து சௌசம்பண்ணி ஆசமித்தபின்னும், தீக்ஷையில்லாதவர் தீண்டியபோதும், பூனை, கொக்கு, எலி முதலியன தீண்டியபோதும், விபூதி அவசியந் தரித்தல் வேண்டும், "நீறில்லா நெற்றிபாழ்," விபூதி தரியாதவருடையமுகம் சுடுகாட்டுக்குச் சமமாகும், ஆதலினால் விபூதிதரித்துக்கொண்டே வெளியிற் புறப்படவேண்டும்.

**விபூதி தாரணவிதி.**—திரிபுண்டரம், உத்தூளனம், என இரண்டுவகை.

**திரபுண்டரந் தரிக்கும் விதி.**—திரிபுண்டரமென்னும் முக்குறியை வளையாமலும், இடையறாமலும், ஒன்றை ஒன்று தீண்டாமலும், மிக அகலாமலும், தன்வலக்கை நடுவிரல், ஆட்காட்டிவிரல், மோதிரவிரல் இவைகளால் ஆறங்குல நீளமாவது அல்லது ஆறங்குலத்திற்குக் கொஞ்சமதிகமாகவாவது இரண்டு கடைக்கண் வரையிலாவது நெற்றியிற் பிரகாசமாகத் தரிக்கவேண்டும்.

**திரிபுண்டரந் தரிக்குந் தானங்கள்.**

உச்சி நெற்றி மூக்குரங்கள் முபயகையுறுப்பா
நிச்சுவற் புறமிருவிலா விடைப் புறமென்னப்
பச்சிமப் பிறையணிந் தவற்பணிந்து மூவைந்தா
விச்சைமே லவர்நீற்றொளி விளங்கிடத் தரிப்பார்.

கருத்து.—மெய்ஞ்ஞானமுடையவர்கள் உச்சி, நெற்றி, மூக்கு, மார்பு, கொப்பூழ், புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, கழுத்து, கழுத்தின்பின்புறம், விலாப்புறம் இரண்டு, இடுப்பின் பின்பக்கம் என்று சொல்லும் பதினைந்திடங்களினும் இளம்பிறையணிந்த சிவபிரானைத்தொழுது திருவெண்ணீற்றின் ஒளி பிரகாசிக்கத் தரிப்பார்கள்.

**திரிபுண்டரந்தரிக்கும் அளவு விதி.**—நெற்றியிலிரண்டுகடைப் புருவவெல்லை நீளமும், மார்பினும் புயங்களினும் அவ்வாறங்குல

நீளமும், மற்றைத்தானங்களில் ஒவ்வோரங்குல நீளமும் பொருந்தத் தரிக்கவேண்டும் இவ்வெல்லையிற் கூடினுங் குறையினுங் குற்றமாம்.

தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினுஞ் சலத்திற்குழைத்துத் தரிக்கலாம், மற்றக்காலங்களிற் சலத்திற் குழையாமலே தரிக்கவேண்டும், தீக்ஷையில்லாதவர் மத்தியானத்துக்குப் பின் சலத்திற் குழையாமலே தரிக்க வேண்டும்.

இல்லலத்தான் முக்காலத்திலும் ஜலஞ்சேர்ந்த பஸ்மத்தாலும், ஸ்திரீகளும் சந்நியாசிகளும் ஜலஞ்சேராத பஸ்மத்தாலுந் திரிபுண்டரந் தரிக்கவேண்டும்.

**உத்தூளன விதி.**—பஸ்மத்தை யெடுத்துத் தேக முழுதும் பூசிக்கொள்வது உத்தூளனம் எனப்படும்.

**அசக்தர்கட்குப் பரிகாரம்.**—வியாதியினால் ஸ்நானஞ்செய்யமாட்டாதவர்கள் கை, கால் கழுவி, ஈரவஸ்திரத்தினால் உடம்பெங்குந்துடைத்து உலர்ந்த சுத்தவஸ்திரத்தினால் ஈரந்துவட்டி, கிழக்குத் திக்குநோக்கி, சிவ நாமத்தை யுச்சரித்து நெற்றியிற் விபூதியிட்டு, வேறு உலர்ந்தசுத்தவஸ்திரந்தரித்து ஆசமனஞ்செய்து அநுட்டானஞ்செய்யவேண்டும். அதுவுஞ் செய்யமாட்டாதவர்கள் நெற்றியில் விபூதியிட்டுச் சிவ பெருமானைத் தியானித்துச் சின் முத்திரையணிந்து சிவமூலமந்திரத்தைமனத்திற் சிந்திக்க வேண்டும்.

**மாதர்களநுட்டிக்கும் விதி.**—வீட்டுக்கு விலக்காயுள்ளபெண்கள் மூன்றுநாளுஞ்சென்று நான்காவது நாள் அப்பியங்கன ஸ்நானஞ்செய்தபின் தோய்ந்து உலர்ந்தசேலை உடுத்தி அநுட்டானம் பண்ணிச் சத்தியோசாதமந்திரத்தை நூறுஜெபிக்க வேண்டும். இது ஒவ்வொரு ஸ்திரீகளுக்கும் அடுத்தமுறை. இவ்விதமாக அநுசரிப்பதே இல்லற தருமமாம்.

### விபூதிமகிமையால் ஓர்பிரம்ம ராக்ஷசன் மகாபாதகங்களி னின்று விடுபட்டு நற்கதியடைந்தானென்பதைப் பின் வருஞ்சரித்திர முணர்த்துகிறது.

கடலால் சூழப்பெற்ற பெரியவில்வுலகத்தில் பிரகாசிக்கின்ற பற்களையுடையவனும், ஒப்பற்ற வல்லமையுடையவனும், பாதகமே தன்சரீரத்திற்குக் கவசமாகத் தரித்திருப்பவனும், யாவராலுந்

தோல்வியடையாதவனும் கோபத்தினலிதழைக்கடித்த வாயை யுடையவனும், யமனுங்கண்டு பயப்படும்படியானவனுமான ஓர் பிரம்மராக்ஷசனிருந்தான். அவன் தன்கையிற் பிடித்திருக்கும் தண்டாயுதமொன்றினுல் திரிலோகத்தையும் நடுங்கச்செய்து நில வுலகத்திலுள்ள உயிர்களனைத்தையும் அழித்துவந்தனன்.

ஒருக்கால் வாமதேவரென்னும் முனிவர் அவனிடத்தில்வந்த மாத்திரத்தில் அழகிய திருவெண்ணீற்றின் பிரகாசம் அவரது திருமேனியிற் கலந்திருப்பதைக்கண்டு அவருடைய தாமரைமல ரைப்போன்ற திருவடிகளே அடைக்கலமென்று அவரைப்பணிந்து களிப்புண்டாகத் தழுவிக்கொண்டு அவர்திருமேனியிலிருந்த திரு நீற்றினழகைத் தனது சரீரத்தினு லொற்றிக்கொண்டான். அம் முனிவர் பிரானுடைய திருவெண்ணீற்றினழகு தனதுசரீரத்தில் பொருந்தியபிறகு மகாபாதகங்களினின்றும் விடுபட்டவனுய், பரி சுத்தமான திவ்யதேகம் பெற்றுப் பெறுதற்கரிய பெருங்கதியை யடைந்தான்.

## உருத்திராக்க மான்மியம்.

**உருத்திராக்க உற்பத்தி வரலாறு.**—உருத்திராக்கமென்பது சிவனுவடய நேத்திரம் எனப்பொருள். திரிபுரத்தவுணர்களால்வ ருந்திய பிரம்மன் முதலிய தேவர்கள் சிவபிரானைநோக்கி அருந்த வஞ்செய்கையில் சிவபிரானெழுந்தருளி வியப்புற்று ஆயிரவருடம் உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். அவ்வாறு கண்களிமையாது நோக்கிய காரணத்தால் அவர் வலக்கண்ணினின்று பன்னிரண் டும், இடக்கண்ணினின்று பதினைன்கும், நெற்றிக்கண்ணினின்று பத்துமாக நீர்த்துளிகள் சிந்தின. ஆக முப்பத்தாறு (36) நீர்த்துளி களும் விருக்ஷங்களாகத்தோன்றின. அவற்றின் காய்களே உருத் திராக்கமணிகளாயின அம்மணிகள் செம்மை, வெண்மை, கருமை, பொன்மை, என நான்குவிதநிறங்களுள்ளன.

**வர்ணபேதம்.**—அவைகளில் வெண்மை, பொன்மை, பிரா மணஜாதி என்றும், செம்மை க்ஷத்திரியஜாதி என்றும், செம்மை யும் வெண்மையும் கலந்த நிறமுள்ளவை வைசியஜாதி என்றும், கருமை நிறமுள்ளவை சூத்திரஜாதி யென்றும் கூறுவார்கள்.

இலக்ஷணக் குறிப்பு.—ஒருமுகமுள்ளது சிவசொரூபம்; இதை யணியில் பிராமணஸ்திரீயைக் கொலைசெய்த பாதகத்தை யொழிக்கும். இரண்டு முகமுள்ளது சிவசத்தி சொரூபம்; இது பல கோஹத்திகளை யொழிக்கும். மூன்றுமுகமுள்ளது அக்கினி சொரூபம்; இது ஸ்திரீஹத்தியை யொழிக்கும். நான்கு முகமுள்ளது பிரமதேவசொரூபம்; இது தீயநரகத்தினின்று மீட்கும். ஐந்து முக மூள்ளது காலருத்திர சொரூபம்; இது தகாத புசிப்பும், இன்ப மில்லாத புணர்ச்சியினாலுண்டாகும் தோஷத்தையுமங்ஙனே போக்கும். ஆறுமுகமுள்ளது சிவ சுப்பிரமணியக் கடவுள் சொரூபம்; இது வலக் கரத்தில் தரிக்கத்தக்கது, விதவைகள் முதலிய ஸ்திரீகள் சோரத்தினாற்பெற்றசிசுவைக் கொலைசெய்யும் பாவத்தை யொழிக்கும். எழுமுகமுள்ளது ஆதிசேஷ சொரூபம், இது கோஹத்தியையும் நினைத்தற்கரிய பேர்க்களக் கொலை செய்பவைகளையும் போக்கும். எட்டு முகமுள்ளது விநாயக சொரூபம், இது துலாபாரந்தூக்கிய பொருள் தானம் முதலாகிய தானம் வாங்குதலா லுண்டாகும் பாபத்தையும், பிறன்மைச் சோறுண்பதினால் வரும்பாவத்தையும், உண்மகிழ்ந்திரப்பவர்களுக்குக் கொடாததினால்வரும் பாதகத்தையும், சூரியன் முற்றோன்றும் பனியைப் போல் நீக்கும். ஒன்பது முகமுள்ளது வயிரவர்சொரூபம், இடக் கரத்திலணியத்தக்கது. விடமுள்ளதக்ஷகன் முதலானசர்ப்பங்களை முன்சனனத்திலடித்துக்கொன்ற பாவத்தையும் நீக்கி முத்திக்கு வித்தாகும். பத்துமுகமுள்ளது உலகமுண்ட திருமால்சொரூபம், இது இருபத்தேழு நக்ஷத்திரங்கள், நவக்கிரகங்கள், பூதங்கள் பிசாசுகள் பிரமராக்ஷதர்கள் இவர்களாலுண்டாகும் பயமுதலான எல்லாக் குற்றங்களையும் நீக்கும். பதினொருமுகமுள்ளது ஏகாதசருத்திரசொரூபம், வேதவிதிப்படிசெய்கின்ற ஆயிரம் அசுவமேத யாகபலனையும், தானங்களுக்குட் சிறந்த நூறாயிரங் கோதானங்களை அவைகளுக்குத்தக்க திரவியங்களுடன் தானஞ்செய்யும் பலனையுந் தரும். பன்னிரண்டுமுகமுள்ளது துவாதசாதித்தர்சொரூபம், இது அசுவமேதமும், பசுமேதமும், பொன்மேருதானமும்செய்தலால் பொருந்தும் பெரும்பேற்றைத் தராநின்றபலனைக்கொடுக்கும். பதின்மூன்றுமுக மிருக்குமாகிற் காமசிந்தையில்லாத மற்ற இஷ்ட காமியங்களையும், ரசவாதப்பொன்னையும், நன்மைகளையும் பயப்பிக்கும். தாய், தந்தை, சோதரர் இவர்களுக்குச் சதிசெய்த

பாவத்தையும் நீக்கும். * பதினான்குமுகமுள்ளது சிவம் சத்தியெ ன்னுமிரண்டுசொரூபம், இது முனிவர்களும், தேவர்களும், மற்றி யாவரும் தொழும்படியான மகிமையுடையது. வசியம்என்பதனைக் கொடுத்துப் பின்பு ஊழிகாலத்திலுமறியாத மோக்ஷலோகத்தைத் தரும்.

கோற்கருவிசெய்யும் வருணத்தாரும், அவ்வருணத்துக் கன் னியரை அபுத்திபூர்வமாய்ப் புணருவாரும், மது மாமிச முண்ணு கின்ற மாந்தரும், உருத்திராக்கத்தைத் தலையிலெடுத்துக்கொண்டு தாங்குவாராகில், துன்பத்தைச்செய்கின்றவினை யொழிந்துசிவ சொரூபமாவார்.

## உருத்திராக்கம் தரிக்கும் விதியும் பலனும்.

குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொருமணியும், சிரசிலே இரு பத்திரண்டுமணியும், காதுகளிலே ஒவ்வொருமணி அல்லது அவ் வாறுமணியும், கழுத்திலே முப்பத் ரண்டுமணியும், புயங்களிலே தனித்தனி பதினாறுமணியும் கரத்தின் மணிகட்டுகளிலே தனித் தனி பன்னிரண்டுமணியும், மார்பிலே நூற்றெட்டுமணியும் வகுத் துததரித்து உமாமகேஸ்வரனை மனதில் நிர்ச்சிந்தையுடன் மானத பூசை புரிந்து, யாதொரு ஜீவராசிகளையும் மிதிக்காமல் ஓரடி யெடுத்துவைக்கின் ஒரு அசுவமேதயாகஞ் செய்த பலனுண்டாகு மென்பது மகான்களுடைய திருவாக்கின் திண்ணம்.

குடுமியும் பூணூலும் ஒழிந்த மற்றைத் தானங்களிலே அவ்வத் தானங்கொண்ட அளவு உருத்திராக்ஷமணியைத் தரித்தலும் ஆகும்.

குடுமியில் உருத்திராக்ஷம் அணிந்தவர் கோடிபலனடைவர், காதிலணிந்தவர் ஒருபது கோடி பலனடைவர், கண்டத்திலணிந் தவர் ஆயிரங்கோடி பலனடைவர், கரத்திலணிந்தவர் அனந்தங் கோடி பலனடைவர் அபுத்திபூர்வமாய் எவ்விதபாவஞ்செய்தவர்க

---

* பதினான்கு முகமுள்ள உருத்திராக்கங்கிடைப்பது மிகவும மரிது. அப்படிக் கிடைக்குமாயின் குற்றமற்றஞானவான்கள் தங் கள் கண்டத்தில் தரிக்கத்தக்கது. அது சிவசக்தி மந்திரத்திற்கு ஒப்புவமைவாய்ந்தது.

ளானலு மிறந்துபோகு முடிவுகாலத்தில் சற்று அணிவார்களாகில் காலன்வாதைக்குணின்று நீங்கி மறுபிறப்புத்தொடராதென்பது சுருதிப் பிரமாணம்.

குடுமியிலும், காதுகளிலும், பூணூலிலும் எப்போதுந்தரித்துக்கொள்ளலாம். மற்றைத் தானங்களிலோவெனில், சயனத்தினும், நோயினும், சனனாவஸ்தையினும் மரணாவஸ்தையினுந் தரித்துக்கொள்ளலாகாது.

### முக்கியமாய் உருத்திராக்ஷமணியைத் தரிக்கவேண்டிய

**காலங்கள்.**—சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம் படித்தல், சிவபுராணங்கேட்டல், சிராத்தம் முதலியவைசெய்யுங் காலங்களிலேஅவசியமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும். தரித்துக் கொள்ளாது இவை செய்தவர்களுக்குப் பலன் அற்பம்.

### உருத்திராக்ஷமணியைக் கோக்கவேண்டிய விதி.

பொன்னாயினும், வெள்ளியாயினும், தாம்பிரமாயினும், முத்தாயினும், பவளமாயினும், களிங்காயினும், இடையிடையே இட்டு, முகத்தோடு முகம அடியோடு அடியும் பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும்.

### உருத்திராக்க மணியை விசுவாசத்தோடாயினும் அவிசுவாசத்தோடாயினும் அழகுக்காக ஆபரணமாகவேனும் அணிந்தால் முடிவில் நற்பதவியைத் தருமென்பதைப் பின்வருஞ் சரித்திர முணர்த்துகிறது.

சதுர் வேதங்களுணர்ந்த பிராமணர்கள் வசிக்கின்றநந்திஎன்னுஞ் சிறந்த நகரத்திலுள்ள திருவாலயத்தின்கோயிற்றாசிகளுக்குளொருத்தி நந்தை என்பவள் ஒருசேவல் ஒருகுரங்கு ஆகியஇவ்விரண்டையும் வெகு பிரியத்துடன் வளர்த்துவந்தனள். அவைகளுக்கு ஆபரணங்களாக முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது நேத்திரமென்று சொல்லப்பட்ட உருத்திராக்க மணிக்குப் பொன்னாற்

கவசமணிந்து இடை யிடையே முத்துக்கோத்து மாலையாக்கி, சந்தோஷத்தால் அவ்விரண்டின் கழுத்திற்கு மணிந்தாள். வானரத்தின் காதுகளுக்கும் கைகளுக்கும் கட்டினுள், சேவலின் அழகிய கொண்டைக்குந் தரித்தாள், பரதசாஸ்திரத்தின் முறைப்படி ஆடல்புரியும் வண்ணம் கற்பித்தாள். அவ்வாறு பழகி அவைகள் ஆடும்பொழுது அவைகளைக்கண்டு ஆநந்தங்கொள்வாள். அவ்விரண்டும் வெகுகாலம் இவ்வாறுகழித்து முன்னைய ஊழினளவாக உயிர்த்துறந்திறந்தன. உருத்திராக்கமணிந்த புண்ணியவிசேஷத்தினால் உயிர்நீத்த அவ்விரண்டில் ஒன்ருகிய சேவல் காஸ்மீர தேசத்தையாளும் வெற்றியையுடைய பத்திரசேனனென்பவனுடைய பத்தினிசெய்த புண்ணிய விசேஷத்தால் அவள் கற்பத்தில் பிறக்கவும் அவ்வரசன் தன்னுடைய குழந்தையைக்கண்டு ஆநந்தங்கொண்டு நல்லசுபதினத்தில் சுதர்மா எனப்பெயரிட்டனன். மற்றொன்ருகிய குரங்கு அப்பத்திரசேனனுடைய மந்திரியின் கற்புடைய மனைவின் கற்பகத்தில் பிறந்தது. மந்திரியும் தான்பெற்ற புத்திரனைக்கண்டு சந்தோஷப்பெயரிட்டனன். இவ்விருவர்களும் உயிரும் உடலும்போல ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் சிநேகித்துவளர்ந்து வருங்காலத்தில் பூர்வஜன்ம புண்ணிய விசேஷத்தால் திரிபுரதகனராகிய சிவபிரானுக்கன்புபூண்டவர்களாயும் நவரத்தின மணிகளையும் ஆபரணங்களையு மிச்சியாது, உருத்திராக்க மணியையே ஆபரணங்களாகத் தரிப்பவர்களாயும் தமதராசாக்ஷியிலுள்ள குடிகளுக்கு நன்மை பாலித்து முறைப்படி வெகுகாலம் உலகையாண்டு வந்தனர்கள். பிறகு அளவிறந்த ஐஸ்வரியமும் ஆயுளும் நீங்கிடப்பெற்றுச் சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்தவரும், முச்சிகைகளையுடைய சூலாயுதத்தை ஏந்தினவருமாகிய சிவபிரானது வெள்ளியங் கைலையைச்சேர்ந்தார்கள். இவர்களை முன் ஜன்மத்தில் சேவலாகவும் குரங்காகவும் வளர்த்த நந்தை என்னும் கணிகைமாதும் திருக்கைலைப் பதவியை யடைந்தனள்.

# அனுட்டானஞ் செய்யும் விதி.

**மூலமந்திரம்** ரு.—ஓம் நமசிவாயநம: ஓம் உமாதேவ்யைநம: ஓம் கணபதேயநம: ஓம் சரஹணபவாயநம: ஓம் சிவசூர்யாயநம: என்று இம்மந்திரங்களைச்செபித்து,

**பிரமமந்திரம்** ரு.—ஓம் ஈசானுயநம: ஓம் தற்புருஷாயநம: ஓம் அகோராயநம: ஓம் வாமதேவாயநம: ஓம் சத்தியோசாதாய நம: என்று இம்மந்திரங்களைச் செபித்து,

**அங்கமந்திரம்** ரு.—ஓம் இருதாயநம: ஓம் சிரசேநம: ஓம் சிகாயைநம: ஓம் கவசாயநம: ஓம் நேத்திரேப்பியோநம: ஓம் அஸ்திராயநம: என்று இம்மந்திரங்களைச் செபித்தும்,

**ஆசமனமந்திரம்** ரு.—ஓம் ஆத்துமதத்துவாயசுவாகா, ஓம வித்தியாதத்துவாயசுவாகா ஓம் சிவதத்துவாய சுவாகா என்று இம்மந்திரங்களால் ஆசமித்து,

**ஓம் கணபதேயநம:** என்று குட்டிக்கொண்டு

**ஓம் குருப்பியோநம:** என்று கும்பிட்டு,

**சலசுத்தி.**—அநுட்டான சலத்தைச் சிவாயநம: என்று நிரீக்ஷண முத்திரையால் நிரீக்ஷித்து, அஸ்திராயபடு என்று நிமிர்த்திய பதாகை முத்திரை யுடைய கைத்தலத்திஞற் புரோக்ஷித்து, அஸ்திராயபடு என்று சுட்டுவிரல் நீட்டியகையினுல்தாடனஞ்செய்து,-கவசாயவௌஷடு என்று கவிழ்ந்தபதாகை முத்திரையுடைய கைத்தலத்திஞல் அபியுக்ஷணஞ்செய்து, வலக்கைப் பெருவிரல் நீங்கியவிரல்களினுல் அஸ்திராயபடு என்று தாளத்திரயஞ்செய்து,-அஸ்திராயபடு என்று சோடிகைமுத்திரையினுல் திக்குபந்தனஞ் செய்து,-கவசாயவௌஷடு என்று சுட்டுவிரல் நீட்டிய கையினுல் அவகுண்டனஞ்செய்து, சிவாயவௌஷடு என்று தேனுமுத்திரை கொடுத்து அஸ்திராயபடு என்று நிமிர்த்தியபதாகை முத்திரையினுல் சலத்துளியை மூன்றுதரஞ் சிரசின்மேல் தெளித்துக்கொண்டு,-அஸ்திராயசுவாகா என்று மூன்றுதரந் தருப்பணஞ்செய்து,-அஸ்திராயந: என்று பத்துத்தரஞ்செபித்து, அஸ்திராயசுவாகா என்று மீட்டும் ஒருதரந் தருப்பணஞ்செய்து,-வலக்கையைப் பிரித்து பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்துவிட்டுப் பெருவிரலடியிற் சார்ந்த உ.மூன்று.விழுத்தின கைத்திஞல்,—

"ஓம்—ஆத்துமதத்து வாயசுவதா,ஓம் வித்தியாதத்துவாயசுவதா, ஓம் சிவதத்துவாயசுவதா" என்று ஆசமனஞ்செய்து அஸ்திராயபடு என்று உதடுகள் இரண்டையும்வலக்கையின்பெருவிரலடி கொண்டு இடமாக இரண்டுதரமும் உள்ளங் கை கொண்டு கீழாக ஒருதரமுந் துடைத்துக்கைகழுவி, இருதயாயவௌஷடு என்று பெருவிரலோடு கூடிய மோதிரவிரலினால் முகம்,வலமூக்கு, இடமூக்கு,வலக்கண், இடக்கண், வலக்காது, இடக்காது, கொப்பூழ், மார்பு, வலத்தோள், இடத்தோள், சிரசு, இப்பன்னிரண்டிடங்களையுந் தொட்டு,-விபூதியை வலக்கைப் பெருவிரல், நடுவிரல், அணிவிரல்களால் எடுத்து இடக்கையில் வைத்துக்கொண்டு,-அஸ்திராயபடு என்று விபூதியிலே சலத்தைத் தெளித்து அவ்விபூதியில் ஒரு சிறு பங்கைப் பெருவிரல் அணிவிரல்களினாற்றெட்டு,-அஸ்திராய உம்படு என்று இராக்கதர்பொருட்டு நிருதி மூலையில் தெளித்து,-சிவாயநம: என்று நிரீக்ஷணமும், அஸ்திராயபடு என்று புரோக்ஷணமும், அஸ்திராயபடு என்று தாடனமும், கவசாயவௌஷடு என்று அபியுக்ஷணமுஞ்செய்து, விபூதியை வலக்கையால் மூடிக்கொண்டு,

"ஓம்—நிவர்த்திகலாயநம: ஓம் பிரதிஷ்டாகலாயைநம: ஓம் வித்தியாகலாயநம: ஓம் சாந்திகலாயைநம: ஓம் சாந்தியாதீதகலாயைநம:" என்னும் பஞ்சமந்திரத்தினாலும்,-

"ஓம்—ஈசாநாயநம: ஓம் தற்புருஷாயநம: ஓம் அகோராயநம: ஓம் சத்தியோசாதாயநம:" என்னும் பிரமமந்திரத்தினாலும்,

"ஓம்.—இருதாயநம: ஓம் சிரசேநம: ஓம் சிகாயைநம: ஓம்கவசாயைநம: ஓம் நேத்திரேப்பியோநம: ஓம் அஸ்திராயநம:என்னும் அங்கமந்திரத்தாலுஞ் செபித்து,-அஸ்திராயபடு என்று திக்குபந்தனமும் கவசாயவௌஷடு என்று அவகுண்டனமுஞ்செய்து,-வலக்கையின் பெருவிரலணிவிரல்களால் விபூதியை எடுத்து, அஸ்திராயபடு என்று சிரசுமுதலாகிய இடங்களிற்பூசி-இடக்கையிலுள்ள விபூதியைப், பெருவிரலோடு கூடிய நடுவிரலினால்,இருதயாநம: என்று சலம்விட்டு,-கவசாயவௌஷடு என்று குழைத்து நடுவிரல் மூன்றினாலும் ஈசாநாயநம:என்று சிரசில் மூன்றுதரமும் தற்புருஷாயநம: என்று நெற்றியில் மூன்றுதரமும், அகோராயநம: என்று மார்பில்மூன்றுதரமும்,வாமதேவாயநமஎன்றுகொப்பூழில்

ஒரு தாமும், சத்தியோசாதாயநம: என்று வலமுழந்தாள், இடமுழந்தாள, வலப்புயம், இடப்புயம், முதுகு, கழுத்து, இவ்விடங்களில் ஒவ்வொருதாமுந் திரிபுண்டரமாகத் தரித்து, எஞ்சியவிபூதியோடு கைநிறையச் சலம்விட்டுக் கும்ப முத்திரையாகப்பிடித்துக் கொண்டு, ஈசாநாயநம: என்பது முதலிய பிரமமந்திரத்தை யுச்சரித்து, சிவாயசுவாகா என்று சிரசில் புரோக்ஷித்து அஸ்திராயபடு என்று கைகழுவி, முன்போலவே ஆசமனஞ்செய்து, அஸ்திராயபடு என்று இடக்கையினுல் வலக்கையின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் மூன்றுதாமும் துடைத்து, சத்தியசேய வௌஷடு என்று கைகளைக் கூட்டிக் குவித்து,-பெருவிரலினுல் இருதயாயநம: என்றும், சிறுவிரலினுல் சிரசேநம: என்றும், அணிவிரலினுல் சிகாயைநம: என்றும் நடுவிரலினுல் கவசாயநம: என்றும், சுட்டுவிரலினுல் நியசித்து, உள்ளங்கையினுல் நேத்திரப்பிரயோநம: என்றும் மடக்கிய, மடக்கிய சுட்டுவிரல் நடுவிரல் அணிவிரல்களாகிய நடுவில் மூன்றினுலும் நியசித்து,-அஸ்திராயபடு என்று சுட்டுவிரல் பெருவிரலினுல் நியசித்து, கவசாய வௌஷடு என்று கைகளை அவகுண்டனஞ் செய்து, சிவாயவௌஷடு என்று இரண்டு கைகளையுங் கூட்டிக்குவித்து இருதயாயநம: என்று வலக்கைப் பெருவிரலோடு கூடிய சிறுவிரலினுல் இருதயத்திலும், சிரசேநம: என்றும் பெருவிரலோடுகூடிய நடுவிரலினுல் குடுமியில் நியசித்து, கவசாயவௌஷடு என்று சுட்டுவிரலினுல் கழுத்தையும் மூலை நடுவளாவாகச் சுற்றி, நேத்திரப்பியே நம: என்று நிமிர்த்திய நடுவிரல் மூன்றினுலும் வலமிட நெற்றிக் கண்களிலே நியசித்து அஸ்திராயபடு என்று வலவுள்ளங்கையில் இடக்கை அணிவிரலினுலும் இடவுள்ளங்கையில் வலக்கை அணிவிரலினுல் நியசித்து அஸ்திராயபடு என்று வலக்கைப் பெருவிரலொழிந்த விரல்களால் இடவுள்ளங்கையிலே தட்டுதலாகிய தாளத்திரயஞ்செய்து, அஸ்திராயபடு என்று சோடிகை முத்திரையினுல் பத்துத்திக்கினுந் திக்குபந்தனஞ்செய்து, கவசாய வௌஷடு என்று சுட்டுவிரல் நீட்டிய கையினுல் அவகுண்டனஞ்செய்து, சுவாய வௌஷடு என்று மகாமுத்திரைக்காட்டி, வலக்கையினுல் சுட்டுவிரல் நடுவிரலையும் உள்ளேமடக்கி, பெருவிரலினுல் வலமூக்கைப் பிடித்துக்கொண்டு ஒரு தாமும், பெருவிரல் அணி விரல்களால் வல இடமூக்குகளைப் பிடித்துக்கொண்டு எழுதாமும் அணிவிரலினுல் இடமூக்கைப்

பிடித்துக்கொண்டு ஒருதரமுகமாகப் பிரமமந்திரத்தையும், அங்க மந்திரத்தையும் மூன்றுதரம் உச்சரித்து, சிவாயநம: என்று வலக் காதைப் பொத்தி இருதயாய வௌஷடு என்று புருவநடுவிலுள்ள அமிர்தத்தை அங்குசமுத்திரையினலெடுத்துச் சலத்தினிடத்தில் வைத்து, அந்தச்சலத்தைச் சிவதீர்த்தமாகப் பாவித்து, சிவாயநம: என்று அபிமந்திரித்து, அஸ்திராயபடு என்று திக்குபந்தனமும், கவசாய வௌஷடு என்று அவகுண்டனஞ் செய்து, கவசாயவௌஷடு என்று தேனுமுத்திரை கொடுத்துத் தியானஞ்செய்து, வலக் கையினுல் சலத்தையள்ளி இடக்கையில் விட்டுக் கும்பமுத்திரை யாகப் பிடித்து, பிரமமந்திரத்தையும் அங்கமந்திரத்தையும் உச்ச ரித்து, சிவாய வௌஷடு என்று சிரசில் புரோக்ஷித்து, சலத்தை வலக்கையால்மூடிப் பிரமமந்திரத்தாலும் அங்கமந்திரத்தாலும் அபிமந்திரித்து, வலக்கையினுல் சலத்தை எடுத்து இடக்கையில் விட்டு அவ்விடக்கையினின்று கீழே ஒழுகுஞ்சலத்தை வலக்கையி னுல் பிரம மந்திரத்தாலும் அங்கமந்திரத்தாலும் சிரசில் தெளித் துக்கொண்டு எஞ்சியசலத்தை இடக்கையில் நின்று வலக்கையில் விட்டு மூக்குக்குச் சமீபத்தில் பிடித்துக்கொண்டு, அந்த ஜலம் வெண்ணிறமுடைய தருமவடிவாய் இடமூக்கினுல் உள்ளேபுகு ந்து, அங்குள்ள பாவத்தையழித்து, அப்பாவம்மைக் குழம்புபோல் வலமூக்கினுல் புறத்தே நீங்கிக் கைவந்ததாகப் பாவித்து, அஸ்தி ராய உம்படு என்று புருவமுரிப்புடனே பூமியில்விடுத்து, அஸ்தி ராயபடு என்று கைகழுவி, ஆசமனமுஞ் சகளீகரணமுஞ்செய்து, கவசாயவௌஷடு என்று வலக்கையிற் சலத்தினுல் தன்னை வல மாகச்சுற்றி இரண்டு கைகளையுங் கூட்டி மேலாகவிரித்து, அஞ்சலி யாக்கிக்கொண்டு, சிவாயசுவாகா என்று மூன்று தரந் தருப்பணஞ் செய்து, சிவாயநம: என்று பத்துதரஞ் செபித்து, சிவாயசுவாகா என்று ஒருதரந் தருப்பணஞ்செய்து, ஈசானய சுவாகா என்பது முதலிய சங்கிதா மந்திரத்தினுல் ஒவ்வொரு தருப்பணஞ்செய்து,

ஓம் உமாதேவியைசுவாகா, ஓம் கணபதேய சுவாகா, ஓம் சர ஹணபவாயசுவாகா என்றுஒவ்வொருதருப்பணஞ்செய்து, ஆசமன முஞ் சகளீகரணமுஞ்செய்து, முன்னே புருவநடுவில்நின்றுஎடுத்த சலத்தில்வைக்கப்பட்ட அமிர்தத்தை, இருதயாய வௌஷடுஎன்று சங்காரமுத்திரையினுலெடுத்துப் புருவநடுவிலொடுக்கி, இரண்டு கை நிறையச் சலம்விட்டுப் பிடித்துக்கொண்டு, பிரமமந்திரங்களா

லும் அங்கமந்திரங்களாலும் உச்சரித்து, சிவாயசுவாகா என்று ஆதித்த மூர்த்தியின் நடுவிலிருக்கும் பரமசிவனிடத்தேகொடுத்து சிவசூரியாயசுவாகா என்று ஒருதருப்பணஞ்செய்து, தானிருக்கு மிடத்தை அஸ்திராயபடு என்று சலத்தினல் புரோக்ஷித்து, வடக்குமுகமாக ஆசனத்திலிருந்து குட்டிக்கொண்டு, கும்பிட்டு பிராணயாமமும் சகளீகரணமுஞ்செய்து, உருத்திரவடிவத்தைத் தியானித்து சிவமூலமந்திரத்தை நூற்றெட்டுதரமும், சங்கிதாமந்திரத்தை ஒருதரமும், தேவிமூலமந்திரம், கணபதிமூலமந்திரம், சுப்பிரமணியர் மூலமந்திரம் இவைகளைத் தனித்தனியே பத்துதரமுஞ்செபித்து, குட்டிக்கொண்டு கும்பிட்டு, பிராணயாமமுஞ் சகளீகரணமுஞ்செய்து இந்திராயநம: என்று கிழக்கிலும், அக்கினியேநம: என்று தென்கிழக்கிலும், யமாயநம: என்று தெற்கிலும், நிருதியேநம: என்று தென்மேற்கிலும், வருணாயநம: என்று மேற்கிலும், வாயுவேநம: என்று வடமேற்கிலும், குபேராயநம: என்று வடக்கிலும், ஈசாணாயநம: என்று வடகிழக்கிலுங் கும்பிட்டு, பார்வதிசமேத பரமேஸ்வராயநம: என்று வடக்குநோக்கி மூன்றுதரஞ் சாஷ்டாங்கநமஸ்கரித்து ஆசமனஞ்செய்து, அஸ்திராயபடு என்று இருக்குமிடத்தைச் சலத்தினல் தெளித்து அதனைத்தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு சலத்தைக் கால்படாவிடத்தில் கொட்டியபிறகு,

### விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி
யுறுதி யாகத்
தள்ளரிய வன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித்
தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக் களித்துண்டு
கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு
வினைக டீர்ப்பாம்.

### சிவஸ்துதி

வேதநா யகனே போற்றி விண்ணவர் தலைவா போற்றி
மாதொரு பாகா போற்றி மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி பிஞ்சகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும் பராபரா போற்றி போற்றி.

## தேவி துதி.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி யுத்தரியத்
தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப் பால்சுரந்த
கலசம் போற்றி
யிரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட வங்கயற்க
ணம்பி ராட்டி
யருப்புமிள நகைபோற்றி யாரணநூ புரஞ்சிலம்பு
மடிகள் போற்றி.

## சுப்பிரமணியர் துதி.

கறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப் பெருங்கடலுங்
கலங்கக் கார்வந்
துறங்குசிகைப் பொருப்பஞ்சூ ருரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோராற்று
மறங்குலவு மகத்தழலு மவுணமட வார்வயிற்றி
னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள் சேவடிகள்
வணக்கஞ் செய்வாம்.

## நால்வர் துதி.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

---

## சூரிய நமஸ்கார விதி.

சூரியமண்டலத்தை தரிசித்து, வெண்டாமரைப் பூவின்மேற் செவ்வொளியையுடைய வட்டமண்டலத்தினடுவே உள்ளவராய், மாதுளம்பூ நிறத்தினராய் ஒரு திருமுகமும், இரண்டு திருக்கண்ணும், இரண்டு திருப்புயத்திலும் பொருந்திய அலர்ந்த வெண்டா

மரைப்பூ நாளம் இரண்டுபிடித்த இரண்டுதிருக்கையும்,சிவந்தவஸ்திரந்தரித்தவராயும், ஏழுபச்சைக்குதிரைகள் பூட்டிய ஒற்றைச் சக்கரமுள்ள இரததிலாரோகணித்து உலகினிருளை விலக்கி வெளிச்சத்தைக் கொடுப்பவராயுமுள்ள சூரியமூர்த்தியை மனதிலாவாகனஞ்செய்து தியானித்து; ஓம் சிவசூரியாயநம: என்று செந்தாமரைப்பூ முதலிய சிவந்த பூக்களைத் தூவி;

"பேசிடுவெண் டாமரையா சனனாகிச்சிவந்த
பேரொளிசேர் தருவிருத்த மண்டலமத் தியனு
யாசறுமா துளங்கமலர் போலுநிறத் தினனு
யலர்ந்தனவா யிருபுயங்க ளடைந்தவெண் டாமரையின்
காசறுநா ளமபிடித்த கையிரண்டி னேடு
கருதுமொரு முகமிரண்டு கண்களுடை யவனைத்
தேசுமலி செய்யவுடை தனையுடுத்தோ னாகித்
திகழ்சிவசூ ரியனைநிசஞ் சிந்தனைசெய் திடுவோம்."

"விளங்குதண்டி முதலோராற் சேவிக்கப் படுவோன்
விமலன் முத னற்சிங்க பதாசனத்தின் மேலோன்
களங்கமிலாத் தீர்த்தைமுதற் சத்திகண் சகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி
துளங்கலிறன் னங்கந்தன் னங்கமெனுங் கிரகந்
தொகுமுடுவா தியசூழச் சுவேதகஞ்சத் திவர்ந்தோன்
வளங்கொள்சுவே தாம்புசதந்தோட் கானிருநல் விழியோன்
வருசிவசூ ரியன்காக்க மகிழ்ந்தவடியேங் களையே."

என்று தோத்திரஞ்செய்து, இரண்டுதரம் ஆன்மப்பிரதக்ஷிணஞ்செய்து,

## மூல மந்திரம்.

ஓம் வைகர்த்தனயநம: ஓம் விஸ்வதேநம: ஓம் மார்த்தாண்டாயநம: ஓம் பாஸ்கராயநம: ஓம் ரவேயநம:ஓம் லோகப்பிரகாசயநம: ஓம்லோகசாக்ஷிணேநம: ஓம்திரிவிக்கிரமாயநம:ஓம் ஆதித்யாயநம: ஓம் சூரியாயநம: ஓம் அம்சுமாலிநே நம: ஓம் திவாகராயநம: என்னும் பன்னிரண்டு திருநாமத்தால் தோத்தரித்துப் பன்னிரண்டு நமஸ்காரஞ்செய்து, எழுந்து கும்பிட்டு, விரும்பிய வரங்களை வேண்டிக்கொள்க. இவ்வாறாக சூரிய நமஸ்காரஞ் செய்தல் வேண்டும்.

# சிவாலய தரிசன விதி.

கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்
பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னாப்
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிக
எண்ணல்பொலங் கழனிணைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை.

அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் சிவபெருமானே என்று துணிந்து அவர் அருளிச்செய்தவேதாகமங்களிலேவிதித்த படி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப, அவரை மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்று சொல்லப்படுவார்.

திருக்கோயிலுள்ளிருக்கும் சிவலிங்கம் பிரார்த்தலிங்கம்எனப் பெயர் பெறும். அது சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என ஐந்துவகைப்படும். அவற்றுள்: சுயம்புலிங்கம் தானேதோன்றியது. காணலிங்கம் விநாயகர் சுப்பிரமணியர்முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கம் விட்டுணுமுதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளாலே தாபிக்கப்பட்டதும் அசுரர் இராக்கதர்களாலே தாபிக்கப்பட்டதுமாம். மானுடலிங்கம் மானுடராற்றாபிக்கப்பட்டது. மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம், அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம், அதனின் உயர்ந்தது காணலிங்கம், அதனின் உயர்வு சுயம்புலிங்கம்.

திருக்கோயிலிலே கர்ப்பக்கிருகத்தினுள்ளே சிவலிங்கப்பெருமானைச் சூழ்ந்தவிடம் முதலாவரணம். அதற்கப்பாலுள்ளது இரண்டாமாவரணம். அதற்கப்பாலுள்ளது மூன்றாமாவரணம், அதற்கப்பாலுள்ளது நான்காமாவரணம். அதற்கப்பாலுள்ளதுஐந்தாமாவரணம். அதற்கப்பால் ஊரின்புறம் ஆறாமாவரணம். பிரதக்ஷிணபலம், முதலாவரணத்திலும் பார்க்க இரண்டாமாவரணத்தும், இரண்டாமாவரணத்தினும் பார்க்க மூன்றா மாவரணத்தும்,

மூன்றுமாவரணத்தினும் பார்க்க நான்காமாவரணத்தும், நான்காமாவரணத்தினும் பார்க்க ஐந்தாமாவரணத்தும், ஐந்தாமாவரணத்தினும் பார்க்க ஆறுமாவரணத்தும் அதிகமாம்.

சிவதரிசனஞ்செய்ய விரும்புவோர் சிவாலயத்துக்குச் சமீபத்திலுள்ள சிவதீர்த்தத்திலே விதிப்படி ஸ்நானஞ்செய்து, கரையிலேறி சரீரத்திலுள்ள ஈரத்தை உலர்ந்த வஸ்திரத்தினாலே துவட்டி, நெற்றியில் விபூதிதரித்து, குடுமியைமுடித்து, ஈரக்கௌபீனத்தைக் களைந்து, உலர்ந்த கௌபீனத்தரித்து, கைகளிரண்டையுஞ் சுத்திசெய்து, தோய்த்துலர்ந்தனவாய்க் கிழியாதனவாய் வெள்ளியனவாய் உள்ள சுத்தவஸ்திரம், இரண்டு அரையிலே தரித்து, அநுட்டானமும் செபமும் முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர். ஸ்நானம் முதலிய நியமங்கள் இல்லாது திருக்கோயிலுக்குப்போவோர் சிவநிந்தகரை ஒப்பர்.

திருக்கோயிலுக்குப் போம்பொழுது ஒரு பாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலைமுதலியவை வைத்து, அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு, திருக்கோயிலுக்குப் போகக்கடவர். சிவபெருமானையுஞ் சிவாக்கினியையும் ஆசாரியரையும் சேவிக்கப்போமிடத்து, வெறுங்கையுடன்போகாது, தம்மாலே கொடுத்தற்கியன்ற பதார்த்தத்தை அவர் சந்நிதியிலேவைத்து, வணங்குதலேதகுதி. பொருளில்லாதவன் பத்திரபுட்பங்கள் கொடுத்து வணங்கல்வேண்டும் அதுவுங் கூடாதவன் சந்நிதியிலுள்ள செத்தை முதலியவற்றைப் போக்கி வணங்கல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே பிரவேசித்துப் பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணக்கடவர்.

ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்கநமஸ்காரமும் பண்ணல்வேண்டும். திரயாங்க நமஸ்காரம் இவ்விருவருக்கும் பொது.

அஷ்டாங்கநமஸ்காரமாவது —தலை, கைகளிரண்டு, செவிகளிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டுறுப்பும் நிலத்திலே படும்படி வணங்கல்வேண்டும்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது.—தலை, கைகளிரண்டு, முழந்தாள்களிரண்டு என்னும் ஐந்துப்பும் பூமியிற் படும்படி வணங்கல் வேண்டும்.

திரயாங்க நமஸ்காரமாவது.—சிரசிலே இரண்டு கரங்களையும் குவித்தல் வேண்டும்.

நமஸ்காரம், மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், எழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் பண்ணல்வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டவேண்டும். கிழக்கே யாயினும் வடக்கே யாயினும் கால் நீட்டலாகாது.

கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு அக்கினிமூலையிலும், தெற்குநோக்கிய சந்நிதியிலும் மேற்கு நோக்கிய சந்நிதியிலும் பலிபீடத்துக்கு நிருதி மூலையினும், வடக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு வாயுமூலையிலும் சிரசுவைத்து மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப்பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப் புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து, நமஸ்காரம் பண்ணல்வேண்டும்.

பின்பகலிலே சூரிய கிரணமாயினும் சங்கிராந்தியாயினும் வரின் அப்பொழுது தரிசனஞ்செய்யப் போனவர், மேற்கே கால் நீட்டலாகாமையால், தெற்கு நோக்கிய சந்நிதியிலும் வடக்கு நோக்கிய சந்நிதியிலும் அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் பண்ணாது திரியாங்க நமஸ்காரமாத்திரம் பண்ணல் வேண்டும்.

மேற்சொல்லியபடி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு சிவபெருமானைச் சிறிதும் மறவாத சிந்தையோடு செபமாலையைக் கையில் வைத்துப் பஞ்சாட்சரசெபம் செய்துகொண்டாயினும், இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக்கொண்டாயினும், பூரண கர்ப்பிணியானவள் காலிலே விலங்கு பூட்டப்பட்டவளாய் எண்ணெய் நிறைந்த குடத்தைச் சிரசின்மேல் வைத்துக்கொண்டு நடத்தல்போல, செந்துக்கள் வருந்துமேயென்று மனமுருகிப் பூமி

யைப்பார்த்துக்கொண்டு விரல்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் பண்ணல்வேண்டும் இதற்குப்பிரமாணம் அருணகிரிபுராணம், வலம்புரிசருக்கம்.

அடிதொறு மசுவமேத யாகத்தின் பலமதாகும்
படிதனைப் பார்த்து மெல்லப் பதத்தினை வைத்துக் கீட
மடியுமெய் வருந்து மென்மேற மனந்தனி லுருகிச் செல்க
வடிகளா லயந்து வட்டத் தக்கதுணி யமலன் பாதம்.

நிறைந்தகாப் பிணிதா னெண்ணெய் நிறைகுடந் தலையின் மீதே
யுறைந்திட் டிகளங் காலி னுறமெல நடத்தல் போல
மறந்திடா தமலன் பாத மனத்துற வலமுஞ் செய்க
சிறந்தவைந் தெழுத்துஞ் செப்பிச் செபவடங் கரத்திற்சேர்த்தே.

சிவபெருமானை மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பதினைந்து தரமாயினும், இருபத்தொரு தரமாயினும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

விநாயகரை ஒருதரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதி தேவியாரையும் விட்டுணுவையும் நந்நான்கு தரமும் பிரதக்ஷிணம் பண்ணல் வேண்டும்.

பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்திலே தூபிநிழலேனும் துசத்தம்ப நிழலேனும் இருப்பின், அந்நிழலில் மூன்றுகூறு நீக்கி எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லக்கடவர். கடவுள் உற்சவங் கொண்டருளக் காலத்திலே உடன் செல்லும்பொழுது அந்நிழலிருப்பினும் நீக்காது செல்லலாம்.

அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே பிரதக்ஷிணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது.

பிரமசாரிகள் வலம் வரக்கடவர். கிருகத்தரும் வானப்பிரஸ்த்தரும் வலமும் இடமுமாக வரக்கடவர். சந்நியாசிகள் இடம் வரக்கடவர். வலஞ் செய்தலினாலே போகமும், இடஞ் செய்தலினாலே மோக்ஷமும், வலமும் இடமுஞ் செய்தலினாலே போக மோக்ஷங்களும் உண்டாகும்.

தாம் பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணக்கடவர். தாம் பிரதக்ஷிணம்பண்ணும் ஆவரணத்திலே பலிபீடமும் இடப

மும் இல்லையாயின் அதற்கு வெளிப்பிரகாரத்திலுள்ள பலபீடத்தையும் இடபத்தையுஞ் சேர்த்துப் பிரதக்ஷிணம் பண்ணக்கடவர். சிவலிங்கத்துக்கும் அந்த அந்த ஆவரணத்திலுள்ள பலபீட இடபங்களுக்கும் இடையே போகலாகாது.

முன்னே விக்கினேசுரருடைய சந்நிதியை அடைந்து, இருகைகளையுங்குவித்து அவரைத் தரிசித்து மனதிலே தியானித்து, முட்டியாகப்பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மும்முறைகுட்டி வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மும்முறை தாழ்ந்தெழுந்து தோத்திரம் பண்ணக்கடவர்.

பின்பு இருகைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு சிவபெருமானுடைய சந்நிதியையடைந்து, அவரைத் தரிசித்து மனதிலே தியானித்து, சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலிசெய்து, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்த அருவிசொரிய, முப்பத்திரண்டு இராகங்களுள் அவ்வக்காலத்துக்கேற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லல்வேண்டும்.

உத்தமோத்தமமாகிய ஸ்தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம், திருவிசைபபா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களைந்துமாம்.

சிவபெருமானைப் பூசகரைக்கொண்டு வில்வத்தினாலே அருச்சனைசெய்வித்து, விதிப்படி சுத்திசெய்யப்பட்ட பழமுதலியவற்றை நிவேதிப்பித்து, கர்ப்பூரார்த்திரிகம் பணிமாறப்பண்ணி, பூசகருக்கு இயன்ற தக்ஷிணைகொடுத்தல்வேண்டும்.

சிவப்பிராமணர்கள் கர்ப்பக்கிருகத்திலும், பிராமணர்கள் அர்த்தமண்டபத்திலும், க்ஷத்திரியர் மகா மண்டபத்திலும் புகுந்து சிவமூலமந்திரத்தினாலே புஷ்பாஞ்சலி செய்தல்வேண்டும்.

வைசியர் இடபத்துக்கு முன்னும் சூத்திரர் இடபத்துக்குப் பின்னும் கோமயத்தினாலே சதுரச்சிரமாக இடம்பண்ணி சிவமூலமந்திரத்தினால் அருச்சித்தல்வேண்டும்.

பின்பு சபாபதி, தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும் சமயாசாரியர்கள் நால்வரையும் தரிசித்து வணங்கித் துதித்தல்வேண்டும்.

அதன்பின் பார்வதிதேவியாருடைய சந்நிதியை அடைந்து சிரசிலும் இருதயத்திலும் அஞ்சலிசெய்து, அவரைத்தரிசித்து, மனதிலே தியானித்து அருச்சனை முதலியன செய்வித்து, தோத்திரங்களைச் சொல்லல்வேண்டும்.

இறுதியில் விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, பிரதக்ஷிணஞ் செய்து, சண்டேசுரர் சந்நிதியை அடைந்து, வணங்கித் தோத்திரஞ்செய்து, தாளத்திரயம்பண்ணிச் சிவதரிசனபலனைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்தல்வேண்டும்.

அதன்பின் நந்திதேவரையடைந்து வணங்கித்துதித்து, பலிபீடத்துக்கு இப்பால் வந்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து, வடக்குநோக்கி இருந்து, சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச்செபித்து, எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

தரிசனஞ்செய்து திரும்பும்பொழுது, சிவபெருமானுக்கும் இடபதேவருக்கும் புறங்காட்டாது திரும்பல்வேண்டும்.

சிவதரிசனம் பிராதக் காலத்திலே செய்தால் இரவிலே செய்த பாவம்போம். மத்தியானத்திலே செய்தால் பிறந்தநாட் டொடங்கிச்செய்த பாவம்போம். சாயங்காலத்திலே செய்தால் எழுபிறவிகளினுஞ் செய்தபாவம்போம். ஆதலால், யாவரும் எந்நாளும் காலந்தோறும் தவறாமல் விதிப்படி மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்தல் வேண்டும்.

சோமவாரம், அட்டமி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரைவிஷு, ஐப்பசிவிஷு, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி முதலிய புண்ணியகாலங்களிலே சிவதரிசனஞ் செய்தல் மிக மேலாகிய சிவபுண்ணியம்.

சுக்கிலபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்தும் வருகின்ற திரயோதசி திதியிலே சூரியாஸ்தமயனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமே பிரதோஷமெனப்படும். விட்டுணுமுதலிய தேவர்கள் தாங்கள் திருப்பாற்கடல் கடைந்தபோது ஆலகால

விஷம்தோன்றக்கண்டு அஞ்சி ஓட்டமெடுக்க, அது அவர்களை வலமும் இடமுமாகமறித்துத் தொடர்ந்தது. அவர்கள் திருக்கைலாயத்திற் சென்று இடபதேவருடைய அண்டத்தில் ஒளித்தார்கள். அவர்களை ஆலகாலவிஷம் பின்றொடர்ந்து வரும்போது சிவபெருமான் இடப தேவருடைய இரண்டு கொம்பிநடுவே இருந்து அவ்விஷத்தைத் திருக்கரத்திலேற்றி உட்கொண்டு, அவர்களைக் காத்து, அக்கொம்பினடுவேநின்று நிருத்தஞ் செய்தருளினார். இது சனிவாரத்திலே திரயோதசிதிதியிலே சாயங்காலத்திலே அர்த்தமண்டல சமயத்திலே நிகழ்ந்தது ஆதலால் சனிப்பிரதோஷம் மிகச் சிறந்தது. இப்பிரதோஷவாலாறு வேறொரு பிரகாரமாகவுஞ் சொல்லப்படும். ஏகாதசியின் மாலைக்காலத்திலே சிவபெருமான் ஆலகால விஷத்தையுண்டு தேவர்களைக் காத்தருளினார். துவாதசியிலே அமிர்தந்தோன்ற தேவர்கள் அதையுண்டு, திரயோதசியின் மாலைக்காலத்திலே சிவபெருமானைப் பூசித்து வணங்கினார்கள். அப்பொழுது சிவபெருமான் இடபத்தின்மேனின்று அருள்செய்தார். இப்பிரதோஷத்திலே இடபதேவருடைய அண்டத்தைப் பரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹர ஹர என்று சொல்லி, சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தல்வேண்டும்.

பிரதோஷகாலத்திலே மெய்யன்போடு சிவதரிசனஞ்செயின், கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அவமிருத்யு மரண வேதனை, பாவம் என்னும் இவைகளெல்லாம் நீங்கும். முத்தி சித்திக்கும.

## தேகாரோக்கியவிதி.

### நோயணுகாவிதி.

உலகத்தினிடத்துத் திருவருட்செயலால் அரியபிறவியாகிய மானிடதேகத்தை யெடுத்திராநின்ற மக்களனுசரிக்கின்ற பலவித நிலையினும் உடலைக் காத்துக்கொள்ள வேண்டுவது அத்தியாவசியமாதலான், அதற்கு முக்கியமான காரியார்த்தங்களை இங்ஙனங் கூறவந்தமையான் முதலாவது நோயணுகாவிதியென்பதை வெளிப்படுத்துகின்றது. அஃதென்னவெனின்,

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமல்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காமல்-உண்ணுங்கா
னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமேபிணி.

மலசலத்தையடக்காமலும் விந்துவை அதிகமாக நஷ்டப்படுத்தாமலும், உண்ணுமிடத்து நீரைக்காய்ச்சி, மோரைவிளாவி, நெய்யையுருக்கி, உண்ணுதலுமாகிய தன்மையுள்ளவர்களின் நாமத்தையுச்சரிப்பவர்கட்கும் பிணிவிலகும். அன்றியும் மேற்கண்டபதார்த்தங்களின் குணங்களையும், அவைகளைப் புசிக்கவேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசித்து அதனால் கிடைக்கிற சுகத்தை அனுபவிப்பவர்கள் பலவாகச் சொல்லப்பட்ட வியாதிகளைக்காணுதவர்களாய்ப் புத்திரர்களையும், மலையைப்போல், உறுதியுள்ள சரீரத்தையும் இவ்வுலகத்தைச் சிருஷ்டிக்கும் பிரமதேவனைப்போல் மிகுந்த ஆயுளையும் பெற்றுப் பதினுலுலகத்தி லிருப்பவர்களுங் கண்டு களிக்கத்தக்கதாக வாழ்வார்கள். இவ்வாறே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனுரும் 'அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல, துய்க்கதுவரப்பசித்து என்றனர். ஒருவன் முன்னுண்டது அற்றபடியையறிந்த பின் மிகப்பசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணக்கடவன். மாறுகொள்ளாமையாவது, உண்பவன் சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாமையும், சுவை வீரியங்களாற் றம்முள் மாறுகொள்ளாமையுமாம். மாறுபாடில்லாத வுணவுகளேயானுலும் மனம் வேண்டியமட்டிலுண்ணுமல் பிணிவாரா அளவினுலுண்ணல் வேண்டும். இவ்வாறுண்பவன் உயிர், பிணிகளாற் றுன்பமுறுமல் சுகமுறும், ஒவ்வொருவரும் விடியவிழித்துச் சுத்தோதகமெனும் நீராகாரம், அல்லது நல்ல ஜலம் பிரமாணமாகப்பருகிப், பாதசாரியாய் நடந்து, மிதவசனம் வசனித்து, மாலை வெயிலைவிரும்பி, பசும்பாலையிச்சித்து, எண்ணெய் 4-தினத்துக்கொருதரம் அப்பியங்கனஞ்செய்யும்போது வெந்நீரிற்குளித்து, பகற்காலத்திற் சையோகம், நித்திரை இவைசெய்யாமல், தன்வயதுக்கு மேற்பட்ட மாதரையும் இளவெயிலையும் இச்சியாமல், மலசலங்களை அடக்காமல்,சுக்கிலத்தை அடுத்தடுத்து விடாமல்,இடதுகை கீழாகப்படுத்து, மூல

ரோகத்தையுண்டாக்கும் பதார்த்தங்களையுண்ணாமல், புளித்து நீர் போலிருக்குந் தயிரைப்பருகி மூன்நாளிற் சமைத்தகறி அமிர்தத்துக் கொப்பானாலும் புசியாமல், பசித்தபோதே சாப்பிடுதல், அவையாவது தினமிரண்டுதரமுட்கொள்ளல், மாதரை மாதத்திற் கோர்தரஞ் சேர்ந்து, மிகுந்ததாகமுண்டாயினும் போஜனமுடிவிலன்றி முன்பு ஜலபானஞ் செய்யாமல், கருணைக்கிழங்கு தவிர மற்றக் கிழங்குகளைத் தின்னாமல், வாழை இளம்பிஞ்சைப் புசித்து, இரவிற் சாப்பிட்டபின்பு குறுநடையாகநடந்து, ஆறுமாதத்திற் கொருதரம் வாந்தியாகும்படியாயும், நான்குமாதத்திற்கொருதரம் பேதியாகும்படியாயும் மருந்துண்டு ஒன்றை மாதத்திற்கொருதரம் நசியஞ்செய்து,மாதத்திற்குக்குறைந்தது இரண்டுவிசை சௌளஞ் செய்து, மூன்றுநாட்கொருதரம் கண்களுக்கு மையிட்டு, கஸ்தூரி முதலிய வாசனைத்திரவியங்களையும், புட்பங்களையும், நடுராத்திரியில் முகராமல், தூரஸ்திரீ நடக்கும்போது பறக்குந்தூசியும், ஆடு, கழுதை, துடைப்பம், இவைகளாலுண்டாகுந் தூசியும், மேலே படும்படி நெருங்காமல், இரவில் தீபத்தினிழல், மாதர்னிழல், விருட்சநிழல், இவைகளிற் றங்காமல். போஜனம் ஜீரணிக்குங் காலத்திற் சம்போகஞ்செய்யாமல். நித்திரை,போசனம்,மலசலம், சையோகம், அழுக்குவஸ்திரம், சீப்பிட்டுச் சீவும்போது சிந்துகின்ற ரோமம் ஆகிய இவைகளை மாலைக்காலத்தில் நீக்கி, கன்றோடுகூடிய பசுவையும், தெய்வத்தையும், பிதர்தேவதைகளையும், ஆசிரியரையும், அம்மாலைக்காலத்திற் பூசித்து, நகைச்சலமும், சிகைச்சலமும், தெறிக்குமிடத்தி னெருங்காமல் நடந்துவந்தால், நோயை முன்னிட்டுவரும் எமனுக்கு இவனிடத்தில் வேலையில்லையென்று நோயணுகாவிதியிற் சொல்லியபடியால் ஒவ்வொருவரும் இதனை அவசியமாய் அனுபவத்திற்குக்கொண்டுவர லுத்தமம்.

## போஜனகால விதி.

இரண்டுகாலபோஜனமே நன்மை. தப்பி மூன்றுகாலபோஜனங் கொள்ளல் வேண்டுமாயின், சூரியன் இளம்பருவமாயிருக்கும் உதயகாலத்தில் 7½-மணிக்குள்ளும், காலைப்பருவமாகிய உச்சிகாலத்தில், 12-மணிக்குள்ளும் மேற்றிசைக் கடலிற்சார்ந்த பருவமாகிய இராத்திரி 9-மணிக்குள்ளும், பசியாகியதீயை யுடையவர்கள் கொள்வார்கள். சூரியனுதயமாகி 10½-மணிக்குள் உண்கிற

நல்லவுண்டி, தேகத்திற்குப்பொருந்தும். 12-மணிக்குள் உண்கிற உணவு மிதம் என்கிற அளவில் பிணிகளைவிலக்கும்.3½-மணிக்குள் புசிக்கின் ரோகசம்பவமாம், சாயங்கால 6-மணிக்குள் அசனம் உயிருக்கு முடிவைத்தரும், இந்நான்கில் முதல் ½-ம் காலபோஜனமும், மற்றவை அகாலபோசனமுமாம்.

## போஜனஞ் செய்யும் விதி.

ஆதி யினிப்புநடு வாம்பிரநீ ருப்பொடுசா
காதி யுறைப்பப்பா வந்தத்திற் - கோதிறுவர்ப்
பாந்தியுப் பூறியகா யாதிவகைசேருணவை
மாந்ததிசு கத்தையுறு வாய்.

போஜனமுதலில் மதுரவஸ்துவும், மத்தியில் புளிப்பு, உப்பு, உவர்ப்பு, இலைக்கறிகளும், முடிவில் துவர்ப்புசம்பந்தமான புளிப்புத்தயிர், ஊறுகாய்களும், உண்ணல்வேண்டும். அப்படியுண்ணிற் சுகத்தைத்தரும். எவ்வித தேகிகட்கும் முக்கால்வயிற்று உணவேயன்றி முழு உணவில்லை. அதற்கென்ன காரணமென்றால், அன்னம்,பதார்த்தங்கள்கூடி அரைவயிற்று உணவு, பால்,மோர், சலம் கூடி கால்வயிற்று உணவு. இவைபோக இன்னும் கால்வயிற்று உணவுகொள்ளத்தக்க இடத்தைவெளியாக வைக்கவேண்டியது அப்படிக்கு வைக்காவிட்டால் அன்னம் சீரணமாகாது அதைச் சீரணிக்கத்தக்க அக்கினியும், வாயுவும் சஞ்சரிப்பதற்கிடமில்லை துவாரத்தையுடைய தீனிப்பையிற்றங்கிய உணவானது 4-பிரிவையுறும்.அவையாவன, ஒருபங்கு கிருமிகளுககும், ஒருபங்கு மலத்திற்கும், ஒருபங்கு ஜடராக்கினிக்கும்,ஒருபங்கு தேகத்திற்குமாம். ஒருநாளுண்ட வுணவினின்று பிரிவுற்ற அன்னரசமானது, அன்றைக்கு ரசதாதுவை நனைத்து ஊறித்தங்கும். 2-ம் நாளுண்ட அன்னரசமானது அந்த ரசதாதுவிலேற முன்பு ஊறிநின்ற ரசம் இரத்ததாதுவிற்பாயும். இவ்வாறே 3-ம் நாள் மாமிசதாதுவினும், 4-ம் நாள் மேதோதாதுவினும், 5-ம் நாள் அஸ்திதாதுவினும், 6-ம் நாள் மச்சை தாதுவினும், 7-ம் நாள் சுக்கிலதாதுவினுமாகச் சென்று அத்தாதுக்களை விருத்தியடையச்செய்து 8-ம் நாள் தேகத்திற்குக் குன்றாவதவன்மையைக்கொடுக்கும்.

## உண்கலபேதம்.

வாழைவெள்ளைப் பன்னநன்று மற்றிலைகண் மத்திமமா
வாழைவெள்ளி வெண்கலமு மாநன்றுங்-கோழை
கயப்பாண்ட நோய்போங் கருதினிவைக் கெல்லாங்
குயப்பாண்ட மேலசனங் கொள்.

மனோற்சாக போஜனத்திற்கு வெள்வாழையிலையே நன்று, மற்றைய இலைகள் மத்திமமாம். தங்கம், வெள்ளி, வெண்கலம் இவைகளாற்செய்த உண்கலங்கள் மிகவுநலமாம். இவைகளை விட மட்கலமே சிறந்தது; இதிற்புசிக்கில்க்ஷயமும், பாண்டுரோகத்தாற் பிறந்த நீர்ச்சுரப்பும் விலகும்.

## அன்னத்தின் பிரமாணம்.

அன்னமானது கொஞ்சஞ் சுடுகையாயுள்ளபோதே உண்பது உத்தமத்திலுத்தமமாம். அது வாதபித்த கபங்களினாலும் பீனிசத்தினாலும விளைகின்ற நோயையும் அரோசகத்தையும் நீக்கி சரீரத்திற்கு வன்மையைத்தரும். புழுங்கலரிசி அன்னத்தைப் புசிக்கின் வாதகோபமும் பலமும் வலியரோகங்களுமில்லை இது நோயாளருக்குதவும். பச்சரிசி அன்னமானது பலத்தையும், குழந்தைகட்கு மாந்தத்தையுமுண்டாக்கும். பித்தகோபத்தையும் மூத்திரக் கிரிச்சரத்தையும் நீக்கும்.

## சமைக்கும்விதமும் அதன் பயனும்.

பழைய அரிசியை தவிடு நொய் முதலியவை போம்படி நன்றாகத்தீட்டி, முழு அரிசியாக ஆய்ந்தெடுத்து இளவெந்நீராற்கழுவி வஸ்திரத்திற்கொட்டிச் சற்றே ஆறவைத்து ஒரு பாண்டத்தில் அரிசிக்கு மூன்றுபங்கு சலம்விட்டு அடுப்பிலேற்றி அதுநுரை கட்டி கொதிக்கும்போது, அரிசியை அதில்போட்டு முக்காற்பாகமாக வெந்தவுடன் கரண்டியால் துழாவி வடித்துக்கொண்டு மறுபடியுந் தணலில் வைத்துப் பக்குவமாயிருக்கும் சமயத்தில் இறக்கிக்கொள்வதற்கு சுத்த அன்னமென்றுபெயர். இதை நற்கறிகளோடு உண்ணில், வாத, பித்த, சிலேஷ்மம் என்னு முத்தேகிகளுக்கும் முக்கியமாக வுதவும். பத்தியங்களுக்கும் ஆகும். அன்றியும் குடலைப்பற்றிய நோய்கள் முழுமையும் விலகும்; குற்றமில்லை பாலுஞ் சாதமுமாக வுண்ணில், பித்தகோபமும், தாகமும்விலகும்

கொஞ்சம் மந்தஞ்செய்யும் ஆனால் தேகபுஷ்டியும் உடனே வீரிய விருத்தியும் உண்டாகும். இது பால, கவுமார, விருத்தர் பரியந்த முதவும்.

### பசும்பாலின் பத்தியவிதி.

ஆறின் முதனடுவொ காவாப்பா லேவளர்க்கு
மீறிற் சுவையிரண்டேற் றென்பர்கார்ப்-பூறினுறுங்
கண்டொக்கு முண்ணெண் களையொழிபாத் தோடருந்தப்
பண்டொக்கு முண்ணிற் பகர்

பசுவின்பாலைச் சாப்பிடவேண்டுமானல், புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கைப்பு, கார்ப்பு, இனிப்புஎன்னும் 6-சுவையில், 1-வதும், 2-வதும் ஆகிய சுவையுள்ள வஸ்துவுக்குள் எவையும் அனுபானபாகச்சேர்த்துக்கொண்டுண்ணலாகாது. சுக்கிலத்தை விருத்தி செய்யும்படியான கடைசியிற்சொல்லிய கார்ப்பு, இனிப்பு, என்னும் 2-சுவையுள்ள வஸ்துக்களை அனுபானமாகச் சேர்த்துக்கொண்டு உண்ணெனச் சிலர் சொல்லுவர். ஆனாலும், அந்த இரண்டு சுவையில் கார்ப்புள்ள பொருள் நோயுற்றபோது அனுபானமாகக் கொள்ளலாகும். மற்றக் காலத்தில் பாலைத்தனியே உண்ணவேண்டின் அதற்கு அனுபானம் கற்கண்டுபொடி பொருந்தும். 8-வகைக்குற்றங்கள் நீக்கிய அன்னத்துடன் உண்ணவேண்டின் மதுரமுள்ள பழம் அனுபானமாகப்பொருந்தும். ஆதலான் இவ்வாறு முறைப்படி உண்ணல்வேண்டும். அன்னத்திற்கு எப்போதும் குற்றமில்லையாயினும் பாகபேதங்களுண்டானல் 8-வகைத் தோஷங்களுண்டாகின்றன. அவையாவன; 1-வது அன்னத்தோஷம்; கஞ்சி சிக்கிக்கொள்வதாம், அதனல் தாமம், விதாமம் என்கிற அஜீரணங்கள் பிறப்பனவாம். 2-வது பிச்சில் தோஷம் அன்னங்குழைந்து போவதாம்; இதனல் ஜடராக்கினி அணைந்துவிடும். 3-வது அசுசி தோஷம்: மயிர், கிருமி, உமி முதலியவைகளோடு சமைப்பதாம்; இதனல், அரோசகரோகமுண்டாகும். 4-வது கொதித்தோஷம்: நருக்கரிசியன்னமாம்; இதனல் அலசரோகமுண்டாகும். 5-வது சுக்கிலதோஷம்: ஆறி, உலர்ந்த அன்னமாம்; இதனல் விதாமரோகமுண்டாகும். 6-வது தக்கதோஷம்: காந்தின அன்னமாம்; இதனல் ஜீரணதாதுரோகமுண்டாகும். 7-வது விருபதோஷம்:

கொழியலரிசியன்னமாம்: இதனுல் ஆயுள்முதலானவைகள் கெடும். 8-வது அனர்த்துஜதோஷம்: சொந்து, ஜலம்பிறந்து, நூலிழைந்த அன்னமாம்; இதனுல் அதிநித்திரையும், சீதாதுரோகங்களும் உண்டாகும்.

பால் அருந்தற்கு நாழிகை.

ஆப்பான் முகூர்த்தத்து ளேங்கடிகைக் குள்ளுணது
மீப்பான் மனுவர் விருந்தாகு - மூப்பாய்
னஞ்சத்தான் காண்டற் கரியா னகிலமுன
மஞ்சத்தா னுண்டவிருந் தாம்.

பசுவின்பாலைக் கறந்த $1\frac{1}{2}$-மணிக்குள் அல்லது 2-மணிக்குள் உண்ணல்வேண்டும். இவ்வாறுண்டால் அந்தப்பால் தேவாமிர்தத்தை யொப்பாகும். அந்தக் காலத்துக்கு மேற்பட்டபாலையுண்டால் பிரமன் அறிதற்கரிய சிவனுண்ட விஷத்தை யொப்பாகும்.

பதார்த்த வகை.

தண்ணக் குறிஞ்சித் தலத்தா டகிப்பிளப்பை
வண்ணச் சுடரறற்குள் வைத்தாக்கி - யுண்ணற்
கடிக்குப் பசுவினறு மாச்சியுத்தோ டுண்ணிற்
பிடிக்குப பிடிசதையாம் பேசு.

குறிஞ்சிநிலமாகிய மலைச்சாரற் பூமியில் விளைகின்ற துவரம் பருப்பை வெந்நீரிற் போட்டுச் சமைத்துப்போசனஞ்செய்வதற்கு முதலில்,, பசுவினெய்யுடன் அன்னத்திற்கலந்து புசித்தால் ஒரு பிடி அன்னத்திற்கு ஒருபிடி சதைவளரும். அன்றியும் குறிஞ்சிநிலத்திற் பயிராகிற வஸ்துக்களெல்லாம் அதிக பலமுள்ளதாயிருப்பதால் அந்த நிலத்துத்துவரையே விசேடமாகும்.

துவரம்பருப்பின் ரசகுணம்.

நவரை வாழைக் கனிபலவின்கனி நல்ல மாங்கனி
பாலொடு நெய்க்கறி
கவரில் அப்பொழு தேமந்த மாம்பரி காரங் கேட்கும்
பயித்தியக் காரரே
யெவருங் காண்க வறைகுது மன்னத்தி விட்டு ணுங்கறி
தன்னுடன் கூடவே
துவரைநீர்மிள குள்ளியிட்டுக்கொளீர் துட்டவாதமுந்
தூஞ்சிடு முண்மையே.

வாழை-பலா-மா-என்கிற மூப்பழங்களையும் பால்,நெய்கறிகளையும்,மிதமின்றிப் புசிக்கின் உடனே அக்கினிமந்தம்பிறக்கும்.அதை நீக்குவதற்கு வகையறியாது சிகிச்சைவினவுகின்ற பித்தர்களே; கேண்மினே! துவரம்பருப்புக் கட்டிறுத்த ஜலத்தில், மிளகு, வெள்ளைப்பூண்டு முதலிய சம்பாரங்கள் சேர்த்து ரசம்வைத்து அதை நற்கறிகள் சேர்ந்த வுணவுடன் சேர்ந்துண்ணில் மேற்கூறிய அக்கினிமந்தமும் வாதப்பிரகோபமும் நீங்கும் என்பதாம்.

## ஜலம் அருந்தும்வகை.

போஜனாந்தத்தில் திருப்தியாகும்படி வெந்நீரைஒருதரமாக உண்டால் ரூட்சை,வாதாதிக்கம்,விதாகம்,அலசம்,வயிற்றுப் பிசம் ஆகிய இவைகள் போம்.ஆயுசும், சுக்கிலமும் விருத்தியாகும். நீரை அண்ணாந் துண்ணில் பாதிரியவாதமும், குனிந்தருந்தில்இருமலும் உண்டாம். பாத்திரத்தை வாயாற்கடித்து அருந்தில் ஒருரோகமும் இல்லை. இரவில் நீர்கூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன் சூரியோதய காலத்தில் அருந்திற் சுக்கிலவிருத்தியும், உதராக்கினியும், சரீரமுழுதுஞ் தேஜசு முண்டாகும். பயித்தி வாத தொந்தமும் விலகும்.

## கஞ்சி வகை.

துன்பமேயன்றி இன்பந்தராத சுட்க கபரோகிகளுக்கும். சரீர முழுதும் எலும்புதவிர மாமிசப்பசை யிழந்தவர்களுக்கும், பலமற்றுக்கைகால் ஒய்ந்து வீழ்கின்றவர்களுக்கும், யவைக்கோதுவென்னும் பார்லி அரிசிக்கஞ்சியையே மருந்தாகக்கொடுத்தல்வேண்டும் கோதுமைக்கஞ்சியானது வாதசுரம், ஜலதோஷம், கபம், சந்நிபாதம், இவைகளை விலக்கும், தேகத்திற்குவன்மையைத்தரும்.

## தாம்பூல வகை.

வெற்றிலைக்கு முன்னம் வெறும்பாக்கை வாயிவிட்டாற்
குற்றமுறு முறவோர் கூட்டம்போம் - வெற்றிலையை
முன்னிட்டுப் பாக்கருந்து மூதறிவோர் தம்மார்பின்
மன்னிட்டு வாழும்பூ மாது.

தாம்பூலந்தரிக்குமிடத்து முதலில் வெற்றிலையையன்றிப் பாக்கைமாத்திரம் போட்டுக்கொண்டாற் குற்றமுண்டாகும் பந்துக்களின் உறநீவுங்கும்.முன்னதாக வெற்றிலையைத்தின்று பின்பு

முறைப்படிக்குப் பாக்குவெற்றிலைகளைத் தின்னவேண்டும், இவ் வண்ணம் நடத்துகின்ற விவேகிகளிடத்தில் இலட்சுமி நிலைபெ ற்று வாசஞ்செய்வாளென்க: அன்றியும், துவர்த்தல், சொக்குதல், மூர்ச்சைப்புழு, உளுத்ததூள், பிசிபிசிப்பு முதலிய குணங்கள் இயற்கையாகப் பாக்குகளிருப்பதால் இதை முதலிற்றின்றால் உடற்கு அபாயம் நேரிடும் என்பதைக்கருதி,குற்றமுறும் என்றும், பந்துக்களின் கூட்டுறவு நீங்குமென்றும், சுண்ணந்தடவாத புனித முள்ள ஒருவெற்றிலையை மென்று, அந்தச்சாற்றை விழுங்கில் நெஞ்சுலரலும், சுபக்கட்டும் மேற்கூறிய பாக்கின் தோஷங்களும் விலகுவதால் இலட்சுமி வாசஞ்செய்வாளென்றுங் கூறப்பட்டது. பாக்கு, வெற்றிலை, சுண்ணம், இவைகளை ஒன்றுற மெல்லும் போழ்து அதில் நின்று ஊறிய முதல்நீர் நஞ்சு, 2-வது நீர் மிகு பயித்தியம், 3-வது நீர் அமிர்தம், 4-வது நீர் அதியினிப்பு, 5-வது 6-வது நீர்கள் பித்ததோஷம், அக்கினிமந்தம், பாண்டுரோகம் இவைகளையுண்டாக்கும்.

---

## வஸ்திரம் உடுக்கும் விதி.

**சால்வையின் குணம்.**—நல்ல சால்வைக்கு நீரேற்றம்,சிரோ ரோகம்,வலிவாதம் வாதகுன்மம், நளிர்,மூடுபனி இவையொழியும்.

**பட்டுவேஸ்திரத்தின் குணம்.**—உயர்ந்தபட்டுவேஸ்திரத்தினால் பயித்திய சிலேஷ்மம் விலகும். மனக்களிப்பு, ஞானம், வியர்வு தேஜசு, இவையுண்டாகும்.

**வெண்பட்டுவேஸ்திரத்தின் குணம்.**—வெள்ளைப்பட்டு வஸ்தி ரத்தால் அதிசுரமும் குளிரும்,வாதநோயும்போம்,ஸ்திரீவசியமும், ஒளிவும், வனப்பும் உண்டாம்.

**நார்மடியின் குணம்.**—நார்மடிக்குக் கபக்கட்டு, சலதோஷம் குடல்விருத்திவாதம், சந்நிபாதசுரம் ஆகிய இவைபோம். சரீரஞ் சுசிகரமாம்.

**வெள்ளை வஸ்திரத்தின் குணம்**—வெண்துகிலுக்கு வாதா திதோஷங்களும், வியர்வும் விலகும். ஆயுசுவிருத்தி,லக்ஷ்மிவிலா சம், வனப்பு, மகிழ்ச்சி, அறிவு, பலம் இவையுண்டாம்.

**சிவப்புவஸ்திரத்தின் குணம்.**—அதிபயித்தியம்,உட்சூடு,தரு ணசுரம், வமனம் அரோசகம்,சிலேஷ்மகோபம்,அலசம் என்னும்

இவைகளில் ஏதேனும் ஒருரோகம் அனுசரித்திருக்குங் காலத்தில் மிகவும் சிவந்தவஸ்திரம் உடுக்கலாகாது. உடுத்தால், மேற்சொல்லிய ரோகங்கள் விருத்தியடையும்.

**மஞ்சள் வஸ்திரத்தின் குணம்.**—மஞ்சள் வஸ்திரத்திஞல், வாதநீர்ச்சுருக்கு, இருமல், விஷசுரம், மாருத்திணவு, தனிச்சுரம், மலபந்தம் இவைகள் நீங்கும்.

**பச்சைவஸ்திரத்தின் குணம்.**—பச்சை வஸ்திரத்திஞல், உட்சூடும், சிலேஷ்ம தோஷமும் போம். கண்ணுக்குக் குளிர்ச்சியும் தேகப் பூரிப்பும் உண்டாம்.

**கறுப்பு வஸ்திரத்தின் குணம்.**—கறுப்பு வஸ்திரத்திற்கு, இருமல், சுரம், மகாசர்ப்பநஞ்சு, அக்கினி மந்தம், பயித்தியதோஷம் ஆகிய இவைகள் ஒழியும்.

**அழுக்குவஸ்திரத்தின் குணம்.**—அழுக்கு வஸ்திரம்தரிப்பவருக்கு, பற்பல துன்பம், மிகுநளிர், துயரம், நமைச்சல், கிரகசங்கை, நாணம் ஆகிய இவைகள் உண்டாகும். சரீரவொளியும் நுட்பமாகிய அறிவும் விலகும்.

**கம்பளத்தின் குணம்.**—சீதளக்காற்றையும், மூடுபனியையும் விலக்கி உடலைக் காக்காநின்ற பெரியகம்பளம் அசிர்க்கரம், அசீரணங்கள், திரிதோஷ கிரகணி, கீல்பிடிப்பு, அதிசாரம், கறுப்பாக ஒழுகுகிற சீழ் இவைகளை நீக்கும்.

**முண்டாசு கவசம், நடுக்கட்டு இவைகளின் குணம்.**—சிரசிற் கட்டுகின்ற முண்டாசு, வாத பித்த தொந்தத்தைப்போக்கும். இவைகளில் வெண்துகில் சிரேஷ்டம்.

---

## யாதர் தருமம்.

உலகத்தில் பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்காச்சிரமத்துள்ளும், கிரகஸ்தாச்சிரமமென்கிற இல்லறத்திலிருப்போர்; யாகங்களிஞலேதேவர்களையும், சந்ததிகளிஞலே பிதுர்க்களையும், வேதாத்தியயனங்களிஞலே முனிவர்களையும், அன்னங்களிஞலே அதிதிகளையும், பூத பலி கருமத்திஞலே

பூதங்களையும் திருப்தி செய்வதாலும்;சிறந்தோராவர்''இல்வாழ்வா னென்பா னியல்புடையமூவர்க்கு, நல்லாற்றினின்றதுணை'' குருவினிடத்தில் வாசிப்போரும் விரதங்காப்போருமாகிய பிரமசாரியரும், காட்டினிடத்தேபோய் மனைவியோடு தவஞ்செய்வோராகிய வானப்பிரஸ்தரும், சகல பற்றுக்களையும்விட்ட சந்நியாசிகளும், தீர்த்தயாத்திரை, க்ஷேத்திரயாத்திரை செய்வோரும், பசி நோய் குளிர் முதலானவற்றால் அவரவர் ஒழுக்கங்களுக்கு இடையூறு வராமல் நல்வரவுவினவுதல், இனியவார்த்தைபேசல், ஆசனம், போஜனம், சயனஸ்தலம், மருந்து முதலானவைகள் தத்தமக்கு இயன்றவரையில் அவர்களுக்கு கொடுத்து,திருப்திசெய்வதாலும், ''இல்லற மல்லது நல்லற மன்று'' இல்லறமே மேலானதென்று சுருதிஸ்மிருதி இதிகாச புராணங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றபடியால் தத்தமக்குத் தகுந்த காரியங்களினாலே திரவியசம்பாதனஞ்செய்து சத்தியுள்ளமட்டும் ஆவசியகம் நடத்திவரவேண்டியது.

''மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடம்
சொல்லாது தெற்றிற்று நின்று.''

என்றபடி இல்வாழ்க்கை யென்னும் தருமசுபாவத்தையுடையபெருமை தங்கிய வண்டியானது கணவனிடத்து நீங்காமற்பொருந்திய அன்பினையுடைய மனைவியும், மனைவியினிடத்தன்புள்ளகணவனும் சேர்ந்து இழுத்தால் நடக்குமேயல்லாமல்,இவ்விருவரன்றி ஒருவரால் இழுக்கப்பட்டால் நடவாமல் அது தடைப்பட்டு நின்று விடும். மேலும்,

''காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தமய் நோக்கரூன்
கண்ணிரண்டு மொன்றையே காண்.''

77400

என்றபடி,இரண்டு கண்களுஞ் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பதுபோல நாயகனும் நாயகியும் ஒரு மனதாய் இல்லறமாகிய சற்கருமங்களைச் செய்தால்மாத்திரம் அவைகள் ஒழுங்காய் நிறைவேறு

மேயல்லாமல், அவர்களிருவரும் வேறுபட்ட மனதோடு எந்தக் காரியங்களைச் செய்தாலும் அவைகள் சற்றுவதுநிறைவேறமாட்டா

"அழகின் வீக்கஞ் சிறி தில ராயினும்
மொழிவில் நோய்நரப் புற்றவ ராயினும்
கிழவுற் றன்மைய ராயினும் கேள்வரைப்
பழுது சொல்கலர் பண்ணபின் முயங்குவார்."

என்றபடி, நற்குணமுள்ள பதிவிரதா ஸ்திரீ தம் கணவர் சற்றுவது அழகில்லாதவராயும், பெரிய வியாதியினால் பீடிக்கப்பட்டு வருந்துபவராயும், நித்தியதாரித்திரராயும், வயதில்முதிர்ந்த விருத்தாபியராயு மிருந்தாலும் அவைகளுக்காகக் கொழுநன்பால் யாதொரு குறையையும் எண்ணமலிருப்பள்.

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிபொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விரன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்."

என்றபடி, கணவனிடத்தில் தாயைப்போல் தயையுள்ளவளாயும் தாதியைப்போற் பணிவிடை செய்பவளாயும், இலக்குமியைப் போல் அழகுள்ளவளாயும், பூமியைப்போல் பொறுமையுள்ளவளாயும், சயனிக்குங் காலத்தில் வேசியைப்போல் இன்பம் விளைப்பவளாயும், யுக்தி சொல்வதில் ஒரு விவேகியான மந்திரியைப்போன்றவளாயும் நடந்துகொள்பவளே பெண்ணும்.

"மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினு மில்" என்றபடி, இல்லறத்துக்குத் தக்கநற்குண நற்செய்கைகள் மனையாளிடத்தில் இல்லையாகில் அவ்வாழ்வுசெல்வத்தால் எவ்வளவு பெருமையை உடையதாயினும் பயனடையாது.

"இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயி—னில்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்."

என்றபடி, நற்குண நற்செய்கையுடைய மனையாள் வீட்டிலிருப்பாளாகில் இல்லாத பொருள் ஒன்றுமில்லை. அப்படிக்கில்லாத வீடு புலிவசிக்கும் பாழும்புதருக்குச்சமம். "பெண்ணிற்பெருந்தக்க

யாவுள கற்பென்னுந், திண்மையுண்டாகப் பெறின்" என்றபடி, ஒருவன் பெறும்பேறுகளுக்குள் கற்புடைய மனையாளைப்பார்க்கினு மேலான தோன்றுமில்லை.

"நண்ணு கற்புடைய நங்கையர் சீறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றது
எண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணி யத்தல மென்று புகல்வரால்."

என்றபடி, கற்போடு கூடிய ஸ்திரீகளுடைய பாதங்கள் பூமியில் எந்த விடத்திற்பட்டாலும், அப்படிப்பட்ட இடங்கள்மற்றெல்லாப் புண்ணிய ஸ்தலங்களைவிட உயர்ந்ததாகும். கற்புடைய மாதர்கள் ஸ்நானஞ்செய்யுமிடமேபலநதிகளினுஞ்சிறந்தபுண்ணியநதியாகும்.

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பினர் கொண்ட காதல னுருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துவார்."

என்றபடி, கற்புடைய மாதர்கள் பிறந்த குலமும் புகுந்தகுலமும் மகிழ்ந்து சுவர்க்க லோகத்தையடையும்.

"பொருவில் கற்பின் வழீ இயபுன் மங்கையர்க்
குரிய மூன்று மரபிள் ளோரையும்
வெருவந் தேங்க விழுங்கி யுமிழ்கிலா
வெரியுந் தீநர கிற்குடி யேற்றுவார்."

என்றபடி, கற்புநிலை தவறிய மாதர்கள் பிறந்தகுலமும் புகுந்தகுலமும் வசையடைந்து கெடுவதுடன், அறம்பொருள் இன்பம் என்னும் மூன்று பயனையுமிழந்து தாமும் நரகத்துன்பத்தைஅனுபவித்துத் தங்கள் மூன்று தலைமுறையிலுள்ளோரையும்எரிகின்ற நரகத்திற்குக் குடியேற்றுவார்கள்,

ஆகையால் மாதா பிதா முதலிய போஷகர்கள் மாதர்களுக்குப் பாலியவயதிலேயே சூரிய உதயத்துக்கு முன்னே நித்திரைவிட்டெழுதல், சவுசஞ்செய்தல், தந்தசுத்திசெய்தல், வீடுவிளக்கஞ்செய்தல், பாத்திரஞ் சுத்திசெய்தல், ஸ்நானஞ்செய்தல் மஞ்சளணிதல், புடவை தோய்த்துலர்த்தல், பருவத்துக்குத்தக்கஆடையாபரணங்களணிதல், சமையல் செய்தல், பரிமாறுதல், கணவனுக்குப்

பணிவிடை செய்யுமுறைமை, மாமியார் மாமனர் முதலான பெரியோர்களை உபசரித்தல், யாவரிடத்திலும்கடுஞ்சொற்கள் பேசாது இன்சொற்கள் பேசுதல், எச்சில், தீட்டுக்கள், ஆசார அனுசாரங்கள், புண்ணியபாவங்கள், சுவர்க்க நரகபலங்கள் முதலாகியபதிவிரதாதருமங்களை எல்லாங் கற்பித்தல்வேண்டும்.

மாதர்கள் தினந்தோறும் அருணோதயத்தில்நித்திரைவிட்டெழுந்து கணவனை வணங்கி, அவனுடைய ஆயுள் விருத்திக்காக,கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டே அதிகாலையிலெழுந்து தங்கள் மனைவாழ்க்கைக் குரிய இஷ்டதெய்வங்களைப்பிரார்த்தித்துமுடிந்தபின் சலமல விசர்க்கஞ் செய்து விதிப்படி சவுசமும், தந்தசுத்தியுஞ் செய்துகொண்டு பசுவின்சாணத்தைப்புதிய ஜலத்தினாலே கரைத்து வீட்டின்முற்றத்திலும் வாசற்படியிலும் வெளிப்புறத்திலும், பின் புறத்திலும் தெளித்தல்வேண்டும். ஒருபொழுதும்சூரிய உதயமான பின்பும், எஜமானராகிய மணவாளர் புறம்பேபோன பின்பும், முற்றத்தில் சாணந்தெளித்தலும்,மனை மெழுதலும்கோலமிடுதலும் செய்யப்படாது. அடுப்புச் சாம்பலைவாரித் தூரத்திலே கொட்டல்வேண்டும். சூரியனுதித்தபின்பு சாம்பலைக் கொட்டலாகாதுபின்பு ஒருபாத்திரத்தில் ஜலங்கொண்டுவந்து வைத்துக்கொண்டுவீட்டின் வெளிப்புறத்தைத் துடப்பத்தினாலேபெருக்கிக் குப்பைகளைத்தூரத்திலே போக்கித்துடைப்பத்தைக்கழுவி ஓரிடத்திலே வைத்து விட்டுக் கை, கால்களைக் கழுவிக் கொண்டு,வெளிவாசற்படியை வேறு துடைப்பத்தினாலேபெருக்கிப் பசுவின்சாணங் கரைத்த ஜலத்தினாலே மெழுகி. மெழுகிய சுருணையைப்பிழிந்து இரண்டாமுறை மெழுகுவதுபோலச் சாணத்தின்பற்று விடும்படி மறுக்கிப் பின்பு தங்களுடைய விரல்களினால் அல்லது பலவிசித்திரவேலைகளமைந்தழுங்கிற்குழாய்களினால்கோலந்தீட்ட வேண்டும்.சிலசமயம் குணபேதத்தால் இடுங்கோலம் பழுதானால் மறுபடியும் கலைக்கலாகாது அவசியமாய் கலைக்க நேரிட்டால்வலக்கையால் துடைக்கவேண்டும் இடக்கையாலும் பாதங்களினாலும் துடைத்தல் தாங்கள் பூசிக்கும் இஷ்ட தேவதைகளுக்கு நேர் விரோதிகளாவார்கள்.

அதன்பின்பு நடை கூடம், தாழ்வாரமுதலிய இடங்களையும் போஜனஞ்செய்யும் இடத்தையும் பெருக்கிக் கைகழுவி பாத்திரங்

களையெல்லாந் தொட்டிமுற்றத்திலே கொண்டுபோய் வைத்து விட்டு, சமையல்செய்யுமிடத்தையும் பெருக்கிக் குப்பைகளைவாரிக் கொட்டிவிட்டுச் சமையல் செய்யுமிடத்தையும், போஜனஞ் செய்யுமிடத்தையும் கீறல் விழாமல் மெழுகி மறுக்கி, பெருக்கிக் கோலம் போடல்வேண்டும். வெள்ளிக்கிழமையிலும், செவ்வாய்கிழமையிலும், அமாவாசையிலும், பௌர்ணமியிலும், மாசப்பிறப்பிலும், சிராத்த தினத்திலும், விரததினங்களிலும், வீடெங்கும் மெழுகல் வேண்டும், சிராத்த தினத்திலும், இறந்த தினத்திலும், பத்தாந்தினத்திலும், ஒரேதடவை மெழுகல்வேண்டும் இரண்டாமுறை மறுக்கலும் கோலம்போடலுமாகாது, அமாவாசை தினத்தில் கோலம் மாத்திரம் போடலாகாது. மற்றைத் தினங்களி லெல்லாம், மெழுகி மறுக்கிப் பெருக்கிக் கோலம் போடல்வேண்டும்.

செங்கற்பதித்த நிலத்தையும், சுண்ணச்சாந்துபூசிய நிலத்தையும், மெழுகினாலும் மெழுகலாம். ஜலத்தினாலே கழுவினாலும் கழுவலாம். மெழுகுவதே உத்தமம். பின்பு தாம்பிரப்பாத்திரங்களைப் புளியினாலும், பித்தளைப் பாத்திரங்களையும் வெண்கலப் பாத்திரங்களையும் சாம்பலினாலும், ஈயப் பாத்திரங்களைப் பசுவின் சாணத்தினாலும், கற்பாத்திரங்களையும் மரப் பாத்திரங்களையும் வைக்கோலினாலும் தேய்த்து ஜலத்தினாலே அலம்பிக்கொள்ளல் வேண்டும் மண் பாத்திரங்களை ஸ்நானஞ் செய்யுமுன்னே தொடலாகாது. பின்பு முற்றத்தையும், வீட்டின் பின்புறத்தையும், வேறு துடைப்பத்தினாலே பெருக்கிக் குப்பைகளைத் தூரத்திலே கொட்டிவிட்டு, துடைப்பத்தைக் கழுவி ஓரிடத்திலே வைத்துவிட்டுக் கை கால்களைக் கழுவல் வேண்டும். அதன்பின்பு மஞ்சளையும், குங்குமத்தையும், குடத்தையும், ஜலம் வடிக்கும் வஸ்திரத்தையும் எடுத்துக்கொண்டு நதி முதலியவைகளுக்குப் போய், புடவையைத் தோய்த்துக் குளித்து, மஞ்சளரைத்துப் பூசிக்கொண்டு, ஸ்நானஞ்செய்து விதிப்படி ஈரத்தைத் துவட்டி, மடி யுடுத்திக்கொள்ளல்வேண்டும். அல்லது ஈரப்புடவையைப் பிழிந்து, உடுத்திக்கொண்டு, நெற்றியிலே குங்குமந்தரித்து, குடத்தைக் கழுவி, வஸ்திரத்தினாலே ஜலத்தைக் குடத்தில் வடித்தெடுத்து, மூடிக்கொண்டு வீட்டுக்குவந்து, வேறு ஜலத்தினாலே கால்கழுவி, உள்ளே புகுந்து குடத்தை இறக்கிவைத்து, உலர்ந்த மடிப்புடவையை உடுத்திக்கொண்டு, ஈரப்புடவையை உலர்த்தல்வேண்டும். தலை

மயிரை விரித்துக்கொண்டும், நெற்றியிலே குங்குமம் இல்லாமலும், பாக்கு வெற்றிலை தின்றுகொண்டும் ஜலமெடுத்து வரலாகாது. சிரசிலும் ஜலங்கொண்டு வரலாகாது. புண்ணிய நதிகளில் ஜலத்தை வடித்தெடுக்கலாகாது.

வெள்ளிக்கிழமை, செவ்வாய்கிழமையில், எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானஞ்செய்தல் வேண்டும். சரீர சவுக்கிய மில்லாதிருந்தால் ஸ்நானஞ்செய்தவர் சுத்திசெய்த பாத்திரத்தில்வைத்த வெந்நீரை ஒரு பாத்திரத்தால் வேறு பாத்திரத்தில் விட விட எடுத்து ஸ்நானஞ்செய்தல்வேண்டும், வெந்நீரிலும் ஸ்நானஞ்செய்யக் கூடாதிருந்தால்,கழுத்து வரையில் குளித்தல்வேண்டும். அதற்குஞ் சரிப்படாவிட்டால், கை, கால், முகம் வாய்களைக் கழுவிக்கொண்டு, ஈரத்துணியினாலே சரீரமுழுதும் ஈரம் படும்படி துடைத்துவிட்டு,வேறு மடிப்புடவை உடுத்திக்கொள்ளல்வேண்டும். தன்னுடைய கணவன், குழந்தைகள் அல்லாத பிணியாளர், இழிந்த ஜாதியார், ஜனனமரண ஆசூசமுடையவர், நாய், கழுதை, பன்றி, கழுகு, காகம், சோழி முதலானவைகள் மேலேபடினும், பிணப்புகை மேலே படினும், சுடுகாட்டிற் போகினும், எலும்பை மிதிக்கினும், ஸ்நானஞ்செய்தல்வேண்டும்.

அரிசியையும், பருப்பையும், கல்லு மயிர் உமி முதலானவைகளில்லாமல் சோதித்துக் கொள்ளவேண்டும். கறிகளை அலம்பி, அரிவாளினால் திருத்தி, திரும்பவும் அலம்பி வைத்துக்கொள்ளல் வேண்டும். அம்மி குழவிகளை நன்றாகத் தேய்த்துக் கழுவி அரைக்கவேண்டியவைகளை அரைத்துக்கொண்டு முன்போலக் கழுவிவிடல் வேண்டும். புழுக்கள், பூச்சிகள் இல்லாத நல்ல விறகுகளை எடுத்துக் கொள்ளல்வேண்டும், குழல் கொண்டாயினும், விசிறி கொண்டாயினும், அடுப்பில் நெருப்பு மூட்டி உலைநீர் வைத்தல் வேண்டும். ஆடையினாலும், முறத்தினாலும் வீசியும், வாயினால் ஊதியும், நெருப்பு, மூட்டலாகாது. அரிசியைப் பாத்திரத்திலே போட்டு ஜலம் வார்த்து மூன்றுதரம் களைந்து, கழுநீரைப் பூமியில் சிந்தாமல் வேறு பாத்திரத்தில் ஊற்றிவிட்டு, களைந்த அரிசியைக் காய்ந்த உலைநீரிலே இட்டுப் பக்குவமாகச் சமைத்தல்வேண்டும்.

கறி, குழம்பு, இரசம் முதலானவைகளையெல்லாம் செவ்வையாகப் பாகஞ் செய்தல்வேண்டும். அன்னத்துக்கும், கறிகளுக்கும்,

வெவ்வேறு அகப்பை வைத்துக்கொள்ளல் வேண்டும். பால், தயிருக்கு, வெவ்வேறு பாத்திரங்கள் வைத்துக் கொள்ளல்வேண்டும். அன்னத்தையேனும், கறிகளையேனும், தொட்டாற் கை கழுவாமல், பால் தயிர் முதலானவைகளைத் தொடலாகாது. எந்தப் பதார்த்தங்களையும் மூடாமல் வைக்கலாகாது. அன்னங் கறி முதலிய பதார்த்தங்களையும், மண் பாத்திரங்களையும், தாழ்ந்த ஜாதியாரும், அந்நிய சமயத்தாரும், ஆசூசமுடையவரும், ஊரஸ்திரீயும் பார்க்கலாகாது. சமையல் செய்யுமிடத்தில் மூக்குநீர் சிந்தலும், இருமுதலும், தலைசொறிதலும், தேகத்தில் அசுத்த ஸ்தானங்களைத் தொடுதலும் ஆகாது. தேகத்தில் அசுத்த ஸ்தானங்களைத் தொட்டால் உடனே கை கழுவல் வேண்டும். கைகழுவிய போதெல்லாம் ஈரந் துவட்டும்பொருட்டுத் தோய்த்துலர்ந்த ஒரு துண்டு வஸ்திரம் சமையல் செய்யுமிடத்திலேயே வைத்துக்கொள்ளல்வேண்டும்.

குடித்து மிகுந்த ஜலத்தையும், கால் கழுவி மிகுந்த ஜலத்தையும், வேறொன்றுக்கும் உபயோகிக்கலாகாது. போசனஞ்செய்யுமிடத்தைத் துடைப்பத்தினாலே பெருக்கிக் கை கழுவிப்பெருக்கின இடங்களில் ஜலந்தெளித்துப் போசனத்துக்கு விதிக்கப்பட்ட இலைகளைக் கழுவி, அவ்விடங்களிலே முறையாகப் போடல்வேண்டும். வாழையிலையாகில் தண்டுரியாமல் அதனடி வலப்பக்கத்திலே பொருந்தும்படி போடல்வேண்டும். ஒவ்வொரு இலைகளிலும் ஜலத்தினாலே புரோக்ஷித்தல்வேண்டும். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒவ்வொரு ஜலபாத்திரம் வலப்பக்கத்தில் வைத்தல்வேண்டும். பின்பு இலவணம், பருப்பு முதலிய கறிகளை வலப்புறந்தொடங்கி, அகப்பையினாலே அன்னத்தைப் பரிமாறல் வேண்டும். அன்னம், கறி, நெய் முதலியவைகளை மண்பாத்திரங்களிலே வைத்துக்கொண்டு பரிமாறலாகாது. வெண்கலப்பாத்திரம் ஈயப்பாத்திரம் ஈயம்பூசிய பித்தளைப்பாத்திரம், கற்பாத்திரம், மரப்பாத்திரம் இவைகளிலே வைத்துக்கொண்டு பரிமாறல் வேண்டும். ஊறுகாய், வற்றல், வடகம், கனிகள், பணிகாரங்கள் முதலியவைகளை கையாற் பரிமாறலாம் நெய்யில்லாமல், பிராணாகுதி செய்யலாகாதாகையால் அன்னம் பரிமாறியவுடனே நெய்யும் பரிமாறல்வேண்டும்.

அன்னம் கறி முதலியவைகளைச் சிந்தாமலும், அன்போடும், வணக்கமாகவும், பரிமாறல்வேண்டும். நெய்யையேனும், இலவணத்தையேனும், உச்சிட்டத்திலே பரிமாறலாகாது. இலவணம் வேண்டுமாயின் பதார்த்தங்களிலே கலந்து பரிமாறல்வேண்டும். போசனம் செய்பவர்கள் விருப்பத்துடனே புசிப்பதைக் குறிப்பினாலே அறிந்துகொண்டு பரிமாறல்வேண்டும். போசனஞ்செய்தவர்கள் எழுந்திருப்பதற்குமுன், அவர்கள் கை முதலானவைகள் சுத்திசெய்வதற்குப் பாத்திரங்களில் ஜலம் முகந்து வைத்துவிடல் வேண்டும். பின்பு இலைகளை எடுத்தெறிந்து விட்டுக் கைகளைக் கழுவிக்கொண்டு, உச்சிட்ட ஸ்தானத்தைப் பசுவின் சாணங்கரைத்த ஜலந்தெளித்து, மெழுகும்போது மத்தியிலே கையை எடுக்காமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும், புள்ளியில்லாமலும் மெழுகி வெளியேபோய்க் கை கழுவிவிட்டுப் பின்னும் அந்தஸ்தானத்திலே ஜலம் தெளித்து விடல் வேண்டும். வெற்றிலை பாக்குத் தின்றுகொண்டு சமையல் செய்தலும் பரிமாறுதலுமாகாது. வீட்டுக்கு வெளிப்புறத்திலேபோனால் கால் கழுவாமல் உள்ளேபோகலாகாது. அன்னம், கறி, குழம்பு, இரசம், நெய் இவைகளை அகப்பையினாலே எடுத்துக்கொண்டு அவ்வகப்பையை அந்தப்பாத்திரத்தின் மேலேயாவது பக்கத்திலேயாவது வைத்தல் வேண்டும். பதார்த்தங்களை எடுக்கிற காலந்தவிர மற்றக்காலங்களில் பதார்த்தங்களுடனே அகப்பையை வைத்தலாகாது. தாம்பிரப் பாத்திரங்களில் பால், நெய், தயிர் இவைகளை வைத்தலாகாது ஈயப்பாத்திரங்களில் பால் வைத்தலாகாது, தாம்பிரப்பாத்திரங்களை தேவகாரியம் பிதுர்க்காரிய முதலிய வைதிககாரியங்களுக்கும், தண்ணீர் மாத்திரம் சாப்பிடுவதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். வெந்நீர் சாப்பிடுவதற்கும், எச்சிற்கை கழுவுவதற்கும், கால் கழுவுவதற்கும், உபயோகப்படுத்தலாகாது.

ஈயப்பாத்திரங்களில் வெந்நீர், தண்ணீர், பால் இவைகளை சாப்பிடலாகாது. வெண்கலப் பாத்திரங்களில் இளநீர்ஜலஞ்சாப்பிடலாகாது, வெண்கலப்பாத்திரத்தினாற் கால் கழுவலாகாது. தமது பந்திக்கு உரியவரல்லாதவருக்கு அன்னம் கறி பரிமாறினால், கை கழுவாமல் வீட்டிலுள்ள அன்னம் கறிகளைத்தொடலாகாது.

அவருக்குப் பரிமாறி மிகுந்த அன்னம் கறிகளை அவரின்மேலான சாதியாருக்குப் பரிமாறுதலாகாது. அவருக்கு எடுத்துப் பரிமாறிய பாத்திரங்களைச் சுத்திசெய்யாமல்உள்ளேசேர்க்கலாகாது. அவர் புசித்த உச்சிட்ட ஸ்தானத்தை அவளே சுத்திசெய்து, ஜலபாத்திரத்தைக் கவிழ்த்து விடும்படிசெய்து,புறமும்உள்ளும் ஜலம் விட்டு அலம்பி எடுத்தல் வேண்டும். எல்லாரும் போசனஞ்செய்த பின்பு, தான் போசனஞ் செய்துகொண்டு, பற்றுப்பாத்திரங்களையெல்லாஞ் சுத்திசெய்து வைத்துவிட்டுத் தாம்பூலந்தரித்துக்கொள்ளல்வேண்டும். புசிக்கும்போது மத்தியிலே எழுந்துவிட்டுத் திரும்பவும் அவ்வன்னத்தைப் புசிக்கலாகாது.

சிராத்த தினங்களிலும், விரததினங்களிலும், புண்ணியதினங்களிலும், பகலில் நித்திரை செய்தால், ஸ்நானஞ்செய்யாமல் பாத்திரங்களைத் தொடலாகாது. மற்றைத் தினங்களில் நித்திரை செய்தால் கை, கால், முகம், வாய் முதலானவைகளைக் கழுவிக்கொண்டு பாத்திரங்களைத் தொடல்வேண்டும். எப்போதும் பகலிலே நித்திரை செய்யாமலிருப்பதே உத்தமம். தேவகாரியம் பிதுர்காரியங்களுக்கு கன்னிகைப்பெண்கள் சமையல் செய்தலும், பரிமாறுதலுமாகாது. சாயங்காலத்திலே வீட்டின் உள்ளும் புறமும் பெருக்கி, ஜலந்தெளித்துவிட்டு,வாய்கொப்பளித்துக் கைகால் கழுவிக்கொண்டு, விளக்கேற்றிவைத்து, குங்குமமும் புஷ்பமுஞ்சாத்தி,இலக்ஷுமியைத் தியானித்து,நமஸ்கரித்தல்வேண்டும்.

பின்பு சமையல் செய்துமுடித்து, எல்லாரும்போஜனஞ்செய்த பின்பு தானும் போசனஞ்செய்துகொண்டு, மிகுந்த அன்ன முதலியவற்றை எடுத்து வெண்கலப் பாத்திரத்திலேனும் ஈயப் பாத்திரத்திலேனும் கற்பாத்திரத்திலேனும் மரப்பாத்திரத்திலேனும் வைத்து அன்னத்தில் ஒரு சுக்குத்துண்டைப்போட்டு,ஆறியவெந்நீரை விட்டு மூடிவைத்து மண்பாத்திரங்களையெல்லாம் சுத்தி செய்து கவிழ்த்துவிட்டு, மற்றைப்பற்றுப் பாத்திரங்களிலே பற்றுக்கள் ஊறி இருக்கும்படி ஜலம்விட்டு வைத்துக் கதவு பூட்டிவிட்டுத் தாம்பூலந் தரித்துக்கொண்டு,கணவனுக்கு வேண்டிய பணிவிடை செய்து, கணவன்நித்திரை செய்தபின் தானும் நித்திரைசெய்தல் வேண்டும்.

திரும்பவும் அருணோதயத்துக்கு நித்திரைவிட்டு எழுந்து, மேற்கூறியபடி வீட்டுவேலைகளைச் செய்துமுடித்து, சரீரசுத்திசெய்துகொண்டு, குழந்தைகளுக்குப் பழைய அன்னங் கறிகளைப் பரிமாறி, அவர்கள் புசித்த பின்பு விசேஷ தினமில்லாதிருந்தால் தானும் போஜனஞ் செய்துகொண்டு பாத்திரங்களை சுத்திசெய்து கவிழ்த்துவிட்டு, ஸ்நானத்திற்குப் போகவேண்டும். ஸ்நானஞ் செய்துவந்தபின் கிரமப்படி சமையல் முதலிய காரியங்களைச்செய்தல்வேண்டும். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றபடி கணவனுடைய வார்த்தைக்கடங்கி, அதற்கிசைந்து நடந்து, அக்கணவனையே தெய்வமென்று மனப்பூர்த்தியாய் எண்ணி, அவனை மேன்மைப் படுத்துவதே கற்பெனப்படும். (இது ஜாதி, மதம் இவைகளின் பேதத்தால் மாறுபடாமல் சகலமான ஸ்திரீ ஜனங்களும் வழுவாமல் அநுசரிக்க வேண்டிய விதி.) மேலும்,

"நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனும்
மேலாறு மேலுறை சோரினும்—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததே இல்"

என்றபடி, தன் கணவன் வீடானது நான்கு பக்கங்களிலும் வழியுள்ளதாயும், மிகவுஞ் சிறியதாயும், மேலே கூரையிலிருந்து மழைத்துளிகள் ஒழுகும்படியான துவாரங்களுள்ளதாக விருந்தாலும், அவ்வித தரித்திரத்தைக்குறித்துச் சிந்தியாமல் தன் புருஷன் மீது அன்புவைத்து அவனைவழிபட்டு, தருமம்முதலிய மேலான காரியங்களை இயன்றமட்டும் செய்ய வல்லவளாயும் தான் வாழும் ஊரிலுள்ளோர் தன்னைப் புகழ்ந்துகொண்டாடும்படி சிறந்த கற்புள்ளவளுமான மனைவி வசிக்கும் இடமே வீடென்று சொல்லப்படும். மேலும்,

"கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வாறதவ மாற்றுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே."

என்றபடி, ஒரு குற்றமற்ற பதிவிரதா ஸ்திரீக்குத் தருமம், தவம், தேவதார்ச்சனை முதலாகிய இவ்வித விரதங்களெல்லாம் தன்கண

வனுடையவார்த்தையை மீறி நடக்காமலிருப்பதே யொழிய, வேறே யெவ்விதமான விரதமுங் கிடையவே கிடையாது. மேலும் "தெய்வந் தொழா அள் கொழுநற்றொழுதெழுவாள்-பெய்யெனப் பெய்யுமழை." என்றபடி ஒரு ஸ்திரீயானவள் தவம், தானம், தருமம், விரதம், பூசை, தீர்த்தயாத்திரை, க்ஷேத்திரயாத்திரை, இதர தெய்வங்களைத்தொழல் இவைகளைப் பார்க்கிலும், தினந்தோறும் நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போது, தன் கணவனையே தெய்வமாகப் பாவித்துத் தொழுதுகொண்டு வருவாளானால், அப்படிப்பட்ட பதிவிரதையின் வாக்கால் "பெய்" என்று சொன்ன மாத்திரத்தில் மழை பெய்யும். மேலும்,

"தாதை தன்னினுந் தன்னை தன்னினும்
மாதர் மென்மொழி மைந்தர்கள் தம்மினும்
கோதில் கற்புடை யார்தம் கொழுநர்பால்
காதல் கூர்ந்து களிமகி ழெய்துவார்."

என்றபடி, மாதா, பிதா, சகோதரர், பிள்ளைகள் இவர்களைப்பார்க்கிலும் கணவனிடத்தில் அன்புவைத்து ஒழுகல் வேண்டும். கணவன் உள்ளத்தில் விரும்பியவைகளைச் சொல்லு முன்னே குறிப்பினால் அறிந்து செய்தல்வேண்டும்.

"கொழுநன் உண்டபின் சானுகர் கொள்கையும்
விழிது யின்றபின் துஞ்சலும் மென்றுயில்
எழுதல் முன்னம் எழுதலு மேயன்றோ
பழுதில் கற்புடை பாவையர் செய்கையே."

என்றபடி, கணவன் புசித்த பின் தான் புசித்தலும், கணவன் நித்திரை செய்தபின் தான் நித்திரை செய்தலும், கணவன் நித்திரை விட்டெழுமுன் தான் நித்திரை விட்டு எழுதலுமே கற்புடைய மகளிரின் இயற்கையாம்.

"அன்பர் துஞ்சிடிற் றுஞ்சுத லாங்கவர்
துன்ப முற்றிடிற் றுழுமத் துன்புற
லின்ப முற்றிடி லின்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவங் கற்புடை மாதர்க்கே."

என்றபடி, கணவன் ஒரு வருத்தத்தால் வாடி நின்றபோது தான் வாடி நிற்றலும், கணவன் துன்புற்றகாலத்தில் தான் துன்புறுத

லும், கணவன் இன்பமுற்ற காலத்தில் தான் இன்புறுதலுமே குல மகட்கு பெருந்தவ மெனப்படும்.

"நாவி னுனியில் நயமிருக்கிற் பூமாது
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
யாங்கடின மாகி லத்திருவுஞ் சேராள் முன்
ஆங்கே வருமரண மாம்."

என்றபடி, கடினமாகிய வார்த்தைகளைப் பேசும் பெண்களிடத்தில் இலட்சுமீகர மிருக்கமாட்டாது. அவர்களிடத்தில் மூதேவி சேருவதுந் தவிர ஆயுள் விர்த்தியின்றிச் சீக்கிரத்தில் நசிந்துபோவார்கள். ஆகையால் கணவன் உத்திரவின்படி துறவிகள், அதிதிகள், பெரியோர்கள் முதலானவர்களை நல்லவார்த்தைகளால் உபசரித்து அன்னங் கொடுத்தலே பதிவிரதா தருமமாம்.

"ஒப்பொடு முகமலர்ந்தே யுபசரித் துண்மை பேசி
யுப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே யமிர்த மாகும்
முப்பழ மொடுபா லன்னம முகங்கடுத் திடுவராகிற்
கப்பிய பசியும் போக்கிக் கடும்பசி யாகுந்தானே."

என்றபடி, குருடர், முடவர், விருத்தர், வியாதியாளர் முதலானவர்கள் தன் வீட்டுக்கு வந்தால் உண்மையான முகமலர்ச்சியோடு தக்க உபசாரங்களைச் செய்து உப்பிலலாத கூழை யிட்டபோதிலும், அது தேவாமிர்தத்துக்குச் சமானமாகும்; அப்படிக்கில்லாமல் முகக்கடுப்புடன் முப்பழங்களோடு கூட்டின பாலனத்தை இட்டபோதிலும், அது யாதொரு பலனையுங் கொடாமல், முன்னிருந்த பசியைக்காட்டிலும் அதிகமான பசியை உண்டாக்கிவிடும்.

"ஆன முதலில் அதிகம் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போன திசை
யெல்லார்க்குங் கள்ளனாய் யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்றபடி தமக்குள்ள வருமானத்துக்கு அதிகமாய்ச் செலவுசெய்பவர்கள், மானமிழந்து, புத்திகெட்டுத் தூரதேசங்களுக்கு ஓடிப்போனபோதிலும், அவ்விடத்திலும் எல்லார்க்குந் திருடராகி, எழுபிறப்புகளிலும் பாவிகளாய்ப் பிறந்து, நல்லவர்களுக்குங்கூட பொல்லாதவர்களாவார்கள். ஆதலாற்றான் "வளவனாயினும் அளவ

றின் தழித்துண்" என வித்வ் சிரோமணியாகிய ஒளவையாரும்திரு வாய்மலர்ந்தனள்.

"ஆற்றும் பெண்டீர் கூற்றெனத் தகும்" கணவனைப் பழுது சொல்லித் தூற்று மாதர்கள் இயமனெனப்படும். கணவன் உத்திர வில்லாலும், தகுந்த துணையில்லாமலும் ஓரிடத்துக்கும் தனியே போகலாகாது. கணவன் உத்திரவில்லாமல் விரதங்கள் அனுஷ்டித்தலும், திருவிழாப் பார்த்தலும், தேவதரிசனஞ்செய்தலும், யாத்திரை செய்தலுமாகாது. கணவன் தன் வீட்டிலிருக்கும்பொழுதுதான் ஆபரணம்புஷ்பம் முதலியவைகளினாலேஅலங்கரித்துக் கொள்ளல் வேண்டும். கணவனைப் பிரிந்திருக்கும்பொழுது தான் அலங்கரித்துக்கொள்ளலாகாது. கணவன் இருந்தால்தான் எதிரே இருக்கலாகாது;

"இனிய கேள்வர் முனியி லெதிர்நின்று
துணிகொள் நெஞ்சொ டெதிர்மொழி சொல்கலார்
அனைய கேள்வ ரெறியினு மன்போடுங்
கனிவர் நெஞ்சகங் கற்புடை மாதரே."

என்றபடி, கணவன் அநீதியாகக் கோபித்தாலும், அடித்தாலும் கோபமுள்ள மனதோடு எதிர்வார்த்தை பேசலாகாது. கணவன் பெயரைச் சொல்லலாகாது. கணவன் குற்றத்தைப் பிறருக்குச் சொல்லலாகாது கணவன் கொடுத்த பொருளை வீண்செலவுசெய்யலாகாது. காரணமின்றி அயல்வீட்டுக்குப்போகலாகாது. துன்மார்க்க மாதர்களோடு சேர்தலாகாது. தகாத வார்த்தைகள் பேசலாகாது. கூத்து முதலியவைகளைப் பார்க்கலாகாது. தலைக்கடையிலே நிற்றலாகாது. வாசற்படியை நடுவில்வைத்து யாதொன்றையுங்கொடுத்தலும் வாங்குதலுமாகாது. புண்ணிய நதிக் கரைகளில் அசுத்தம் செய்யலாகாது. புண்ணிய நதிகளின் ஜலத்தில் காரியுமிழ்தலும், மூக்குநீர் சிந்தலும், ஜல மலவிசர்க்கஞ்செய்தலுமாகாது. இடது கையால் தாகத்துக்குச் சாப்பிடலாகாது. இடது கையால் முகத்தைத் தொடலாகாது.

இடது கையினால் யாதொன்றையுங் கொடுத்தலும், ஒருவர் கொடுக்கின்ற பொருளை வாங்குதலுமாகாது. இரண்டு கையினால் தண்ணீர் முகந்து குடித்தலாகாது. இரண்டு கையினாலும் தலை

சொரிதலாகாது. இருந்த ஆசனத்தைக் காலினாலுதைத்தலாகாது. பிறருடைய குற்றங்களைச் சொல்லலாகாது. வாயை மூடாமல் கொட்டாவி விடலாகாது. அபான வாயுவை சத்தத்துடன்விடலாகாது. தான் வேறு சிறுதனஞ் சேர்க்கலாகாது. ஒருவரோடும் எதிர்த்து வாதாடலாகாது. வம்புவார்த்தைகள் பேசலாகாது. பெருமூச்சு விடுதலும், நிலத்தைக் கீறலும் துரும்பு கிள்ளலும் ஆகாது. விளக்கை கையினாலே தூண்டலாகாது. விளக்கை வாயினாலே ஊதி அவித்தலாகாது. நாழியைக்கவிழ்த்து வைத்தலாகாது. இருவருக்குநடுவேநெருப்பைக் கொண்டுபோகலாகாது. கொண்டுபோகவேண்டில் கீழைவைத்து எடுத்துக்கொண்டு போதல்வேண்டும். தன்னை பிறர் அவமதித்தால் அவரோடு ஒன்றும் பேசாது கணவனிடத்திலே சொல்லுதல் வேண்டும்.

உரல், உலக்கை, அம்மி, முறம், வாசற்படி இவைகளின்மேல் இருத்தலாகாது. உப்புப்பாத்திரம், சுண்ணாம்புப்பாத்திரம், துடைப்பம் இவைகளை கொஞ்சம் மறைவாக பூமியில் வைத்தல்வேண்டும்; உயர்ந்தவிடத்தில் வைக்கலாகாது. எச்சில், கோழை, மலமூத்திரம் கரி, உமி, சாம்பல் முதலியவற்றை மிதிக்கலாகாது. இரைந்துபேசலும், இரைந்து சிரித்தலும் ஆகாது. ஜலத்திலேனும், எண்ணெயிலேனும் தன்னிழலைப்பார்க்கலாகாது. வீட்டுக்குவிலக்கானால், முதல்நாள் சண்டாளிக்கும், இரண்டாநாள் பிரமஹத்தி செய்தவளுக்கும், மூன்றாநாள் வண்ணாத்திக்குஞ் சமானமாகும். இராத்திரியில் பதினெட்டேமுக்கால் நாழிகைக்குமேல் விலக்கானால், மறுநாள் முதல் மூன் றுநாளும் கொள்ளல்வேண்டும். வீட்டுக்குவிலக்காயுள்ள மூன்று நாளும், சரீரசுகத்திற்கு, வேறு ஒருவரைத் தண்ணீர் தரச்சொல்லி சரீரசுத்திசெய்தல் வேண்டும். தான் புண்ணிய நதிகளைத்தொடலாகாது. தான் கிணற்றிலே தண்ணீர்இறைத்தலுமாகாது. தான் சமையல்செய்தலுமாகாது. பகலிலே நித்திரை செய்தலும், பாக்கு வெற்றிலை தின்றலும், நெல்குத்தலும், வீட்டுக்குள்ளிருத்தலும், கணவனெதிரே நிற்றலும், கணவனுடனே பேசலும், வேறுவிலக்காயுள்ள மாதர்களைத் தொடுதலுமாகாது. பகலிலே ஒரேதடவை புசித்தல்வேண்டும். இராத்திரியில் புசிக்கலாகாது. தானிருந்த இடமுதல் பதினாறு அடிவரையில் தீட்டாகும்.

தனக்குச் சமீபத்திலே விறகினாலேனும், புல் முதலியவற்றாலே னும் மறைத்தால், அப்பால் உள்ளே நிலத்துக்குத் தீட்டில்லை. மூன்றுநாளும் இப்படியிருந்து, நாலாநாள் தானிருந்த இடத்தைப் பசுவின் சாணத்தினாலேமெழுகி, வெண்கலப் பாத்திரங்களையும், பித்தளைப் பாத்திரங்களையும், நன்றாகத் தேய்த்து, சூரியோதய மாகிய ஆறு நாழிகைக்குமேல், வேறுபுடவை உடுத்திக்கொண்டு, விலக்கானபுடவையை ஜலத்தில் நனைத்துப் பிழிந்து, ஓரிடத்தில் வைக்கோலைப்போட்டுக் கொளுத்தி, அந்தப் புகையில்,நனைத்துப் பிழிந்த புடவையைக் காட்டி, புகைப் பட்டவுடனே எடுத்துக் கொண்டு அவ்விடம் விட்டு நீங்கி,புண்ணியநதிகள் அல்லாதகுளம், ஏரி, வாய்க்கால் முதலிய இடங்களிலே தோய்த்து, ஸ்நானஞ் செய்தல் வேண்டும்.

ஸ்நானம் செய்தவுடன் கொஞ்சம் உப்பும்,அரிசியும்புசித்துத் தன் கணவன் முகத்திலே விழித்தல்வேண்டும், உப்பும், அரிசியும் புசிப்பதற்கு முன் கணவனைப் பார்த்தால், திரும்பவும் ஸ்நானம் செய்தல்வேண்டும். அப்போது கணவனில்லையாகில், தன் கண வனை மனதில் நினைத்துச் சூரியனைத் தரிசத்தல்வேண்டும். விலக் கான புடவையை வண்ணானுக்குப் போடவேண்டு மென்கிற அவ சியமில்லை. நாலாநாள் முழுதும் பாத்திரங்களைத் தொடாமலும், வீட்டுவேலை செய்யாமலும் இருந்து, ஐந்தாநாள் ஸ்நானஞ்செய்து வீட்டு வேலைகளையும், கணவனுக்குவேண்டிய பணிவிடைகளையும் செய்தல்வேண்டும். நாலாநாள் முதல் பனிரண்டுநாள் வரையில் ருது உண்டானால், ஜலவிசர்க்கத்துக்குச் சுத்திசெய்வதுபோலச் சுத்திசெய்தல்வேண்டும் அப்பால் பதினெட்டுநாள்வரையும் ருது உண்டானால், ஸ்நானம் செய்தல் வேண்டும் அப்பால் ருதுஉண்டா னால்மூன்றுநாள் விலக்காயிருந்து, நாலாநாள் ஸ்நானம்செய்தல் வேண்டும்.

ஸ்திரீ கர்ப்பிணியானாளென்று தெரிந்துகொள்வதற்கு அனேக சின்னங்கள் உள்ளன. அவற்றுளிரண்டொன்றை விவரிப்போம்:- தூரம் நிற்றல், என்றால், இரஜவொழுக்கம் நின்றுபோதல், ஒருக் கால் நோய் மூலமாய்க்கூடத்தூரம நின்று போகலாமாதலால், இதரசின்னங்கள்கூடப் பார்க்கவேண்டியது. சிலருக்கு கருப் பாற்பத்தியான சிலமாதங்கள்வரைக்கும் இரஜோதரிசனமாய்க்

கொண்டேயிருக்கும்.சிலருக்கு இரஜவொழுக்கமில்லாமலே கருப்போற்பத்தியாவதுமுண்டு. சிலர் கரும்போற்பத்தியாகி 15-20 தினங்களுக்குப் பிற்பாடு வயிற்றில் ஒக்களிப்புண்டாகி விடியற் காலத்தில் வாயிலெடுப்பார்கள். சிலருக்கு அன்னங்கூட அருவருப்பாயிருக்கும் இந்தவமனங்கள் சாதாரணமாய் மூன்று நாலு மாதங்கள் வரைக்கும்உண்டாகும் சிலருக்குப் பிரசவகாலம்வரைக் குமிருக்கும். சிலருக்கு வமனமுண்டாகவேமாட்டாது. சிலருக்கு தின்பண்டங்களின்மீதும்,புளிப்பான வஸ்துக்களின்மீதும் விருப்பமுண்டாகும், சிலருக்குவிபூதி, சாம்பல்முதலிய பதார்த்தங்களைப் புசிக்க வெண்ணங்கொள்ளும். சிலருக்கு முகம், கழுத்து, கைகள் முதலிய திரேகங்களில் பசுமையான மச்சங்கள் காணும், முகவொளி குறையும். இதுபோன்ற குறிகள்தோன்றினால் கருப்பிணியென்று யூகிக்க வேண்டியது.

கருப்பிணியாகில், ஐந்து மாசத்திற்குமேல் தீர்த்தயாத்திரை செய்தலும், க்ஷேத்திரயாத்திரை செய்தலும், மலையேறுதலும்,விரதமனுஷ்டித்தலும், தேவாரதனை செய்தலும், தானங்கொடுத்தலும், தானம் வாங்குதலுமாகாது. தேவகாரியம், பிதுர்க்காரியங்களுக்குத் தான் சமையல் செய்தலும், பரிமாறுதலுமாகாது. தன் கணவனைப் பெற்ற மாதா பிதா சிரார்த்தங்களுக்கு மாத்திரம் அவசியம் சமையல் முதலியவும் செய்தல்வேண்டும். வளைகாப்பு சீமந்தகாலத்தையன்றி மற்றைக் காலங்களிலே கோடிப் புடவை உடுத்தலாகாது. சந்தியாகாலம் மத்தியான்ன காலங்களிலே வெளியே போகலாகாது.

ஒற்றைப்பட்ட மாசங்களிலே பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கும்,புகுந்த வீட்டிலிருந்து பிறந்த வீட்டிற்கும்போகலாம். வேறிடங்களுக்குப் போகலாகாது.

தனவான்களுடைய வீட்டுப் பெண்கள் செல்வச்செருக்கால் உணவு முதலியவைகளிற் குறைவின்றிச் சரீரத்தை வருத்தப்படுத்தாமலிருப்பதினால் பிள்ளைகள் அரிதாயுண்டாம். கஷ்டப்பட்டு வேலைசெய்கின்ற ஏழைகள் வீட்டுப் பெண்களுக்குச்சந்ததி அதிகமாம். சாதாரணமாய் கருப்போற்பத்தியான 280-தினங்களுக்குப் பின்னர் பிரசவமுண்டாகும். ஒருக்கால் இரண்டு மூன்று வாரங்க

ளுக்குப்பின்னாவது முன்னாவது பிரசவமுண்டாகலாம். ஒன்பது மாதத்திற்கு முன்னர் உண்டாவது அகால பிரசவமா யெண்ணத் தக்கது. சிசு மெத்தச் சிறிதாய்கருப்பை நீரில் நீந்திக்கொண்டிருக்கையில் அது துள்ளிக் கொடியின் தடத்துக்கூட ஒரு முறைபல முறை செல்லக்கூடும். இப்படிச் சம்பவிக்குமாகில்; பிறக்கும் போது கொடியிரண்டொரு முடிச்சு காணப்படும்; அல்லது கொடிகழுத்திலே சுற்றி இருக்கும், இதற்கு மாலைபோட்டுக்கொண்டு பிறந்ததென்று சொல்லுவார்கள். பிள்ளைகள் தாயின் கருப்பத்திலிருந்து பிறந்தவுடனே அழத்தொடங்கும் அழுததின்பிறகு நாபிக்கொடியை யறுத்துப் பிள்ளையை வேறாக்கவேண்டும். இதன் பிறகு செய்யவேண்டிய விசேஷகாரியம் பிள்ளையைக் குளிப்பாட்டுவதே. ஸ்திரீயானவள் சற்று களைதீர்ந்தவுடனே பிள்ளையைத் தன் சரீரத்தோடணைத்துக் கொள்ளவேண்டும். பிரசவித்த இரண்டு மூன்று நாளளவும் ஸ்திரீகளுக்கு நெல்லரிசிக்கஞ்சி அல்லது ஜவ்வரிசிக்கஞ்சியுடன் பால் சேர்த்தாவது சேர்க்காமலாவது அல்லது டோஸ்ட் (வறுத்தரொட்டி,) காப்பி கொடுத்து வரவேண்டும். அடுத்த இரண்டொருநாளைக்கு சாதமும் பாலும் அல்லது சாதமும் குழம்புமாவது சேர்த்துக் கொடுக்கலாம்,

குழந்தை பிறந்த பதினாறு நாள் சூதக அறையிலிருந்த புடவைகளை வண்ணானுக்குப்போட்டு மண்பாத்திரம், கற்பாத்திரம், அடுப்பு, முறம், துடைப்பம், பாய், தலையணை முதலிய எல்லாவற்றையும் தூரத்திலே கொண்டுபோய் எறிந்துவிடல் வேண்டும்.

வீட்டிலுள்ள கற்பாத்திரம், மண்பாத்திரங்களை எல்லாம்கழித்துவிட்டு, வீடெங்கும் பெருக்கி, மெழுகி, வெண்கலப்பாத்திரமுதலிய பாத்திரங்களையெல்லாம், சுத்திசெய்து, வஸ்திரங்கள், பாய்கள், மெத்தைகள், தலையணைகள் முதலியவெல்லாம் நனைத்துச் சுத்திசெய்து, உலர்த்திவிட்டு, சூரியோதயமாகி ஆறு நாழிகைக்கு மேல் எல்லாரும் ஸ்நானம் செய்து புண்ணியாகம் செய்வித்து பின்பு சமையல்செய்து போசனம் செய்தல்வேண்டும்.

ஆண்குழந்தை பிறந்தால் முப்பதுநாள் வரையிலும், பெண் குழந்தைபிறந்தால் நாற்பதுநாள் வரையிலும் பெற்றவர்களுக்குத் தீட்டாகையால் தான் வீட்டிலுள்ள எந்தப் பாத்திரங்களையும்

தொடலாகாது. பெற்றவர்கள் வைத்திருக்கும் எந்தப் பாத்திரங்களையும் மற்றவர்களும் தொடலாகாது.

குழந்தை பிறந்தது முதல் மேற்சொல்லிய நாளுக்குப் பின்பு நல்லதினத்தில், தானிருந்த இடங்களை யெல்லா மெழுகிப் பாத்திரங்களைச்சுத்திசெய்து ஸ்நானஞ்செய்து, பஞ்சகவ்விய முட்கொண்டு திரும்பவும் ஸ்நானஞ்செய்து, வீட்டுவேலைகளையும் கணவனுக்கு வேண்டிய பணி விடைகளையும் மெய்யன்போடு செய்தல் வேண்டும்.

பிள்ளைபெற்றவர்களிடத்தில் குழந்தைக்குவேண்டிய அளவு பாலிருந்தால் ஆறுமாதவரையில் இரண்டு மணிக்கொருதரம் கொடுக்கவேண்டும். அழும்போதெல்லாம் பால் கொடுக்கலாகாது. அதற்கு வெந்நீரில் குளிப்பாட்டி சவதானப்படுத்தி கொஞ்சநேரம்நித்திரை செய்யவிடவேண்டும். இராக்காலங்களில் இடைக்கிடை பால் கொடுக்கவேண்டியதில்லை. குழந்தைகள் பிறந்த சிலவாரங்களாக பசிநேரந் தவிர மற்ற நேரத்திலெல்லாம் ஓயாமல் தூங்குவது உத்தமம் அச்சமயத்தில் தாய்மார் அவைகளைத் தொந்திரவு செய்து எழுப்புவது நல்லதல்ல. சிலர் குழந்தைகளைத்தனியேபடுக்கவைக்கிறதுண்டு அப்படிச்செய்வது கெட்டவழக்கம் ஏனென்றால் குழந்தைகளுக்கு இரண்டுமூன்று மாதம்வரைக்கும் உடம்பில்போதுமான அனல் இராது ஆகையால் மார்புடனணைத்து அருகாமையில் படுக்கவைப்பதவஸ்யம். குழந்தைக்குப் பால் கொடுத்தால் உடம்பு கெட்டுப்போய் பலயீனமாகுமென்று தாதியை வைத்துப் பால் கொடுப்பிப்பது யுக்தமன்று. தாய்க்குப் பால் குறைவானால் தாதிப்பால் கொடுக்கலாம். தாதியானவள் வயதிலும் சரீரப்பிரகிருதியிலும் ஒத்திருந்து அத்தாதியும் அப்போதே பிள்ளை பெற்றவளாயும் இருக்கவேண்டியது. தகுந்தபடி தாதிப்பாலும் கிடையாவிட்டால் வெள்ளாட்டுப் பால் அல்லது இளங்கன்று பசுவின்பாலைக்கறந்து அதில் இரண்டுபங்கு ஜலம்சேர்த்து இலேசாய்க் காய்த்து கொஞ்சம் சீனியும் சேர்த்து இரண்டுமூன்று மணிநேரத்திற் கொருதரங்கொடுத்து வருவது உத்தமம். பாலை வைத்துவைக்கிறதற்கு ஈயம், செம்பு, பித்தளை பாத்திரங்களை உபயோகிக்கக்கூடாது. கண்ணாடி, பீங்கான் அல்லது மண்பாத்தி

ரங்களை உபயோகிக்கவேண்டியது. இப்பாத்திரங்களை இடைக்கிடை மிகுந்த ஜாக்கிரதையுடன் சுத்திபண்ணவேண்டியது. குழந்தைக்கு ஏழு மாதம் சென்ற பிறகு அல்லது பல் முளைத்தபிறகு பாலைப்படிப்படியாய் நிறுத்திவிட்டுப் பிள்ளையின் ஜீரணசக்திக்கும, பற்களிருக்கிற ஸ்திதிக்கும், விளையாட்டுத் தன்மைக்கும் தகுந்தபடி நெல்லரிசிக்கஞ்சி, அரரூட், காரன்பிளவர் முதலான கஞ்சி அல்லது சொற்ப ஆகாரத்தினால் தினே தினே போஷித்து வரவேண்டியது. குழந்தைகளுக்கு ஏதாவது சொற்பவியாதி அதாவது வயிற்றுவலி, வாந்தி, சீதபேதி, மாந்தம் முதலான வியாதிகள் கண்டால் அஜாக்கிரதையா யிராமல் உடனே தங்களால் கூடிய மருந்தைக்கொடுக்க வேண்டியது. அல்லது தகுந்த வைத்தியர்களுக்குக் காண்பித்து மருந்துகொடுத்து நிவர்த்தித்துக் கொள்ளவேண்டியது.

தன் கணவன் இறந்துவிட்டால் விதவைக்கு உரிய ஒழுக்கங்கள் தவறாமல் அனுஷ்டித்தல் வேண்டும் விதவை மஞ்சளணிதலும், ஆபரணந்தரித்தலுமாகாது. பகலிலே ஒரு பொழுது புசித்தல்வேண்டும். தரையிலே படுத்தல்வேண்டும். ஐம் பொறிகளையும் அடக்கல்வேண்டும். நல்ல விரதங்களை அனுஷ்டித்தல்வேண்டும்.

## வருஷப்பிறப்பின் வரலாறு.

ஸ்ரீ வைகுந்த நாதனான ஸ்ரீமந் நாராயணன் பூமிபாரந் தீர்க்கும்பொருட்டுத் துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணவதாரஞ் செய்திருந்தபோது, பதினாயிரங் கோபிகைகளுக்கும் பதினாயிரம் வீடுகள் கட்டிக்கொடுத்து, அவர்களின் வீடடைந்து லீலாவினோதனாயிருந்தார். அப்பொழுது நாரதபகவான் எம்பெருமானை நோக்கிச் சுவாமீ! தாங்கள் பதினாயிரம் கோபிகளை வைத்துக்கொண்டிருக்கின்றீர்களே, அடியேனுக்கொரு ஸ்திரீயைக் கொடுக்கக்கூடாதா என்று கேட்டனர். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான், நானில்லாதிருக்கின்ற வீட்டிலிருக்கும் ஸ்திரீயை நீ எடுத்துக்கொள்ளென்றார். நாரதர் அவ்வாறேவீடுகள்தோறும் நுழைந்து நுழைந்துபார்த்தார், எங்கும் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியிருக்கக் கண்டு, எம்பெருமானில்லாதவீடு கிடையாதென்று தெளிந்து, வெட்கமடைந்

தவராய் மறுபடியும் பரமபதநாதனையடைந்து சுவாமி! அதுகளெல்லாம் எனக்குச் சமாதான மில்லை. உமது ரூபலாவண்ணிய சவுந்தரியத்தினிடத்திலே எனக்கு மிகுந்த விருப்பமிருக்கிறபடியால், நான் ஸ்திரீ ரூபங்கொண்டு உம்முடனே போகிக்கவேண்டுமென்றனர். அவ்வாறு கூறினதைக் கேட்டகிருபாநிதியாகிய மாயவன் நாரதரை யமுனா நதியிலே ஸ்நானஞ்செய்யென்றார். அப்படியே நாரதர் ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில், ஓர் அழகிய பெண்ணுருவத்தையடைந்தார். அப்பெண்ணுடனே பகவான் அறுபது வருஷம் கிரீடித்துக் கொண்டிருக்கவே அந்த அறுபது வருஷத்தில் அறுபது பிள்ளைகள் பிறந்தன. பிரபவ விபவ என்று முறையே பெயரிட்டார்கள். பிறகு நாரதர் ஸ்திரீ ரூபமான படியினாலே பிள்ளைகளைப்பெற இனி என்னாற் சக்தியில்லையென்று வேண்டுதலும் ஸ்ரீ சர்வேஸ்வரன் கருணைகூர்ந்து அவரை மறுபடியும் யமுனாநதியில் ஸ்நானஞ் செய்யச்சொன்னார். அதன்படியேசெய்து நாரதர் பழைய வுருவத்தைப் பெற்றார். அந்தப் பிள்ளைகள்தான் "பிரபவாதியாக அக்ஷயவரையில் சொல்லப்படுகிற திருநாமங்களையுடைய அறுபது பிள்ளைகள்." அப்பிள்ளைகளின் பெயரை அதுகள் பிறந்த வருஷ முழுவதும் வழங்கி வந்தபடியினாலே வரன்முறையாய் இக்காலத்தும் அப்பெயரையே வழங்கப்படுகிறதுமல்லாமல், அவர்கள் பிறந்த நாளை அக்காலத்திற்கொண்டாடியதைப் போல் நாமும் அந்தநாளை வருஷப்பிறப்பென்று கொண்டாடுகிறோம். சுபம். சுபம்.

---

## ஸ்ரீ வரலக்ஷ்மி விரத வரலாறு.

நைமிசாரண்ய வாசிகளாகிய ஸௌனகாதி முனிவர்களிடம்சூத மகா முனிவர் வர, ரிஷிகள் எதிர் கொண்டழைத்து ஆதனத்திலிருத்தி சோடச வுபசாரங்களுஞ் செய்து நமஸ்கரித்து சுவாமீ! உலகத்தில் மும்மூர்த்திகளின் தொழில்களாகிய சிருஷ்டியாதியவை போன்ற தொழில்களை நடத்துபவனரசனாதலால் அவ்வரசாது செல்வம்போலுஞ்செல்வத்தை யடையத்தக்க விரதமுளதேல் அதைத் தேவரீ ரனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அம்முனி சிரேட்டர், ஏ முனிவர்காள்! ஆதியில் ஸ்ரீ கைலா

யத்தில் காளகண்ட திரிநேத்திரராகிய பரமேஸ்வரரைபரமேஸ்வரி வணங்கி, லோகேஸ்வரா! ஸ்த்ரீகளுக்குசர்வபாக்கியமுண்டாக்கத்தகுந்த விரதமொன்று அருளவேண்டுமெனப் பிரார்த்திக்கபசுபதி, எமஹெகரீ! ஸ்த்ரீகள் நற்பேறடைய வேண்டில், விரதங்களுள் சிறந்த ஸ்ரீ வரலக்ஷ்மி விரதமொன்றுளது, அஃது ஆடிமீ பூர்வபக்ஷம், வெள்ளிக்கிழமையதினம் அநுஷ்டிக்கவேண்டுமென, தாக்ஷாயணி, ஓ ஸ்வாமி! அந்த வரலக்ஷ்மி விரதமகிமை என்ன? அதற்கு விதியாது? எந்த தேவதையை பூஜித்தல்வேண்டும், எவரால்கொண்டாடப்பட்டது இவைகளை விபரமாய் புகலவேண்டுமென நமஸ்கரிக்கவும், பினாகன் திருவுளமகிழ்ந்து திருவாய் மலர்ந்தருளியபடி உங்களுக்குச்சொல்லுகிறேன் சாவதானமாய் பயபக்தி சிரத்தையுடன் கேழ்க்கக்கடவீர்கள் என்று சொல்லத்தொடங்கினர். ஓமுனிசிரேட்டர்களே! மஹா வளமைபொருந்திய மகதநாட்டிற் சேர்ந்த குண்டினபுரமென்னும் பட்டணத்தில் அதியுத்தமசத்தியசம்பன்ன வேதாகமோக்தசிகாமணியாகியபிரம் மகுலசைத்ரதரற்குசாருமதி யென்னும் பத்னி சகல நற்குண நற்செய்கைகளுடன் கற்பில்வழுவாது மிகவும் தாரித்திரத்தை அனுபவித்து வருங்கால் அவளிருக்கும் நேர்மையை உலகமாதாவாகிய ஸ்ரீ ஸாக்ஷாத் மஹாலக்ஷ்மி திருவுள முவந்து அவள்சொற்பனத்தில் தோன்றி ஏ பத்தினி! இந்த ஆடிமீ பூர்வபக்ஷ சுக்ரவாரதினம் என்னை பூஜிப்பையேல் நின்கவலை நீக்குவோமெனச்சொல்லி மறைந்தனள். சாருமதி, திடுக்கெணவிழித்து சுற்றுமுற்றும் பார்த்து திகைத்து ஏதுன் தோன்ருது மயங்கி தன்மாமனர், கணவன், அண்டையயலார் முதலானவர்களுக்குத்தான் கனவில் கண்டதைப் புகலஅதற்கவர்கள் சுபம்தானென்று இந்த ஆடிமீ இந்த விரதம் அவசியம் அநுஷ்டிக்கத்தான் வேண்டுமென்ருர்கள்.

இதைக் கேட்டிருந்த மற்ற ஸ்திரீகளும் சாருமதியும் ஆனந்தபரிதாளாய் பூர்வபக்ஷ சுக்ரவாரதினம் உதயத்தில் தீர்த்தமாடி, சித்திர வஸ்திரங்களுடுத்தி திவ்யாலங்கிர்தராய் யாவத்திராளும் சாருமதி மனைக்குவந்து ஒருங்குசேர்ந்து கோமயத்தால்நிலமெழுகிமண்டபமியற்றி, வாழை, கமுகு, தெங்கு முதலானதுகள் நாட்டி, சகலவித தோரணங்களா லலங்கரித்து, ஆலங்கொழுந்து, மாங்கொ

ழுந்து, வில்வக்கொழுந்து, அரசங்கொழுந்துமஞ்சட்கொழுந்து முதலியதுகளா கலசம்வைத்து அந்திவேளே வந்ததும், சாருமதியும் மற்ற ஸ்திரீகளும் அதிக பயபக்தியுடன் சோடசஉபசாரங்கள் செய்து, ஸ்ரீ வரலக்ஷ்மிதேவியை ஆவாஹனம்செய்து, காதோலை கருமணி,சீப்பு,வளேயல் வாசனேதிரவ்வியங்கள், அக்ஷதை, பத்திர புஷ்பங்களேசாற்றி, பொன்வட்டில்களி சுத்தோதகங்கள்வைத்து தேங்காய்களுடன் பற்பல கனிவர்க்கங்களும், பாயசம், நீர்மோர், இளநீர் முதலியதுகளும், ஒன்பது யிழையுள்ள பட்டுக்கயிரு, யாவரும் வைத்து பற்பல பத்திரபுஷ்பங்களா லருச்சித்து, பட்டுக்கயிற்றை யாவரும் அணிந்து அக்ஷதையிட்டு தூபதீபாராதனேகள் செய்து,பிரதக்ஷணம்வந்துபூமியில்விழுந்துநமஸ்கரித்துபயபக்தியுடன் அஞ்சலிசெய்து நிற்கவே செங்கமல நிவாசினியாகிய ஸ்ரீமகாலக்ஷ்மியும் பிரசன்னேயாய் ஓ! ஸ்திரீகளே ! நீங்கள் அனுஷ்டித்த இவ்விரதத்தினுல் மிகவுஞ் சந்துஷ்டையானேன். உங்களுக்கு வேண்டும் வரங்களேக் கேளுங்களெனவே அவர்கள் ஓ அம்மணி உலகமாதாவே! இவ்விரதத்தை இச்சுபதினத்தில் மிகவும் ஸ்ரத்தாபக்தியுடன் அனுஷ்டிக்கும் உத்தம ஸ்திரீகள் இகத்தில் அஷ்டைஸ்வர்யங்களடையவும், பரத்தில் நித்தியானந்தப் பெருவாழ்வையடையவும் கிருபைசெய்ய வேண்டுமென்று வேண்டிப்பணிய, ஸ்ரீ வரலக்ஷ்மியும் அப்படியே யாகுகவென்று வரமளித்து அந்தர்த்தியானமாயினுள். பிறகு மற்ற ஸ்திரீகள் ஜெகதம்பையைப் பலவாறு துதித்துபுகழ்ந்துக்கொண்டே மனேக்கேகினுர்கள். பிறகு சாருமதி தனக்குற்ற செல்வங்கள் மேன்மேலும் பெருகி தன்மாமனுர், மாமியார், கணவன் முதலிய பந்துவர்க்கங்களுடன் இந்த விரதத்தை வருடந்தோறும் அநுஷ்டித்து புத்ரபவுத்ர பாரம்பரியமாய் வாழ்ந்து சுகித்திருந்தார்கள் என்று சொல்லி சூதமுனிவர் தன்னிருப்பிடம் சென்றனர். ஆகையால் வருடாவருடம் ஆடிமீ பூர்வபக்ஷம் சுக்ரவார சுபதினத்தினன்று வரும் இந்தஸ்ரீவரலக்ஷ்மி விரதத்தை தப்பாமல் சகல வருணத்தரும் தத்தம் குடும்பஸ்திரீகளால் அநுஷ்டிப்பரேல் சாருமதியடைந்த அஷ்டஸ்வரியங்களேயும்பெற்று முடிவில் நித்யானந்த பேரின்ப சுகத்தையடைவார்கள். சத்தியம் ! சத்தியம் !!

# விநாயகர் சதுர்த்தி விரத வரலாறு.

ஸ்ரீ விநாயகக் கடவுள் முன்னொரு கற்பத்தில் பிரமதேவன் கொட்டாவியில் உதித்த சிந்தூரன் என்பவனைச் சங்காரஞ் செய்யும்பொருட்டுக் கஜானன மூர்த்தியாய் அவதரித்ததினம் ஆவணி மாச பூர்வபக்ஷ சதுர்த்தி இந்நாளில் சிவபிரானும் உமாதேவியாரும் அக்கடவுளைப் பூசித்ததினாலும் இவ்வுலகில் யாவரும் வருடந் தோறும் ஆவணிமாத பூர்வபக்ஷ சதுர்த்தியில் விநாயகர் விரதம் அனுஷ்டிக்கவேண்டும். ஆகையால அன்றைத்தினம் காலையில் எழுந்து, ஸ்நானஞ்செய்து, நித்தியானுஷ்டானம் முடித்துக்கொண்டு, அபிஷேகம், அலங்காரம், அருச்சனை, நிவேதனம், தூபம், தீபம் இவைகட்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்து,ஓர் பூஜா மண்டபம் அலங்கரித்து, பரிசுத்தமான இடத்து மிருத்திகை [மண்] எடுத்து, அதில் வேர், கல்,செல்முதலிய ஜெந்துக்கள் இல்லாமல ஆராய்ந்து அதனைப் பிசைந்து, சிற்பநூல் விதிப்படி விநாயகக் கடவுளின் திருவுருவம் அமைத்து, பலம், ௧, ½, ¼, இந்த எடைகளுக்குக் குறைவில்லாமல் பொன்னினால் ஒரு திருவுருவஞ் செய்வித்து, பின்கலசந்தாபித்து, கலசபூஜை செய்து அக்கலசத்துக்கு மேற்கில் எந்திரமிட்டு, அதன்மீது சொர்ணமூர்த்தியையும் மற்றொருபீடத்தில் பிருதிவி [மண்] மூர்த்தியையும் எழுந்தருளச் செய்து ஆகமவிதிப்படி பூசித்து, ஜெபிக்கவேண்டிய முறைப்படி மந்திரங்கள் ஜெபித்து வருகையில், பத்துச் செபத்திற்கு ஒரு தர்ப்பணமும் பத்துத் தர்ப்பணத்திற்கு ஒரு ஓமமும், பத்து ஓமத்திற்கு ஒரு அன்னதானமும் செய்யவேண்டும். இவ்விதமாக ஆகாரம் நித்திரை முதலியவைகளை நிக்கிரகித்தாவது, முதனாள் மாத்திரம் உணவை யொழித்து மற்ற நாட்களில் பால், பழம், அவிசு இவற்றில் ஒன்றைப் புசித்துக் கொண்டாவது இச்சதுர்த்தி தொடங்கிப் பின்வரும் பூர்வபக்ஷ சதுர்த்திவரையிலும் அனுஷ்டிக்க வேண்டும். அப்படி அனுஷ்டிப்பவர்கள் தங்கள் தங்கள் இஷ்ட சித்திகளையும், சகல நன்மைகளையும் பெறுவார்கள். அருச்சனைக்கு மாசிபத்திரி, தூரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்திரி, வன்னி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, காந்தி, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம்,செந்தளி,பாதிரி அரசு ஆகிய இருபத்தொருவிதமான பத்திரங்கள் உரியவை. அன்னதானம் இருபத்தொருபேருக்கு எவ்வளவும் குறையாமற் செய்யவேண்டும். இந்த விரதம் அனுஷ்டிப்பதற்குக் காரணமும்

கிரமமும் இங்குச்சுருக்கிச் சொல்லினோம். இவை பார்க்கவபுராணம் என்னும்விநாயகபுராணத்தில்உபாசனகாண்டத்தில் 15-வது உமையம்மை உபாசித்த படலத்திலும், லீலாகாண்டத்தில் 3-வது கஜானனர் திருவவதாரப்படலத்திலும் விரித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

---

## நவராத்திரி விரதவரலாறு.

நைமிசாரண்ணிய வாசிகளாகிய முனிவர்கள் ஓர் காலத்தில் சூதமுனிவரைக்கண்டு ஆசனமளித்தல் முதலிய சோடசோபசாரஞ்செய்து வணங்கி, ஐயா! உலகத்தில் மும்மூர்த்திகளின் தொழில்களாகிய சிருட்டியாதியவை போன்றதொழில்களை நடத்துபவர் அரசராதலால் அவ்வரசாது செல்வம் போலுஞ்செல்வத்தையடையத்தக்க விரத மூளதே லதைத் தேவரீரனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர்.

அம்முனிச்சிரேட்டர், ஓ முனிவர்களே! கிரேதாயுகத்தில் சத்துருசயஞ்செய்து மிக்க பெருமையோடும் அரசாண்டிருந்த சுகேது என்னுமோரரசனானவன் மேகம், பிறை, வில், வேல், குமிழ், வள்ளை, முத்தம், தொண்டைக்கனி, கமுகு, மூங்கில், காந்தள், சுவர்னமலை, ஆலிலை, நூல், வாழை, துலவன், வால் தாமரை முதலியவுவமைகளுக்கு மேற்பட்ட அவயவரூபியாகிய சுவேதி என்னுந் தனது மனைவியோடு சுகமாக வாழ்ந்திருந்த காலத்து, அவ்வரசனது பிதிர்வர்க்கத்தரசர்களின் தொந்தரையால் மிக்க கோபங்கொண்டவனாய் இரதகஜதுரகபதாதியர்களாகிய பெருஞ்சேனையோடுசென்று அவர்களோடு போர்செய்து தோல்வியடைந்து தனதிராச்சியத்தைவிட்டு மனைவியுடன் வனசஞ்சாரஞ்செய்து வருநாளில், இவ்வரசன் பகைவர் விட்ட அத்திரசத்திரங்களாலுண்டாய காயத்தினாலும், பசியினாலும், விசனத்தினாலும், வியாதியுடையவனாய் நடக்கச் சக்தியுமின்றி யிருந்தபோது மனைவியானவள் விசனமுற்றவளாயினுந்தளராமல் தன் பதியைத் தலைமேலுந் தோளின்மேலும் முதுகின்மேலுஞ் சுமந்து திரிந்து காய் கனி இலை முதலியவற்றைப் புசித்து ஜீவனஞ்செய்துகொண்

டிருக்கும்போது பஞ்சவட தீர்த்தமாடுதற்குவந்த ஆங்கீரச முனிவர் அவ்விருவர்தம் வருத்தப்பாடுகளைக் கண்டு சகிக்க மனமில்லாதவராய் அருகேசென்று அச்சுவேதியை, அம்மே! உம்மைப் பற்றி யோசிக்கும்போது சர்வயோக போகாதிகளைத் துரந்தவராகக்காணப்படுகிறதன்றி நிர்மானிஷியமான இக்காட்டில் சஞ்சரிப்பவராகக் காணப்பட வில்லையாதலால் உள்ளபடி யுமது வரலாற்றைச் சொல்வையானால் உமது வருத்தமுழுதுஞ் சூரியனைக் கண்ட பனிபோலொழியத்தக்க வுபாயத்தைச் சொல்லுகிறேன் என அச்சுவேதி யவ்வளவே யாவுஞ்சொல்லிப் பெருங்காற்றினால் விழும் வேரற்றமரம்போல் அளவிலாத் துன்பத்தினால் அம்முனிவரது சிறப்புற்ற பாதங்களில் வீழ்ந்து புலருவதை யம்முனிவர் இன்சொன்முதலியவற்றால் நீக்கித் தானே வேண்டிய பொருள்களையெல்லாஞ் சேகரித்து அப்பஞ்சவட தீர்த்தக்கரை, உருத்திரன், விஷ்ணு, பிரமன் என்னு மூவரது மனைவியராகிய உருத்திரி, இலக்குமி, சரஸ்வதி யென்னு மூவர்வாசஞ்செய்கிற விடமாதலால் அங்கிவர்களோடு சென்றந்தத் தீர்த்தத்தில் அச்சுவேதியை நீராடச்செய்து தானு நீராடி நித்தியகர்மங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு குங்குமம், அகில், கஸ்தூரி, கற்பூரம், சிவப்பு வஸ்திரம் முதலிய பொருள்களோடு கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ நிலப்பூ என்னும் நால்வகையாகிய பலதிவ்யபுட்பவகைகளும் பழ முதலிய நிவேதனப் பொருள்களும் அருகிருக்க வேதவிதிப்படி புரட்டாசி மாத பூர்வபட்சப்பிரதமை முதல் திரிதிகை வரையில் உருத்திரியையும், சதுர்த்திமுதல் சஷ்டிவரையில் இலக்குமியையும், சப்தமி முதல் நவமிவரையில் சரஸ்வதியையும், பூசிக்கச்செய்து தசமி தினத்திற் புனர்பூசைசெய்து முடித்துவைத்தனர்.

பின்னர் அநுமுத லச்சுவேதி அம்மூவரது அனுக்கிரகத்தால் கருப்பமுற்றுப் பத்தாமாதம் கோடி மன்மதவுருவமைந்த வோராண்பிள்ளையைப் பெற்றனள். அப்பிள்ளை சூரியப்பிரதாபன் என்னும் பெயரிடப்பட்டு அம்முனிவரது கிருபையினால் சகலவித்தைகளிலுஞ் சிறந்தவனாய் தம் பகைவர்மேற்சென்று போர்செய்து வெற்றியடைந்து மாதா பிதாக்களுடன் தனது நகரத்தார் யாவருங் களித்தானந்த முற்றவராய்ப் புகழ்ந்து துதிக்கச்சென்று

பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவாழ்ந்திருந்தனன். என வருளி விடைபெற்றுச் சென்றனர். அதுமுதல் இப்பரதகண்ட வாசிகளாகிய பலருட் சிலர் விதிப்படி உருத்திரி முதலியோரைக் கலச ஆவாகனஞ்செய்து நவமி வரையிலனுட்டித்து வருகின்ற னர், சிலர் சப்தமியில் வருகிற மூலநக்ஷத்திரமுதல் அனுட்டித்து வருகின்றனர், பலர் நவமி தினத்தில் உருத்திரிக்குரிய ஆயுத வகைகளை வைத்துப் பூசிப்பதினால் ஆயுதபூஜையென்றும், இலக் குமிக்குரிய சுவர்னரத்தினங்களை வைத்துப் பூசிப்பதினால் இலக் குமி பூசையென்று, சரஸ்வதிக்குரிய புத்தகமுதலிய சாஸ்திரங் களை வைத்துப் பூசிப்பதினால் சரஸ்வதிபூசை யென்றுஞ் சொல்லு வார்கள். இதுநிற்க, மகிடாசுர னென்பவனைச் சங்கரிக்கும்பொ ருட்டு உமாதேவியார் தமது கலாம்சம்பெற்ற அஷ்டலக்ஷ்மிகளை யும் தினம் ஒவ்வொருவராக முன்னரனுப்பி அவர்கள் தோல்வி யுற்ற பின்னர் தாமே ஒன்பதாவது நாள் போர்க்கோலம் புனைந்து சென்று சங்கரித்தனரென்பது குறித்து; அவ்வைதிகத்தின்படி ஒன்பது தினங்களிலும் அம்மையாரைப் பூசித்துக்கொண்டாடு வதுமுண்டு.

பத்தாநாளாகிய விஜயதசமியன்றைக்கு வித்தியாரம்பம் பண் ணுவதற்கும், வித்தியாப்பியாசஞ்செய்த பெரியோர்வித்தியாரா தனை செய்வதற்கும், ஆயுதவித்தையறிந்தவர் பழகுவதற்கும், ஆயு தவித்தையறியாதவர் தொடங்குவதற்கும் முக்கியமான நாளொ ன்று சாக்தேயதந்திரத்திற்கூறுதரால் நைமிசாரண்ணிய வாசிகளுக் குச் சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விரதம் சரியையிற் சிறந்த கிரியையும், கிரியையிற் சிற ந்த பத்தியோகத்தையும், யோகத்திற் சிறந்த பக்தி ஞானத்தை யும் அடைவதற் கேதுவாயுமுடியும். அந்த ஞானமே முத்திக்கேது வாமாதலால், சரியை முதலிய மூன்றினாலுண்டாய பத்தியின் மிகுதியே காமாதிகளைத் துரத்தி மோட்ச சாதனமாகிய ஞான மாய் முடியுங்காலத்தன்றி, சரியை முதலிய மூன்றும் பயனில வாய் முடியாவாதலின், விரதமுதலியவை அனுஷ்டிக்கத் தக்கவை யே யாமென்க. சுபம் ! சுபம் !!

# தீபாவளி விரதவரலாறு.

பாண்டவர் பன்னிரண்டு வருடம் வனவாசஞ் செய்தபோது, ஸ்ரீகண்ணன் தன்னெதிர்ப்பட்ட பீட்மரோடு அவர்களைக் காணும்படிபோகத் தருமபுத்திரர் பலவித வுபசாரஞ்செய்து தம்பிமாரோடு வணங்கிச் சுவாமி! அடியேம்படும் வருத்தப்பாடுகளனைத்து நீங்கிச் சுகப்படத்தக்க பரிகாரங்களுளதேல் அவற்றைக் கிருபைகூர்ந்து அருளவேண்டுகின்றேன் என, அதற்கு ஸ்ரீ கண்ணபிரான் பீட்மரைநோக்கி, யான் அதிதீவிரமாக துவாரகாபுரிக்குப் போகவேண்டும் ஆதலால் நீரிங்கிருந்து தருமபுத்திரருக்குச் சொல்லவேண்டுவன வற்றைச் சொல்லிப்பின் செலவுபெற்றுக்கொண்டு வாரும் என்று தருமர் முதலியோரிடத்துச் செலவுபெற்றுத்துவாரகைக்குச் சென்றனர். பின்னர் பீட்மர், ஓ பாண்டுபுத்திரர்களே! பிராக்ஜியோதிடபுரமென்னும் பட்டணத்தில் நரகாசுரன் என்போன் அரசுசெலுத்திவருநாளி லவன் பிரமதேவனை நோக்கி அருந்தவம்புரிந்து பெறுதற்கரிய பேறுகளைப்பெற்று பூலோக பாதாளங்களை அசம்பண்ணுவதோடு சுவர்க்கலோகாதிபதியாகிய தேவேந்திரனோடு பெரும்போர்செய்து அவன் தாய் காதிலணிந்த மகரகுண்டலங்களையும் மற்றுந் தனக்கு வேண்டிய பொருள்களைத்தையு மெடுத்துக்கொண்டுபோய்த் தன் பதியடைந்தான்.

உடனே தேவேந்திரன்முன் அந்நரகாசுரனால் வருத்தமுற்ற பதரிவன வாசிகளாகிய முனிக்கூட்டங்களோடு துவாரகாபுரிக்குச்சென்று கிருஷ்ணதேவரடிபணிந்து தங்குறைகளைச் சொல்லித் தேவரீரையன்றி யவனைச் செயிப்போரொருவரு மில்லையென்று புகழ்ந்து துதிக்க, உடனே ஸ்ரீ கண்ணபிரான் சத்திராசித்து மகாராஜாவின் புத்திரியுந் தனது மனைவியுமாகிய சத்தியபாமா சமேதராய் யுத்தகோலங்கொண்டு கருடாரூடராய்ப்புறப்பட்டு பிராக்ஜியோதிடபுரஞ் சேர்ந்து போற்குறிகாட்டினர். உடனே முராசுரன், நிசுந்தன், அயக்கிரீவன், அகோரபாலன், விருபாட்சன், பிராபணன், பஞ்சசனன் முதலிய சேனாதிபதி (அமைச்சர்) இரத கஜதுரகபதாதிகளாகிய பெருஞ்சேனையோடு அதிக வுக்கிரங்கொண்டுவந்து எவ்வுலகத்தோரும் நடுங்கும்படிப் பெரும்போர்செய்யக் கண்ணன் சிறிதேனு மஞ்சாது தனது சாரங்கத்தினிடமா யிரு

யுக்கிரமுள்ள திவ்யபாணங்களைப் பிரயோகித்துச் சேனைகளோடு சேனாபதிகளையு மதஞ்செய்து, சிங்கநாதஞ் செய்தனர்.

பின்னர் நரகாசுரன் (மிஅத) சேனைகள் சூழ்ந்துவர அதிக வுக்கிரத்தோடுவந்து பிரளயகால வுருத்திரனைப்போல்சீறிப் பெரும்போர்செய்ய ஸ்ரீ கோபாலமூர்த்தியானவர் பல திவ்விய அத்திர சத்திரங்களா லச்சேனை முழுவதையுமழித்து அந்நரகாசுரனையும் வருந்தும்படிச்செய்ய வுடனேயவன் சிலபாணங்களைப் பிரயோகித்தான், அதனால் ஸ்ரீ கிருஷ்ணதேவர் சோர்ந்து கருடன் மேற் சாய்ந்தார். சத்தியபாமா அதைக்கண்டு விசனமுற்றுச் சுவாமியை யுபசாரங்களாற்றேற்றி வில்லைவளைத்து அளவிலாதபாணங்களைத் தொடுத்து அக்கொடியோனது யுத்தகருவிகளையெல்லாம் பொடிப்பொடியாக்கிப் பாதாதிகேசம்வரையில் சல்லடைக்கண்கள்போற் றுளைத்துப் பீர் பீர் என்று உதிரம்பெருகும்படிச்செய்ய அந்நரகாசுரன் சற்றிளைப்பாறிப் பின்னுமறுதேரேறி மகா வுக்கிரத்தோடு கொடூரமான பாணப்பிரயோகஞ்செய்து அந்த வம்மையைச் சோரச்செய்யக்கண்ட ஸ்ரீ கண்ணபிரான் சப்தலோகங்களுந் திடுக்கிட சப்தமேகங்களும் பயப்பட, சக்கராயுதத்தைப் பிரயோகித்து அவனுடலிரண்டு கூறாகி விழும்படிச்செய்தனர்.

அப்போது அவ்வரசன் அடியற்ற மரம்போல் நிலத்தில் விழுந்து கியானமுற்றவனாய் சுவாமியை நோக்கி கடவுளே! யான்செய்த குற்றங்களையெல்லாம் பொறுத்து யான் வதைப்பட்ட இத்திதியில் என் பெயரைச் சொல்லி அப்பியங்கனஞ் செய்து பல திவ்விய போஜனங்களால் (தீபாராதனை அல்லது தீபவரிசையெனப் பொருள் தரும்) தீபாவளி செய்தபின், தமக்கு நிவேதனஞ் செய்வோர்க்கும், ஒரு பிராமணனுக்கேனும் பல பிராமணனுக்கேனும் அப்பியங்கனஞ்செய்வித்து பலவுபசாரங்களோடு தானஞ்செய்வோர்க்கும் அஸ்வமேதயாகஞ் செய்த பலன் கிடைக்கும்படியருள வேண்டுமென, அப்படியேயருளிக் கண்ணபிரான் அவனைப் பரமபதம் சேர்த்துப் பின்னர் நகரத்துட் பிரவேசித்துத் தேவேந்திரனுக்குக் குண்டலத்தைக் கொடுத்தனுப்பி விட்டுத் தமக்கு வேண்டுவனவற்றை யெல்லாந் துவாரகாபுரிக்கனுப்பி யவ்வரசனது புத்திரனாகிய பகதத்தனுக்கு மகுடாபிஷேகஞ் செய்வித்து

முடிந்தவுடனே அந்நரகாசுரன் அதிகாரஞ் செய்திருந்தகாலத்தில் ஸ்ரீமகாலக்ஷ்மிபோலு மழகுடைய பலதேசத்தரசர்களின்புத்திரிகளாகிய (௰௨௲) கன்னிகைகளைச் சிறைபிடித்துப் பல காவலோடும் வைத்திருந்த மணி பர்வதத்திற்கு போயவர்கள் விசனங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோலொழிய வவர்களோடு சத்திய பாமா சமேதராய் துவாரகையை யடைந்தருளினர். பின்னரது முதலிவ்வுலகத்தோர் யாவரும் ஐப்பசிமாதங் கிருஷ்ணபட்ச திரியோதசி யிரவிற் பொழுது விடியுங் காலத்தில் வருஞ்சதுர்த்தசியில் ஸ்நானம் பண்ணித் தத்தம் அன்பின் வலிவிற்கேற்ப அனுட்டித்து வருகின்றனர். ஆதலால் நீங்களும் அன்றைத்தினம் அவன் பெயரைச்சொல்லி அப்பியங்கனம்பண்ணி மனங்குவியஸ்ரீகண்ணபிரானை நிவேதனமுதலியவற்றைச் செய்துவணங்குவீராயின், நீவிரிழந்த பிதிரார்ச்சிதத்தை யடைந்து களிப்புடன் வாழ்வீர்கள் என்று சொல்லிச் செலவு பெற்றுச் சென்றனர். பிறகு பாண்டவர்களனைவருந் திரௌபதியு மவ்வாறே செய்து முடித்து முன்னிழந்தவற்றையெல்லா மடைந்து களிப்புடன் வாழ்ந்திருந்தனர்

பிறகு அத்துஷ்டனாகிய நரகாசுர னிருக்கும்போது பாழடைந்திருந்த வீடுவாசல் கோயிற் குளங்களைச் சுத்திசெய்தும் தீபம்வைத்தும், அவனிருக்குமளவில் தேக அழுக்குப் போக்காதவர்களாயிருந்தபடியால் அன்று ஸ்நானஞ் செய்தும், அது வரையில் கட்டியிருந்த மலினமான உடைகளை யெறிந்து புதிய வஸ்திரங்களை யுடுத்தி அத்துஷ்டனைச் சம்மரித்த ஸ்ரீ கிருஷ்ணபகவானைத் தோத்திரஞ் செய்தும், தேவேந்திரன் முதலிய விண்ணவரை வாழ்த்தியும், சித்திரான்னம் சிற்றுண்டி முதலியவைகளுமுண்டும், தங்கள் தங்கள்பந்து மித்திரர்களைப் பாராம லிருந்தவர்களானபடியால் ஒருவருக் கொருவர் அவர்கள் வீடுசென்று பார்த்தும், சந்தோஷமாயிருந்தார்களாம். அக்கால்முதல் இதுவரையில் அதை வழக்கப்படி நம்மவர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

# கேதாரி கௌரி விரத வரலாறு,

ஸ்ரீ கயிலாயத்திலே பரமேஸ்வரனும் பார்வதாதேவியும் சிங்காதனத்தில் விற்றிருக்குங்காலையில் தேவர்களெல்லாம் வந்து ஈஸ்வரனையும் ஈஸ்வரியையுங்கண்டு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டுச் சேர்வைசெய்து வருகிறகாலத்தில் ஒருநாள் பிருங்கி மகாரிஷியானவர் வந்து பார்வதியம்மனைப் புறம்பே தள்ளி பரமேஸ்வரனை மாத்திரங்கண்டு நமஸ்கரித்தார். அப்பொழுது ஸ்ரீ பார்வதியம்மன் இந்தப்பிருங்கி மகாரிஷியானவர் நம்மைப் புறம்பாகத் தள்ளிவைத்து ஈஸ்வரனை மாத்திரம் நமஸ்கரித்து நின்றதென்று வெகு சீற்றங்கொண்டு பரமேஸ்வரி கேட்க, பரமேஸ்வரர் சொல்லுகிறார் வாராய் பார்வதியே! அவன் பாக்கியத்தை கோறினவனல்ல மோக்ஷத்தைக் கோறினவனானபடியால் எம்மை மாத்திரம் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்தானென்று பரமேஸ்வரர் சொல்ல அப்பொழுது பரமேஸ்வரி கோபித்துக்கொண்டு பிருங்கியின் சரீரத்திலுள்ள தன்னுடைய அம்சமான இரத்த சக்தியை பெற்றுக்கொண்டு கைலாயத்தை விட்டு பூலோகத்திற்கு வந்துவிட்டாள். அவள் வந்த பிறகு பிருங்கி மகாரிஷிக்கு இரத்த மாங்கிஷம் போய்விட்டபடியினாலே, அடியற்ற மரத்தைப்போல கீழ் விழப்போவதை பரமேஸ்வரர்கண்டு, என் பிள்ளாய் பிருங்கி மகாரிஷியே! முற்றும் அசுத்தனாய்விட்டாய் என்றுசொல்லிதண்டொன்று அவர் கையில் கொடுத்தார். அதை மகாரிஷி அன்புடன் பெற்று ஊன்றிக்கொண்டு தமது ஆசிரமத்திற்கு எழுந்தருளினார். பார்வதாதேவி பூலோகத்திலே வால்மீக ரிஷியினுடைய பூங்காவனத்திலே வந்து தங்கியிருந்தாள். இப்படியிருக்க ஒருநாள் வால்மீகரிஷி அந்தப் பூங்காவனம் புஷ்பங்கள் பலவிதமாகப் புஷ்பித்திருக்கிறதைக் கண்டு ஆனந்தத்துடன் அச்சோலைக்குள் வருகிறபொழுது பரமேஸ்வரியைக் கண்டு தெண்டனிட்டு மூவருக்கும் முதன்மையான தாயே! ஈஸ்வரியே என்று பலவிதமாய்த் தோத்திரஞ்செய்து நீர்யாது காரணமாய் எழுந்தருளினதோ அதை அடியேனுக்கு திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று வால்மீகர்கேட்க அப்பொழுது பார்வதியம்மன் திருவாய்மலர்ந்து சொல்லுகிறாள், கேளும் மகரிஷியே! ஸ்ரீ கயிலாயத்திலே பரமேஸ்வரரும் யானும் சிங்காதனத்தின்மீது வீற்றிருக்குங்காலையில் ஒருநாள்பிருங்கிமகாரிஷியானவர்வந்து சுவாமியைமாத்திரம் நமஸ்கரித்து நம்மைப்

புறம்பாகத் தள்ளினர். அப்பொழுது வெகுசீற்றத்துடனேஎன்னு டைய அமிசமான இரத்த சக்தியை வாங்கிக்கொண்டு நான்பூலோ கத்திற்குவரும்போது இந்தப்பூங்காவனத்தைக்கண்டு இச்சோலை யிற் தங்கினேன் என்று சொல்ல, வால்மீகர் தன்னுடைய ஆசிர மத்திற்கு எழுந்தருளி வரவேணுமென்று நமஸ்கரித்தார்.

அவ்விதமே பரமேஸ்வரியும் அவருடன் ஆசிரமத்திற்கு எழு ந்தருளி ஓ! மகாரிஷியே! இந்தப் பூலோகத்திலே நான் ஒரு விர தம் அனுஷ்டிக்கவேண்டும் அது நூதனமாயும் அனுஷ்டிக்காதவிர தமாயு முள்ளதை எனக்கு நீர் அருளவேண்டுமென்றுகேட்க வால் மீகரிஷி சொல்லுகிறார். கேளாய் ஈஸ்வரியே! இந்தப் பூலோகத் திலே ஒருவருக்குந் தெரியாத விரதமொன்றுண்டு. அதை இது பரியந்தம் யாரும் அனுஷ்டிக்கவில்லை. நீர் அந்தவிரதத்தை அனுஷ் டித்தால் உம்முடைய இஷ்டசித்தியெல்லாம் கைகூடிவருமென்று வால்மீக மகாரிஷி சொல்ல, அதைப்பரமேஸ்வரிகேட்டு ஆனந்தங் கொண்டு அந்த விரதம் எனக்கு நன்றாகத் தெரியப்படச்சொல்ல வேண்டுமென்று கேட்க, வால்மீகரிஷி சொல்லுகிறார். புரட்டாசி மாதம் சுக்லபட்சதசமி முதல் ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்சத்தில் தீபாவளி அமாவாசை வரையிலும் இருபத்தொருநாளும் கேதாரி ஈஸ்வரனை இலிங்கத்தில் ஆவாகனஞ்செய்து அதற்குத்தினந்தோ றும் அபிஷேகஞ் செய்வித்து வஸ்திரம், ஆபரணம், புஷ்பமிவை களால் அலங்கரித்து தினம் ஒரு வில்வம், ஒரு சந்தனவுருண்டை, ஒரு மஞ்சளுருண்டை, ஒரு பாக்கு, ஒரு வெற்றிலை, ஒரு வெல்ல வுருண்டை, ஒரு அதிரசமும்வைத்து நைவேத்தியஞ் செய்து தூப தீபங்கொடுத்த பிற்பாடு இருபத்தோரிழையிலே முறுக்கியகயிறு ஒன்றை தினந்தோறும் ஒருமுடியாக இருபத்தொருமுடி முடிந்து இந்தப்பிரகாரம் இருபத்தொருநாளும் உபவாசமாக இருந்து அந் தக்கயிற்றை கைகளிலாவது சிரசிலாவது அணிந்துக்கொண்டு நை வேத்தியம் செய்யத அதிரசத்தையும் சாப்பிட்டு கிரமமாய் இந்த விரதத்தை அனுஷ்டித்து வந்தால் இருபத்தோராம் நாளில் தீபா வளி அமாவாசையி னன்றைக்குப் பரமேஸ்வரர் ரிஷபவாகனரூட ராய் எழுந்தருளி வந்து காட்சிகொடுத்து நீர் கேட்ட வரத்தைக் கொடுப்பாரென்று வால்மீக ரிஷிசொல்ல, அதைக்கேட்டுஈஸ்வரி வெகுசந்தோஷங்கொண்டு அவர் வாக்கின்படி அவ்விரதத்தை

இருபத்தொருநாளும் வெகு பரிசுத்தமாகவிருந்து பத்தி வினயத்துடனே அனுஷ்டித்தால். விரதம் முடிந்தவுடனே ஸ்ரீ கயிலாசபதியாகிய பரமேஸ்வரன் ரிஷபவாகனரூடராய் எழுந்தருளிவந்து ஈஸ்வரிக்கு காட்சிகொடுத்து உனக்குவேண்டிய வரத்தைகேளென்று சொல்ல ஈஸ்வரியும்மனமகிழ்ந்து சுவாமி அடியாளுக்குத் தங்களுடைய இடப்பாகந் தரவேண்டுமென்று கேட்க, அப்படியே சிவபிரான் ஈஸ்வரிக்கு இடப்பாகங்கொடுத்து ரிஷபவாகனரூடராய் ஸ்ரீகயிலாயத்திற்கு எழுந்தருளினார். இதை தேவ கன்னிகைகள் அறிந்து இந்தவிரதத்தை நாமும் அனுஷ்டித்துப் பூலோகத்திலே பிரபலப்படுத்திவைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு கங்கைக்கரைக்குவந்து ஒரு ஆலவிருட்சத்தின்கீழே பார்வதியம்மன் நோன்புநோற்ற பிரகாரம் தாங்கள் நோற்கச் சக்தியில்லாமையால் ஒரேதரமாக ஐப்பசி மாதத்தில் தீபாவளி அமாவாசையினன்றைக்கு அந்த தேவகன்னிகைகள் மணலை இலிங்கமாகப் பாவித்து கேதாரி ஈஸ்வரனை அதில் ஆவாகனஞ்செய்து புஷ்பம் அலங்கரித்து ஒரேநாளையில் இருபத்தொருநாளுஞ் செய்ய வேண்டியபடியே இருபத்தொரு வில்வம், இருபத்தொரு சந்தன உருண்டை, இருபத்தொரு மஞ்சள், இருபத்தொரு வெல்ல உருண்டை, இருபத்தொரு அதிரசம், இருபத்தொருபாக்கு, இருபத்தொருவெற்றிலை, இருபத்தொரு யிழையிலே ஒரு கயிறு முறுக்கி அதிலே இருபத்தொரு முடி முடிந்து இதுகளெல்லாம் ஒரு புது முறத்திலே வைத்து தீபதூப நைவேத்தியஞ் செய்தார்கள்.

அச்சமயத்தில் புண்ணியவதி பாக்கியவதியென்னும் இரண்டு ஏழை ராஜகன்னிகைகள் தண்ணீர் சொரிய கங்கைக் கரைக்குப் போகும்பொழுது தெய்வலோகத்துக் கன்னியர்கள் ஆலவிருட்சத்தின் கீழே நோன்பு நோற்கிறதைக் கண்ணுற்றுஅவ்விடஞ்சென்று நீங்கள் என்னநோன்பு நோற்கிறீர்கள், என அதற்கு அந்ததெய்வ கன்னியர்கள் கேதாரீஸ்வரன் நோன்பென்றும், அதுவருங்காலத்தையும், அக்காலத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விரத ஒழுங்குகளையும், அதைத்தவறுதலில்லாமல முடித்தபேர்களுக்குஸ்ரீகயிலாசவாசர் பிரத்தியட்சமாக வந்து அவர்கள் கேட்டவரங்களையெல்லாந் தந்து இரட்சிப்பார் என்றும் சொல்லக்கேட்டு இராஜகன்னிகைகள் அம்மாதாய்மார்களே, எங்கள்தகப்பனார் வெகுதரித்திரதிசையிலிருப்பதனால் தாங்கள் எங்கள் மீது கடாட்சம்வைத்துதாங்கள்

ஐஸ்வரிய முடையவர்களாகவும் எங்களிரண்டுபேர்களையும் தகுந்த இராஜகுமாரர்கள்வந்து பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டுபோகும்படியாயுஞ் செய்விக்க வேண்டுமென்று மிகவும்வருந் திக்கேட்டார்கள், அதற்கு அந்தக் தெய்வலோகத்துக் கன்னியர்கள் நாங்களே உங்களுக்கும் நோன்புநோற்றுத்தருகிறோமென்று சொல்லி ஆலம்விழுதையறுத்து அதில் இருபத்தொருமுடியு முடிந்து அவர்கள் கயிற்றுடன் கூடவைத்து நைவேத்தியம் செய்து அந்த ஆலம் விழுதை அவர்கள் கைகளிலே கொடுத்து அணிந்துக்கொள்ளச் செய்து நீங்கள்இந்தப்பிரகாரம் தவறாமல் வருஷாவருஷம்செய்து வாருங்கள், உங்களுக்கு சகலைஸ்வர்யங்களும் உண்டாகுமென்று சொல்லிவிட்டுத் தெய்வலோகத்திற்குப்போய்விட்டார்கள். அதன் பின்பு, புண்ணியவதி பாக்கியவதி என்னும் இரண்டுபேர்களுந்தங்கள் வீட்டிற்குச் செல்லுகையில் வீடுஅடையாளந் தெரியாமல்,தங்கள்வீடு உப்பரிகையாய் போய்விட்டபடியினால் தியங்கிவிசாரமுற்று வீதியிலேநிற்கிறபொழுது அக்கன்னிகையின் தாய்தந்தைகள்வந்து இப்பெண்களைக்கண்டு அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய் நல்ல வஸ்திராபரணங்களைக்கொடுத்து அலங்கரித்துக்கொள்ளச் செய்து அறுசுவைப் பதார்த்தங்களுடனும் புசிக்கச்செய்த பிறகு நடந்தவிருத்தாந்தங்களையெல்லாம்கன்னிகைகள்சொல்லக்கேட்டு சந்தோஷப்பட்டு வாழ்ந்திருக்கிற நாளையில் சிலநாள்கழிந்தபிறகு புண்ணியவதியென்னும் பெண்ணை சக்ரகிரிஎன்கிறபட்டணத்தை அரசாளுகிற சக்ரகிரி மகாரஜாவிற்கும் பாக்கியவதி யென்னும் பெண்ணை அளகாபுரிபட்டணத்தையாளுகின்ற அளகேச மகாராஜாவிற்கும்வெகு சம்பிரமமாகவிவாகம் செய்வித்துச் சகலவரிசைகளுங் கொடுத்து அவரவர்கள் அரண்மனைக்கு அனுப்பினார்கள்.

அவர்களும் இந்நோன்பு பலத்தினாலே நமக்கு அதிஷ்டம் வந்ததென்று வருஷாவருஷம் நோன்பு வனுசரித்துபுத்திரசம்பத்தும் போகபாக்கியமுமாயிருக்கிறநாளையிலே பாக்கியவதியென்கிறவள் தன்னுடைய துரதிஷ்டசதினாலே நோன்பை மறந்து நோன்பு கயிற்றை அவரைப்பந்தலின்பேரில் அவிழ்த்துப்போட்டு விட்டு அப்படியே மறந்துபோனபடியினாலே மறுமண்டலத்து இராஜா சதுரங்கசேனையுடனே வந்து அளகாபுரிப் பட்டணத்தைக் கொள்ளையிட்டு பண்டுபண்டார சமஸ்தமும் கைப்பற்றிக்கொண்டான்

பாக்கியவதிக்கு தரித்திரம்வந்து பிரவேசித்து சாப்பாட்டிற்குங் கூட மிக்க கஷ்டம் நேரிட்டும், வாசலிலே அவரைச்செடியிலே காய்கள் மிகுதியாய்க் காய்க்கிறபடியால் அந்த அவரைக்காயைப் பரித்து விற்றுஜீவனஞ்செய்துக்கொண்டிருக்கையில் பாக்கியவதி யெண்ணுதெல்லாம் எண்ணித் தன் பிள்ளையை யழைத்துச்சக்ர கிரியிலே வாழுகிற உன்னிட பெரியதாயாரண்டைக்குப் போய் நமது வர்த்தமானமெல்லாஞ் சொல்லி சில திரவியம் வாங்கிவா வென்று வழிக்குக் கட்டமுது கட்டிக்கொடுத்து அனுப்பினுள். அப்படியே அந்தப் பிள்ளை சக்ரகிரிக்குப் போய் தன் பெரியதாயாரைக்கண்டு தங்கள் வர்த்தமானமெல்லாஞ் சொல்ல அவள் தாபந்திரியப்பட்டு பிள்ளையை நாலு நாள் வைத்திருந்து சில வஸ்திரங்களும், சில ஆபரணமும், சில திரவிய முடிப்புங்கட்டமுதுங்கட்டிக்கொடுத்து அனுப்பினுள். அதைவாங்கிக்கொண்டு சிலதூரம் வந்து ஒருகுளக்கரையிலே மூட்டையைவைத்துக்கட்டமுதுசாப்பிடுகிறவேளையில் மூட்டையைக்கருடன் எடுத்துக் கொண்டுபோய் விட்டான். அதுகண்டு மனஸ்தாபப்பட்டு மறுபடியும் பெரியதாயாரிடத்திற்குப் போய் இந்த சேதியைச் சொல்லவே அப்படியாவென்று மறுபடியும், சில திரவியம் கட்டிக்கொடுத்து அனுப்பினுள். அதை யெடுத்துக்கொண்டு வரும்போது வழியிலே ஒரு திருடன்வந்து அடித்துப் பறித்துக்கொண்டுபோனுன். மறுபடியும் துக்கப்பட்டுக்கொண்டு பெரியாதயாரண்டைக்குப்போய் நாங்கள் பண்ணினபாவமென்னமோ தெரியாது இப்பொழுது கொடுத்ததிரவியத்தையும் திருடன் கொண்டுபோனுனென்றுசொல்லக்கேட்டு, உனதுதாயார் கேதாரி ஈஸ்வரர் நோன்பு நோற்று வருகிறுளா இல்லையாவென்றுகேழ்க்க, அந்த நோன்பு இப்போது நோற்கிறதில்லை, முன்னே நோற்றுக்கயிற்றையும் அவரைப்பந்தலின்பேரில் போட்டுவிட்டாள். அன்றுமுதல்தான் இப்படி வந்தாம்போற்றேனுதென்றுன். அப்படியாவென்று ஐப்பசிமாதம் வருந்தனிலும் பிள்ளையைவைத்திருந்து தான்நோற்கிறநோன்புடனே பாக்கியவதிக்கும் ஒரு நோன்புவைத்து நோற்று அந்தநோன்புக் கயிறும் பலகாரமும் பாக்கு வெற்றிலை மஞ்சளும் இன்னுஞ்சில ஆடையாபரணமும் திரவியமுங்கொடுத்துசிலசேவகரையுங்கூட்டி அனுப்பினுள். வழியிலேவரும்போதுமுன்னே அபகரித்துப்போன திருடனும் திரவியத்தைக்கொண்டுவந்துகொடுத்தான். கருடனும்

மூட்டையைப்போட்டு உன் தாய் விரதம் நோற்காமல் விட்டுவிட்டதினாலே இப்படிவந்தது. இனிமேல் பயபக்தியுடனே நோன்பு நோற்கச்சொல்லென்று சொல்லிப்போயினன் அதுகண்டு இந்தப் பிள்ளை ஆச்சரியப்பட்டு சந்தோஷத்துடனே தன் வீட்டுக்குவந்து தன் தாயின் கையிலே நோன்புக் கயிற்றையும் பலகாரத்தையும் தனத்தையுங் கொடுத்து நடந்த சவிஸ்தாரங்களை யெல்லாஞ் சொல்ல மெய்தான் என்புத்தியீனத்தினாலே கெட்டேனென்று ஸ்நானஞ்செய்து கேதாரீஸ்வரனைநமஸ்காரஞ்செய்து கயிற்றை வாங்கிக் கட்டிக்கொண்டாள். அடுத்த நாளுக்கே தங்கள் பட்டணத்தைக் கைப்பற்றிக்கொண்ட இராஜாவந்து பட்டணத்தையும் பண்டுபண்டார முதலிய ஆனை சேனைகளையும் ஒப்புவித்து பகுதியுங்கொடுத்துப் போயினன். பிற்பாடு இவர்கள் பழையபடி தங்கள் சீமையை யாண்டுக்கொண்டு சகல சாம்பிராஜ்யமும் அனுபவித்து இந்த நோன்பை மறவாமல் நோற்றுவந்தார்கள். ஆனபடியினாலே இந்த கேதாரீஸ்வரர் நோன்பை யாதாமொருவர் தப்பாமல் நோற்றுவருகிறார்களோ அவர்களெல்லாம் இம்மையிற் புண்ணியவதி பாக்கியவதியைப்போல சகலைஸ்வர்யங்களையும் பெற்று மறுமையிலே நித்தியானந்த பெரு வாழ்வையு மடைவார்கள். சுபம்! சுபம்!! சுபம்!!!

---

## கார்த்திகை தீபதரிசன விரத வரலாறு.

முன்னொரு காலத்தில் மகா விஷ்ணுவுக்கும் பிரம தேவனுக்கும் பிரமவாதம் நேரிட்டதால் அதைத் தீர்க்கும்பொருட்டாகச் சிவபெருமான் அக்கினிமலை வடிவாய் அவர்கள் மத்தியில் நின்று அக்கலகத்தைத் தீர்த்தருளினார். பின்பு அவர்கள் வேண்டுதலினாலே அவரொரு சிறிய மலையுருக்கொள்ள அதைக்கண்ட பிரமதேவனும் மகா விஷ்ணுவும் மகிழ்ச்சியோடவரைநோக்கிச் சுவாமி மலையினுச்சியில் ஒரு சோதி யெக்காலுந் தெரியும்படிக்குக் கிருபைச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானவர் கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை நக்ஷத்திரத்தில் இம்மலையினுச்சியின்கண் ஒரு சோதி காண்பிப்போம் அச்சோதியைத் தரிசித்தவர்கள் தரித்திரமும், வியாதியும் நீங்கி இஷ்டகாமியங்களைப் பெற்று வாழ்வார்கள். இவையல்லாமல் அர

சர்களும் தவசிகளும் தரிசிப்பார்களாகில் இடையூறின்றி வாழ்வார்கள். அன்றியும் இதைத் தொழுதவர்களுக்கும், தரிசித்தவர்களுக்கும், அவர்மட்டில்லாமல், அவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொரு தலைமுறைக்கும் மோக்ஷங்கொடுப்போமென்று அருணாசலபதி திருவாய்மலர்ந்தருளினார். அதேபிரகாரம் அம்மலையின்மேல் சோதிதரிசனமான பாவனையாக இப்போதும் தீபதரிசனமாகின்றபடியால் அத்தினத்தில் இந்திர தீர்த்தமுதலிய தீர்த்தமாடி கிரிவலம் வந்து தீபதரிசனஞ்செய்து துதிப்பவர் அளவிலாச் சம்பத்தை மோக்ஷத்தையுமடைவர்.

**சர்வாலய தீப தரிசனம்:**—ஸ்ரீகைலாயத்தில் பரமசிவம்பார்வதி சமேதராய் வீற்றிருக்கும்போது ஒருநாள் அங்கேற்றியிருந்த நெய்த் தீபங்களில் ஒன்று அணைந்து போகிற சமயத்தில் ஒரெலி அபுத்திபூர்வமாயதைத் தன்முகத்தால் தூண்டிப்பிரகாசிக்கச்செய்தது. அதனால் கைலாசபதி மனமகிழ்ச்சியோடு கிருபைகூர்ந்து அவ்வெலிக்குத் தானவ சரீரமும் அதிக சம்பத்தும் கொடுத்துபூமியில் பிறக்கும்படி கடாட்சித்தருளினார். அவ்வெலியானது அவரனுக்கிரகப்படி மாபலிச் சக்கரவர்த்தியாய்ப்பிறந்து சகலஐசுவரியத்தையும் அநுபவித்திருக்குங்காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப்போக வெத்தனித்துத் தன் இராஜ சின்ன முதலிய சகல ஆடம்பரத்துடன் சிவாலயத்துட் பிரவேசித்து பிரதக்ஷணம் வருகையில் அவ்விடத்திலேற்றியிருந்த தீபநெய்யில் ஓர்துளி இச்சக்கரவர்த்தியின்தேகத்தில் ஒழுகினவுடனே அந்த சக்கரவர்த்தியின் தேக முழுமையும் விரணம் (புண்) கண்டு வெகுகாலம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒருநாள் பரமேசுவரர் கிருபைகூர்ந்து சக்கரவர்த்தியே நீமிகவும் அகங்காரியாகையால் இஃதுண்டாயிற்று நீ இன்றுமுதல் என்னை உத்தேசித்து நெய்முதலிய பொருள்களால் ஆலயங்கட்குத் தீபமேற்றுவாயேயானால் உனக்கு இந்த விரணந்தீர்ந்து சாயுச்சியபதங்கிடைக்குமென்று அசரீரியாகத் திருவுளம்பற்றியதைக் கேள்வியுற்ற சக்கரவர்த்தியானவர் ஆனந்தமடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலு மற்ற இருள்சூழ்ந்த ஆணியங்களிலும் தீபமேற்றிக்கொண்டு வருங்காலங்களில் ஒருநாள் ஸ்ரீகைலாசபதியான சிவபெருமானானவர் திருவுளமிரங்கிக் கார்த்தி

கைமீ பூர்வபக்ஷம் கார்த்திகைநட்சத்திரத்தில் தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கரவர்த்திக்குச்சாயுச்சியபதமளித்தருளினார். அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உக்கிர உஷ்ணந்தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம்பண்ணினார்கள். இவ்வாறுகைலாயபதி மாவலிச்சக்கரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங்கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள்தோறும் கார்த்திகைமீ பூர்வபட்சம் கார்த்திகை நட்சத்திரத்தில் தீபம் வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவுமாயிற்று.

இதற்கு ஆகமவிதியென்னெனில்:—கார்த்திகை நட்சத்திரத்திற்கு முன்னாளாகிய பரணி நட்சத்திரத்தின் சாயங்காலம் அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலானவைகளின் மூலமாக மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்ததீபத்தைச் சுவாமி சன்னிதியிற்றானே பூசித்துவைக்கவேண்டும். அதற்குமேல் தென்னை, பனை, கமுகு, வாழை, பூங்கில் என்னும் இந்த மரங்களில் ஓர் வித மரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிக்குக்கும் மத்தியஸ்தானமாகிய பிரமஸ்தானத்தில் நாட்டவேண்டும். இந்த மரத்துக்கு தீபதண்டமென்றுபெயர்; இந்தத்தீபதண்டம் கர்ப்பக்கிரகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது அந்தவிமானக் கழுத்தினளவாவது இருக்கவேண்டும் இவ்வித தீபதண்டத்துடன் உலர்ந்த ஓலையாவது சருகாவது விமானம்போல கட்டவேண்டும். மேற்சொன்ன பரணிநட்சத்திரத்திற்கு மறுநாளாகிய கார்த்திகை நட்சத்திரத்தில் பஞ்சமூர்த்த சமேதராய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி ஷை தீபம் சுவாமிக்குமுன்னே வரும்படியாகக் கொண்டுவந்து தீபதண்டத்தை சமஸ்காரப் படுத்திக்கொண்டு அத்தீபத்தை அந்த தண்டத்தின் மேல் வைத்து சருகுகளைக்கொளுத்திவிட்டு அச்சருகுகள் எரிந்த பின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும் அந்தச் சோதியைச் சிவமாகப் பாவனைசெய்து தரிசிப்பவர்களுக் கிம்மையிற் செல்வமு மறுமையில் மோக்ஷமுண்டு. மலையைச்சேர்ந்ததலங்களில் நட்சத்திரம் பிரதானமாகவும், சமுத்திரஞ்சூழ்ந்த தலங்களில் பௌர்ணமி பிரதானமாகவும், தீபம்வைக்கவேண்டியது.

# சோமவார விரத வரலாறு.

நைமிசாரண்ணிய வாசிகளாகிய முனிவர்கள் ஓர் காலத்துத் தம்மிடத்திற்கெழுந்திருளிய முனிச்சிரேட்டராகிய கௌதமருக்கு சோடசவுபசாரங்களைச்செய்து சுவாமி அடியேங்கட்கு அனுக்கிரகஞ் செய்யவேண்டிய தொன்றுளது. அது உலகத்தில் நடந்துவருகிற சோமவார விரதமென்பதேயென்று விண்ணப்பம் செய்துக் கொண்டனர் அம்முனிச் சிரேட்டர் ! முனிவர்களே ! கேளுங்கள் பூர்வத்தில் சந்திரனனவன் உமையாசகிதத்வா சோம: வென்னுஞ் சகபூர்வபதசமாச பதமாகிய திருநாமச் சொரூபராகிய சிவபெருமானுக்குரிய நாளிலேவிரதமிருந்து அச்சிவபெருமானால் நல்லபேறடைவதே சிறப்பெனக்கருதி சோமவாரமானது அவரது திருநாமத்தைப்பெற்றிருப்பதால் இந்த வாரத்தில் நாம் விரதமிருப்பதே தகுதியென்று நியமித்து அதில் விரதாரம்பஞ்செய்து முடித்தவுடனே சிவபெருமான் இவரது தவத்திற்கிரங்கிப் பிரத்தியட்ச தரிசனந்தந்து ஓ ! சந்திரனே உனக்கு வேண்டியவரங்கேளெனச் சந்திரன் மஹாசந்தோஷமுடையவனாய்ப் பலவாறுதோத்திரஞ்செய்து சுவாமீ ! அடியேன் தங்களிடத்தே எப்போதும் வாசமாயிருக்கவும் அதற்குத்தக்க பெயரொன்றையடையவுந் தேவரீரருள் புரியவேண்டுமென உடனே சிவபெருமான் சோமன் என்னும் பெயர்தந்து தனது சடையிலேயும் அச்சோமனைத் தரித்துக்கொண்டனர்.

பின்னரோர்காலத்தில் கைலையங்கிரியில் நவரத்தின கசிதமாகிய ஆசனத்தில் தேவர்களும் கின்னரர் கிம்புருடர் சித்தவித்தியாதரர் இருடிகள்முதலிய மற்றுமுள்ளோர்களும் தோத்திரஞ்செய்ய வீற்றிருந்த சிவபெருமானைப் பார்வதியார்வந்து சோடசோபசாரஞ்செய்து வணங்கினவுடன் அப்பெருமான் யாவருமதிசயிக்கத் தனது சடாபாரத்திலிருந்த சந்திரனைப் பலருங்காணக் காண்பித்தருளினரதுகண்டு அங்ஙனமின்றோர் யாவரு மஹா வானந்தமுற்றிருந்தபோது பார்வதியார் இச்சந்திரன் யார்க்குமரிதாகிய தமது முடியையடைந்து வாழும் பெரும்பேறடைந்த காரணத்தை அடியாளுக்கருளவேண்டுமென்று தோத்திரிக்கச் சிவபெருமான் சொல்லுகின்றனர்.

ஓ பார்வதி ! எனக்குரிய சோமவார விரதத்தை மஹாபக்தியுடன்விதிப்படிசெய்து முடித்ததனாலடைந்தனனென்றனர். உமையவள்மிகமகிழ்ந்துசுவாமீ அடியாளுக்கும் அவ்விரதமுறைமையைய்

கூறியருள வேண்டுமென்று துதிக்கச் சிவபெருமான் யாவருமுய்யும் பொருட்டு ஓ கௌரீ! சோமவாரதினத்தி லிவ்விரதத்தை யனுட்டித்துப் பெரும் பேறடைய வெண்ணுவோர் ஆரம்பத்தில் அஷ்டதிக்கிலு மட்டகலசங்களையும் நடுவேபத்மாசனத்தில் பாணலிங்கத்தையும் ஆசிரியனைக் கிழக்குமுகமாகவும் நிறுத்தி வில்வம், அருகு, வெள்ளெருக்கு, வெள்ளைபட்டு, வெள்ளையட்சதை, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், சந்தனம், புனுகு, இளநீர் முதலிய சிவபூசாதிரவியங்களை யருகிருத்தி அபிஷேகஞ்செய்து ஓம் மகாதேவாயநமா:, ஓம்மகேஸ்வராயநமா:, ஓம்சங்கராயநமா:, ஓம் இடபத்துவசாயநமா:, ஓம்சூலபாணிநமா:, ஓம் காமாங்கநாசனாயநமா:, ஓம் தேவதேவேசாயநமா:, ஓம் ஸ்ரீகண்டாயாநமா:, ஓம்ஈஸ்வராயநமா:, ஓம்பார்வதிப்பிரியாயநமா:, ஓம்உருத்திராயநமா, ஓம்சிவாயநமா:, வென்னும் பன்னிரண்டு திருமந்திரங்களை புட்பத்தாலருச்சித்து தூபதீபவாராதனையும் சோடசோபசாரமு முடித்துப் பன்னிரண்டுபிரதட்சண நமஸ்காரஞ்செய்து ஒருவேளைகாலை போஜனமேனும், மாலைபோஜனமேனும் அல்லது உபவாசமேனு மிருப்பதாக நியமித்துக்கொள்ளவேண்டும்.

அதமம், மத்திமம், உத்தமம் என்னுமூன்றினுள் உத்தமமாகிய உபவாசநியமனஞ் செய்வோர் நித்திரையின்றிச் சிவபுராணங்களைக் கேட்டும்படித்து மிரவைக்கழித்து மறுநாள் காலையில் பாரணை செய்யவேண்டும். இவ்வாறு பிரதமத்தில் நடத்துவோர் ௩, ௨, ௧ வருடங்களிலாவது விரதமுடிவு செய்வதாக வாரம்பத்திலேயே சொல்லி, முடிவிலு மிவ்வாறே நடத்துவதன்றிப் பன்னிரண்டு பிராமணர்களைச் சோடசோபசாரஞ் செய்துவணங்கி அர்த்தநாரீசவுருவமைந்த பொற்பாத்திரத்திற்கும் அபிஷேக முதலியவற்றை நடத்தவேண்டும்.

இடைநின்ற சோமவாரங்களின் காலையில் சிவசிவாவென்றெழுந்து நதி, ஏரி, குளம், கால்முதலிய விடங்களிற் சென்று சிவபூசையைமுடித்துக்கொண்டு வில்வம் ௰ அருகு ௰ வெள்ளையட்சதை ௰, இம்மூன்றையுங்கொண்டு பிரதோஷகாலத்திற் சிவாலயத்துட் கிரமப்படி பிரவேசித்து முற்கொண்ட வில்வ முதலியவற்றாலருச்சித்துச் சிவதரிசனஞ்செய்துவந்து உண்டுசிவபுராணங்களைப்படித்துங் கேட்டுக்களித்துச் சயனிக்கவேண்டும். இவ்வாறு இவ்விரதங்

கொள்வோர் வெள்ளைவஸ்திரத்தையேதரித்துக்கொண்டு ஆபரண மின்றிச் சிவசந்நிதானத்துட் பிரவேசித்தல்முறை; இம்முறைப்படி நடத்துவோர் பெறுவதற்கரிய சாயுச்சியபதவியையடைவர் என்ப தற்குச் சந்தேகமில்லையென்று திருவாய்மலர்ந்தருளினர் என்று சொல்லிக் கௌதமர் விடைபெற்றுச் சென்றனர். ஆதலின் இவ் விரதத்தை யனுட்டிப்போர்களிற் பெண்டீர் சரிகைப்புடவையு மாபரணங்களும் நீங்க வெள்ளைவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு இரங்கின சிரமிராது சிவமந்திர நாவினராய்ச் சிவாலய தரிசனத் திற்குச் செல்வராயின் புருடர்களினு மிவரது விரதஞ் சிறந்ததா மென்பதற்குச் சந்தேகமில்லை.

## ஆருத்திரா தரிசன விரத வரலாறு.

இது சிருஷ்டி ஸ்திதிசங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என் னும் பஞ்சகிர்த்தியங்களைப்பற்றியது, எப்படியெனில், நடேசர்சிற் சபை விட்டெழுந்தருளுவது சிருஷ்டி, இராக்ஷாபந்தனந்தரிப்பது ஸ்திதி, கிருஷ்ணகந்தந் தரிப்பது சங்காரம், வெள்ளை சாத்துவது திரோபவம், உற்சவங்கொண் டருளுவதும் மட்டை யடிப்பதும் அனுக்கிரகம். அகங்கரித்த அசுரரைச்சங்கரித்தபோது அவர்களு டையசரீரம் கரியபஸ்பமானதால் அதைத்திலதமாக்கித் தரித்துக் கொண்ட பாவனையாகக் கிருஷ்ணகந்தம் (கறுப்புசாந்து) சாத்து வது, அச்சங்காரகாலத்தில் திருமேனி அதிஉக்கிரமாயிருந்தமை யால் அது தணியும்பொருட்டுத் தேவர்கள் அந்தத் திருமேனியை வெள்ளை வஸ்திரத்தினாலும் வெள்ளைபுஷ்பத்தினாலும் மறைத்தார் கள் அந்தப்பாவனையாகவெள்ளைசாத்துவது, நடேசமூர்த்தியாகிய சபாநாதருக்கு வருஷந்தோறும் மார்கழிமீ திருவாதிரை, மாசிமீ பூர்வபக்ஷசதுர்த்தசி, சித்திரைமீ திருவோணநக்ஷத்திரம், ஆனிமீ உத்திர நக்ஷத்திரம், ஆவணி புரட்டாசிமீ பூர்வபக்ஷ சதுர்த்தசிகள் ஆக ஆறு அபிஷேகங்கள்நடக்கின்றன. இதற்குக்காரணம், சிவலிங் கப் பெருமானுக்குத் தினம் ஆறுகாலபூஜை செய்யும்படி ஆகமங்க ளில் சொல்லுகின்றது அதற்கு விவரம் இராத்திரி ௨௰-முதல்-௩௰ நாழிகைக்குள்செய்கிறபூஜை பஞ்ச உஷத்காலபூஜையாம். உதயமு தல் ௩௦-நாழிகைக்குள்செய்வதுகாலசந்திபூஜையாம்:௨௦நாழிகைக் குள் செய்வது உச்சிகாலபூஜையாம்: ௩௰-நாழிகைக்குள் செய்வது

பிரதோஷகாலபூசையாம்: இராத்திரி $7\frac{1}{2}$-நாழிகைக்குள் செய்வது சாயங்காலபூஜையாம்: க-கவ-நாழிகைக்குள் செய்வது அர்த்தசாம பூஜையாம்: மனுடருக்கு ஒருவருஷம் தேவர்களுக்கு ஒருநாளாகையால்மேற்சொன்ன வருஷாந்தர ஆறுஅபிஷேகங்களும் முறையே தேவர்கள்நிதஞ்செய்யும் ஆறுகாலபூஜையாம். ஆயின் திருவாதிரை பரமசிவம் சகளீகரித்த தினமாகையால் விசேஷமானது. சமயாசாரிகளென்னும் திருநெறித் தலைவர்களிலொருவராகிய மாணிக்கவாசகசுவாமிகள் தமக்கு ஆசாரிய மூர்த்தமா யெழுந்தருளிய பரமசிவம் அருளிச்செய்தபடி திருவுத்தர கோசமங்கையிற்சேர்ந்து சிவாலயத்துட்சென்றுபணிந்து தோத்திரஞ்செய்து சுவாமிகுருமூர்த்தமாகத் தரிசனம்கொடுக்கத்தரிசித்து விடைபெற்றுக்கொண்டுதிருவிடைமருதூர் முதலிய தலங்களுக்குப்போய் சிவலிங்க தரிசனம் பண்ணிக்கொண்டு திருவண்ணாமலைக்கெழுந்தருளி அருணாஜலேஸ்வரர் ஆசாரியமூர்த்தமாகத் தரிசனம்கொடுக்கத்தரிசித்து அங்கே வாசஞ்செய்துக்கொண் டிருக்கும்போது மார்கழிமீ திருவாதிரை நட்சத்திரத்திற்குமுன் பதினொருநாளளவும்விடியற்காலத்தில் அங்கிருக்கு மாதர்களெல்லாரும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போய்த் தோழியே! நமதாண்டவனாகிய பரமசிவனை தோத்திரஞ்செய்யக் கேட்டு இன்னமும் நீ நித்திரைசெய்யலாமா உன்காது வலியகாதா எழுந்திரு; அருணாஜலேஸ்வரரை தரிசிக்கலாமென்றுசொல்லி எல்லோரும் ஸ்நாநாதிகிரியமங்களை முடித்துக்கொண்டு வருமன்பினைக் கண்டு உள்ளத்திலானந்தங்கொள்ள அவர்கள் பேசிக்கொண்டது போல் “திருவெம்பாவை” யோதினர். ஆதலால் மார்கழிமீ சிவாலயங்களிலெல்லாம் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகட்கு உற்சவம்நடப்பதும் திருவெம்பாவை யோதுவதுமாகப் பெரியோரால் ஏற்படுத்தப்பட்டு வழங்கிவருகின்றன.

## ஏகாதசி விரத வரலாறு.

ஸ்ரீருத்திரபகவான் ஸ்ரீபார்வதிதேவியாருக்குச்சொன்னவண்ணமாகச் சூதபுராணிகர் சௌனகாதி ரிஷிகளுக்குச் சொல்லிய ஏகாதசி மகத்துவத்தைத் திலீபச்சக்ரவர்த்திக்கு வசிஷ்டர் பின் வருமாறு சொல்லுகின்றார்.

ஸ்ரீ ஹரிபக்தரிற்சிறந்த தூருவாச மகாரிஷி மகாமேரு வில் வித்தியாதரர்கள் பூசிக்க ஒருவருஷம் வாசஞ்செய்துகொண்டிருந் தனர். அப்போதொருநாள் ஒரு வித்தியாதரஸ்திரீ ஸ்ரீவைகுந்தத் திற்குச்சென்று ஸ்ரீமகாலட்சுமி திருவுள்ள முவக்கயாழ்வாசித்து அவளது ஸ்ரீபாதாரவிந்தங்களில் தரித்த பூமாலையையாழில் கட்டிக்கொண்டுவருகிறதை தூருவாசர் கண்டு அக்கன்னிகைக்குத் தெண்டனிட்டு அம்மாலையைப்பெற்றுக்கொண்டு இந்திரலோகத்துக் குப்போய் சகலதேவர்களும் ரிஷிகளும் புடைசூழ பவனிவருகிற இந்திரனை ஆசீர்வதித்து அம்மாலையைக்கொடுக்க, அவன் அதன் பெருமைதெரியாது அங்குசத்தால் வாங்கித் தானேறிவந்த ஐராவதத்தின்தலைமேல் வைக்க, அது கீழேதள்ளிக் காலால்மிதித்தது அதுகண்டு தூருவாசர் கோபாவேசத்தோடு இந்திரா நீயும் பிரமவிஷ்ணு ருத்திராதிகளும் யாருடைய கடாக்ஷண்ணியத்தால் லோகேஸ்வரர்களாயிருக்கிறீர்களோ அந்த மகேஸ்வரியினுடைய பிரசாதத்தை உனக்கு க்ஷேமமுண்டாக நான் கொடுக்க, நீயதை யனாதரஞ்செய்தபடியால் உன்னுடைய சகல சம்பத்தும் க்ஷீணித்து நீயுந்துன்மடையக்கடவாயெனச் சபித்தனர். அப்படியே ஸ்ரீ மகாலட்சுமி தன்னிச்சையாகவே அந்தர்த்தானமாயினள். உடனே இந்திரனுக்குரிய செல்வம்யாவும் குறைந்து வறுமைபெருகி பசி முதலியவற்றால் வருந்தநேரிட்டது.

பின்பு இந்திரன் ஸ்ரீ பதுமநாபனாலன்றி வேறொருவரால்இத் துயரொழியாதெனவறிந்து, சகல தேவர்களும் புடைசூழ்ந்துவர திருப்பார்கடலின் வடபாரிசத்திற் சேர்ந்து ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்துக்கொண்டிருக்கையில் பக்தபராதீனராகிய ஸ்ரீஹரிகருடவாகனரூடராய் எழுந்தருள, அங்கிருந்ததேவர்களெல்லாம்தீர்க்கதெண்டன் சமர்ப்பித்து மாதவா, கோவிந்தா, வாசுதேவா எனத் துதிக்க, ஸ்ரீபரந்தாமன் கிருபைகூர்ந்து இந்திராதிதேவர்களே, ஸ்ரீ மகாலட்சுமி சுவர்க்கலோகத்தைவிட்டுத்திருப்பாற்கடலையடைந்ததால்சமஸ்தலோகங்களும் இவ்விததுன்பத்தையடையநேரிட்டது அம்மகாலட்சுமி திருவவதாரநிமித்தம் திருப்பாற்கடலைக் கடையவேண்டும். ஆகையால் நீங்களும் தானவர்களும் சென்று மந்தரகிரியை மத்தாகநாட்டு வாசுகியைத்தாம்பாகப்பூட்டி எம்முடையதிருநாமவுச்சரிப்பின்பலத்தால்திருப்பாற்கடலைக்கடையுங்கள்நாம்

கூர்மாவதாரமாய் அந்தப் பர்வதத்தைச் சகலவிதத்தாலும் தாங்கு கிறோம். அதனால் உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும் பயப்படவே ண்டாமென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர்.

அக்கட்டளையின்படியே அவர்களெல்லாரும்போய் நித்தியகர் மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மந்தரகிரியைநட்டு வாசு கியைப்பூட்டி ஸ்ரீ புருஷசூக்தத்தை யுச்சரித்துக்கொண்டுபுத்தியை ப்பலவிஷயங்களிற் செல்லவொட்டாமல் ஒருமைப்படுத்தி ஸ்ரீஹரி யைத்தியானித்து ஆகாரநித்திரைகளை யொழித்து திதிகளில் உத் தமமான ஏகாதசியில்திருப்பாற்கடலைகடைந்தபோது ஸ்ரீவிஷ்ணு வானவர் கூர்மாவதாரமாய் அந்தப் பர்வதத்தை முதுகிலேசுமந்து சாயவொட்டாமல் ஒருபுயத்தால் அதன் சிரத்தைப்பற்றிநின்றனர் பிரதமத்தில் அதினின்றுகாளகூடவிஷம் பிரளயகாலாக்கினிபோ லெழ, அதைக்கண்டு பிரமன் முதலிய சகலதேவர்களும்பயந்தோ டித்துதிக்க ஸ்ரீ கைலாசநாதர் அந்தவிஷயத்தைப் பானஞ்செய்து அவர்களைக்காப்பாற்றினர். பின்பு அசுத்தமாகிய ஜேஷ்டாதேவி யுண்டானாள். அவளைக் கலிபுருஷனுக்கு நாயகியாக்கித் திரும்பவு ம் கடையும்போது உண்டானவாருணிதேவியைஆதிசேஷனுக்கும் தந்திராதேவியை கருடனுக்கும், ஐராவதம், அமிர்தகலசம், காம தேனுமுதலியவற்றை இந்திரனுக்கும் கொடுத்தார்கள். மறுநாள் துவாதசியில் சூரியோதய சமயத்தில் ஸ்ரீமகாலட்சுமி அவதரித்த னள். அதற்குமேல் சந்திரனும் துளசிதேவியும் உண்டானார்கள். ஸ்ரீ ஹரி மகாலட்சுமியை மணம்புரிந்து தேவர்களைநோக்கி மகா லட்சுமி தரிசனார்த்தமாக நீங்கள் உபாசித்த ஏகாதசி பாபஹதஞ் செய்தபடியால் சகலரும் இவ்விரதத்தையனுஷ்டிக்கவேண்டியது நீங்களெல்லோரும் எம்மை யர்ச்சித்து திருத்துழாயோடு அமிர்த பானஞ்செய்த துவாதசி மிகச்சிறந்தது. ஆகையால் ஏகாதசியில் புசிக்கிறவர்களும் துவாதசியில் எம்மை யாராதிக்காதவர்களும் நரகத்திற்கிரையாவது உண்மையெனத் திருவாய்மலர்ந்தருளி யோக நித்திரையிலெழுந்தருளினர்.

அவ்வாறே தேவேந்திரன் முதல் சகலதேவர்களும்அனுஷ்டி த்து முன்போலவே சகல போகபாக்கியங்களையு மடைந்தார்கள்.

பிறகு பூலோகத்தில் பரமபாகவத சிகாமணியும், விதர்ப்பதே சாதிபதியும், சந்திரகுலத்தரசனுமாகிய ருக்குமாங்கத மகாராஜன்

மேற்படி ஏகாதசி விரதபலனையும் அதன் உண்மையையும் ஓர்காந்தர்வஸ்திரீயால் தெரிந்து, தான் அனுஷ்டித்து தன் ஆக்கினைக்குட்பட்ட நான்கு வருணத்தவரையும் அனுஷ்டிக்கச்செய்து சகலரும்முடிவில் நித்தியானந்த கைவல்லியமாகிய ஸ்ரீவைகுண்டபதிவியை அடைந்தனர்கள். அன்றுமுதல் ருக்குமாங்கதஏகாதசி என்று இப்பூலோகத்தில் பெயர் வழங்கிவருகின்றது ஆகையால்.

ஏகாதசிஇரவில் ஸ்ரீஹரியை திவ்விய வஸ்திராபரணங்களாலங்கரித்துச்சுகந்த புஷ்பாதிகளைச்சாத்தி தூபதீபங்களால் ஆராதித்து பக்தியோடு வேதகானஞ் செய்துகொண்டே நித்திரையில்லாமல் இராக்காலத்தைக் கழித்து அருணோதயத்துக்கு முன்னே திருத்துழாய்க் கலந்த பரிசுத்த நீரிலே ஸ்நானஞ்செய்துபிதிர்தேவதைகளுக்குத் தர்ப்பணஞ்செய்து ஸ்ரீஹரிக்கும் பெரியபிராட்டியாருக்கும் பத்மமாலைதரித்துத் திருத்துழாயாலும் புஷ்பங்களாலும் தூபதீபங்களாலும் ஆராதித்து அவ்வாராதனத்தில் நூற்றெட்டு தீபமிருத்தி, பசுநெய், சர்க்கரைசேர்ந்த பாயசமும், நற்கனிகளும், வாசனைதிரவியங்களோடுகூடிய அடைக்காயமுதும் சமர்ப்பித்து நமஸ்காரஞ்செய்துசமிதையினால் அக்கினிவளர்த்தி ஸ்ரீபுருஷசூக்தத்தினாலே நூற்றெட்டு ஓமம்பண்ணி சூரியோதயத்துக்கு முன்தீர்த்தமும் துளசியும சுவீகரித்து ஸ்ரீவைணவர்களுக்குத் ததியாராதனஞ் செய்வித்துப் பின்பு தானும் புசித்து அன்றைப் பகற்பொழுதை நித்திரையில்லாமலே இதிகாசபுராணங்களால் பகவத்குணானுபவஞ்செய்து போக்கி, அன்றிராத்திரியும் ஸ்திரீ சங்கமமின்றித் தனியே சுசியாய் தரையிற்படுத்து நித்திரிக்கவேண்டும் இப்படி துவாதசியில் ஸ்ரீ ஹரியை ஆராதிப்பவருக்கு அவர் பெரியபிராட்டியாரோடு பிரசன்னமாய் இம்மையில் சர்வாபீஷ்டங்களையும், மறுமையில் பரம்பதத்தையுங் கொடுத்தருளுவர்.

### மாத ஏகாதசிகளின் விரத வரலாறு.

ஏகாதசிவிரதம் அநுஷ்டிப்போர் மார்கழிமாதத்திலே பூருவபக்கத்தில்வரும் ஏகாதசியையே முதலாகக்கொண்டு அநுட்டிக்கவேண்டும். ஆகலின், அது ஆரம்ப ஏகாதசி எனப்பெயர்பெறும். முற்காலத்து நாடிசங்கன் மகனாய மரு என்னும் அசுரனுக்குத் தோற்றோடிய இந்திரன், திருமால் சமுகத்திற்சென்றுமுறையிட

அவரது திருமேனியினின்று ஓர்சத்தி பெண்ணுகத்தோன்றி யவ்வசுரனைக் கொன்று, இந்திரனுதி இமையவர் துன்பத்தை பிரியச் செய்தனள். அதனுல் அச்சத்தியானவள் ஏகாதசியென்னும் பெயருடையவளாய், அத்தினத்தையும் ஏகாதசியெனநோற்பிக்கும்வரத்தையும்பெற்ருள். மற்றைய அபரபக்கத்து வருவதற்கு மோக்ஷ ஏகாதசி யென்றுபெயராம். இதனைக் கோகுலபுரத்து வைகானசர் என்னும் இராசரிஷி அநுட்டித்து முத்தியடைந்தனர். தைமாதத்திலே பூருவபக்கத்து வருவதற்கு புத்திரதா ஏகாதசி என்றுபெயராம் இதனைப் பத்திரவதி புரக்கணிருந்த சுகேது என்னும் அரசனும், தேவியான சைப்பியா என்னும் அரசியும் நோற்றுப்புத்திரப்பேற்றையடைந்தனர். அபரபக்கத்துவருவது சகல ஏகாதசியாம். இதனை, சம்பகாவதி பட்டினத்து அரசகுமாரனுகிய ஏகலன் உபாசித்து தத்துவஞானஞ் சாரப்பெற்றனன். மாசிமாதத்திலே பூருவபக்கத்துவரும் ஜய ஏகாதசியை கந்தருவகுலத்து மாலியவானும், அவன்மனைவியான புட்பவதியும் அநுட்டித்து இந்திரன்சாபத்தானேர்ந்த பைசாசவடிவுநீங்கப்பெற்றனர். மற்றைப்பக்கத்து ஷட்டில ஏகாதசியை ஓர் பிராமணநங்கைநோற்று இட்டசித்தி யெய்தப்பெற்ருள். பங்குனிமாதத்திற் பூருவபக்கத்தில் பொருந்துவது ஆமலக ஏகாதசியாம். இதனை வைதிசநகர்ச் சசபிந்துமன்னனும், சயந்திபுரத்து விதுரவேந்தனும் நோற்றுவேண்டியபெற்றனர். மற்றையபரபக்கத்ததாய விசய ஏகாதசியை இராமச்சந்திரர் உபாசித்து, இராவணவதஞ்செய்து, சீதாபிராட்டியையுஞ் சிறைமீட்டு விசயம்பெற்றனர். சித்திரைமாதப் பூர்வபக்க காமதாஏகாதசியை நாகலோகத்திருந்த லலிதன் என்னுங் கந்தருவன் அநுட்டித்து, புண்டரீகன்என்னும் அரசனது சாபத்தாலடைந்த இராக்கதரூபம் மாறப்பெற்ருன். மற்றைய பாவமோசன ஏகாதசியை மஞ்சுடா என்னுந் தேவகன்னிகை யநுட்டித்துப் பாவங்கள் தொலையப்பெற்ருள். வைகாசியில் பூருவபக்கத்துவரும்துதிமான் என்னும் அரசனும், திருட்டபுத்தி என்னும் வைசியனும் நோற்று முத்தியடைந்தனர். மற்றைய வருதினி ஏகாதசியை அநேக மகாபாதகர்கள் அநுட்டித்து வைகுண்டபதவி யடைந்தனர். ஆனிமா

தத்திற்பூருவபக்கத்தும்பொருந்துய் பாண்டவஏகாதசியை பாண்டவர்கள் அநுட்டித்துக் கண்ணமூர்த்தியைத் துணையாகக்கொண்டனர். மற்றைய அபாரஏகாதசியில் நித்திரைகொள்ளாத அதிபாதகர் அநேகர் அளவில்லாத திருவருள்பெற்று வைகுண்ட வாழ்வுற்றனர். ஆடிமாதத்துப் பூருவபக்கப் பதும ஏகாதசியை மாந்தாதா என்னும் சக்கிரவர்த்தி யநுட்டித்து மழைபெய்வித்துத் தேசவளமெய்தப் பரிபாலனஞ்செய்தான். அபரபக்கத்து யோகினி ஏகாதசியை இயக்கனாய ஏமமாலியும், அவன்மனைவியரான விசாலாட்சி, சுருபை என்பவர்களும் அநுட்டித்துக் குபேரசாப நிவாரணமுற்றனர். ஆவணிமாதப்பூருவபக்கத்து நந்தன ஏகாதசியை நோற்ற மகிசித்துராசன்மகப்பேறடைந்தான். அபரபக்கத்துக் காமிகஏகாதசியிற் பசியிருந்து உயிர்நீங்கிய பஞ்சபாதகர் பரமபதஞ்சேர்ந்தனர். புரட்டாசிமாதம் பூருவபக்க வாமன ஏகாதசியை யுபாசித்த மாவலி யின்புற்றான். மற்றைப்பக்கத்து அசாஏகாதசியை அரிச்சந்திரமகாராசன்நோற்று இராச்சியங்கொண்டான். ஐற்பசிமாதப் பாசாங்குசஏகாதசியை தருமராசன்நோற்றுத் தருமத்திற்கு அதிபதியானான். மற்றைய இந்திர ஏகாதசியை அநுட்டித்து இந்திரசேனராசன் தன்றந்தைக்குச் சுவர்க்கங்கொடுத்தான். கார்த்திகை மாதத்திற் பூருவபக்கத்ததாய பிரபோதினிஏகாதசியே மிக்கவுயர்வுடைத்து இத்தினத்திற்றான் அரிமூர்த்தி அறிதுயிலொருவி யெழுந்தருளுவர் இதில்போகமுத்தி யடைந்தார் தொகையைப் புகலுதலரிதேயாம். மற்றையது ரமா ஏகாதசி யாம். இதனைச்சந்திர பாகைஎன்னும் அரசகுமாரியநுட்டித்துத் தன்காதலனையடைந்து வாழ்ந்தனள். அதிகமாகஏகாதசி பூருவ்பக்கத்து வந்தால் அதற்குப் பரம ஏகாதசி யென்றும், அபரபக்கத்துவரின் அதற்குப் பதுமினி ஏகாதசி, என்றும்பேராம். இவையன்றிக் கௌசிக வேகாதசி, கைகிகவேகாதசி, வைகுண்ட ஏகாதசி, சுவர்க்கவாயிலேகாதசி சர்வசீவேகாதசி, தத்தவேகாதசி, முதலிய ஏகாதசிகளினதும், உத்தானதுவாதசி முதலிய துவாதசிகளினதும் பேதங்களையெல்லாம் வடமொழிவல்லார் வாய்க்கேட்டுணர்க.

## போகிபண்டிகை விரத வரலாறு.

இது போகியென்னும் பெயரையுடைய இந்திரன் ஆஞ்ஞை யால் மேகங்கள்மழைபொழிந்து உலகத்திற்கு நன்மைசெய்வதால் அவ்விந்திரனைக் குறித்துக் கொண்டாடும் பண்டிகையென்றும், பூமாலையைச்சூடிக்கொடுத்த நாச்சியார்மாதங்களுக்குள் உத்தமோத்தமமான மார்கழிமாதத்தில் விரதமிருந்து ஒவ்வொருநாளும் ஒவ்வோர்பாசுரமாக 30 பாசுரங்களைப்பாடி ஸ்ரீமந்நாராயணனை(திருப்பாவை) பாமாலையாலுகப்பித்துக் கடைசிநாளில் ஸ்ரீ பரமபதநாதனை திருமணஞ்செய்துகொண்டு மேலாம்போகத்தையனுபவித்தது போகிபண்டிகையென்றும், மகரசங்கிரமே சத்தியென்னும் ஒரு சத்தியானவள் தக்ஷிணாயன ஆறுமாதமும் மனிதர்களை மூதேவிரூபமாயும், பசுக்களைப் புலிரூபமாயும் பீடித்துக்கொண்டிருக்கையில் அந்தப்பீடையை ஈஸ்வரன் ஹதஞ்செய்து மனிதர்களையும் பசுக்களையும் இரட்சித்தார். பிறகு மனிதர்கள் அவளொழிந்தாளென்னும் மகா சந்தோஷத்துடன் ஸ்நானம்செய்து அன்றுமுதல் போகத்தை யனுபவித்தபடியால் போகிபண்டிகையென்றும், அன்றியும் மார்கழிமாதம் முழுவதும் விரதம் இருந்தவர்கள் இஷ்டசித்திகள் பெற்றுப் போகத்தை அனுபவித்தநாளென்றும் பலகாரணங்கள் உள. இச்சுபதினத்தில் யாவரும் ஸ்நானஞ்செய்து கடவுளைத்தொழுது அறுசுவையுடன் கூடிய அன்னமும் பண்டபலாதிகளையும் தங்கள் தங்கள் சுற்றத்தாருடனும், புத்திரமித்திரர்களுடனும் புசித்துச் சந்தோஷமாயிருத்தல் வேண்டும்.

## சங்கிராந்தி விரத வரலாறு.

சூரியன்வருஷந்தோறும் வடபாதிக்கோளத்தைச்சார்ந்த மகரமுதல் மிதுனமீறாகிய ஆறு இராசிகளில் ஆறுமாதம் சஞ்சரிக்கிறபடியால் அதற்குஉத்தராயனம் (வடசஞ்சாரம்)என்றுபெயர். தென்பாதிக்கோளத்தைச் சார்ந்த சர்க்கடக முதல் தனுசு ஈறாகிய ஆறு இராசிகளில் ஆறுமாதம் சஞ்சரிக்கிறபடியால் அதற்குத் தக்ஷிணாயனம் (தென்சஞ்சாரம்) என்று பெயர் இவ்விரண்டயனங்களும் தே

வர்களுக்கு முறையே பகலும் இரவும்கூடிய ஒருநாளாகின்றது. எனவே சூரியன் தனுசில் சஞ்சரிக்குங் காலமாகிய மார்கழிமாதம் தேவர்களுக்கு விடியற்கால முகூர்த்தமாகின்றது. ஆதலால் இந்த மாதமுழுதும் விடியற்காலத்தில் நீராடிக் கடவுளைப்பூசித்துதோத்திரஞ்செய்வது விசேஷமாயது. மகாசங்கிராமே சத்தியென்னும் ஒரு சத்தியானவள் தக்ஷிணாயன ஆறுமாதமும்மனிதர்களை மூதேவி ரூபமாயும். பசுக்களைப்புலிரூபமாயும் பீடித்துக்கொண்டிருந்த அந்தப்பீடை ஈஸ்வர னனுக்கிரகத்தினால் நிவாரணமாகிச் சகலரும் சவுக்கியத்தை யடைந்தபடியால், சூரியன் வடபுரத்தில் திரும்பும் நாளாகிய தைமாதம் முதல்தேதி மகாசங்கிராந்தி உத்தராயன பிரதம புண்ணியதினத்தில் எல்லோரும் சூரியன், இந்திரன், பிரமன், விஷ்ணு, ருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவன் முதலான தேவர்களைப்பூசித்து லவணமின்றிப் பாற்பொங்கல் நிவேதனஞ்செய்து பிதிர்தேவதைகளுக்குத் திலதர்ப்பணம்பண்ணி வேதியருக்கு இயன்றமட்டும் கோதானமுதல் தசதானமும், கெஜதானமுதல் சோடசமஹாதானமுங்கொடுக்கவேண்டியது. அந்த ஆறுமாதகாலமும் நாடும் வீடும் மூதேவியடைந்திருந்தபடியால் அவற்றைச் சுத்திசெய்து பழம்பாண்டங்களைக்கழித்துப் புதுபாண்டங்களில் சங்கிராந்திதினம் அமுதுசெய்யவேண்டும். அன்றியும் மூதேவியால் பீடிக்கப்பட்ட அந்ததக்ஷிணாயனகாலத்தில் புலிகள் பசுக்களைக்கொன்று புசித்துக்கொண்டிருந்தபடியால் பரமசிவம் மேற் குறித்த மகாசங்கிராம் சத்தியைவாட்டி பசுக்களைக் கொண்டு புலிகளைத் துறத்திஹதஞ்செய்து மனிதருக்கும் பசுக்களுக்கும் சவுக்கியத்தை தந்தருளிய பாவனையாக மறுநாள் சாயங்காலம் பசுக்களுக்கு ஸ்நானமுதலிய அலங்காரம்பண்ணி அவைகளை முன்துரத்திப் பின்னே சுவாமியை எழுந்தருளப்பண்ண வேண்டியது. இதன்பயன் (சகலசம்பத்துண்டாதல்) இது அமிசுமான் என்னும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

இத்தேசத்தில் பொங்கற்பண்டிகைக்கு முந்திய காலமெல்லாம் விளைவுகாலமாயிருந்து அறுத்துச்சேர்த்ததானியங்களில்சூரியன் முகாந்தரமாய் விளைவுக்குவேண்டிய மழை முதலானதைப் பெய்வித்து க்ஷேமத்தையுண்டாக்கின கடவுளுக்கு உபகாரமாய்

முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப்பாலும் வெல்லமும் சேர்த்துச் சமைத்து கிழங்கு பண்டுபலாதிகளோடு சூரியன் ரூபமாக எழுந்தருளியிருக்கிற கடவுளுக்குப்படைத்து பெருநாள்கொண்டாடுவதென்றும், உழவுக்குமாடு இன்றியமையாத துணையாகலான் அது விருத்தி யடையவேண்டுமென்னும் கோரிக்கையோடு மறுநாள் பொங்கலிட்டுக் கடவுளுக்குப்படைத்துத் துதித்து மாடுகளை அலங்கரித்து ஊர்கோலம்வருவதென்றுஞ்சொல்லுவார்கள்.

## சிவராத்திரி விரத வரலாறு.

இவ்விரதம் வாதுளம் முதலியஎட்டு ஆகமங்களிலும், சாலோத்தரம், காலநிர்ணயமென்னும் உபாகமங்களிலும், பௌஷியோத்திரம், காந்தம், வாயு என்னும் புராணங்களிலும் பின் வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் தங்களுக்குத்தாங்கள் ஒரு வாதுசெய்து பரமனைத்தேடினபோது பரமசிவன் திருவுளமிரங்கி மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி சோமவாரந் திருவோண நக்ஷத்திரமுங் கூடிய புண்ணியதினம் இராத்திரிபதினாலுநாழிகையில் அக்கினி ஸ்தாணுவில் நின்று மகேஸ்வர மூர்த்தமாக அடியு முடியுங் காட்டாமல் பிரம விஷ்ணுக்களுக்குத் தரிசனந்தந்தனர். பின்பு இவர்களுடைய சரித்திரத்தை விசாரித்ததில் பிரமன் பரமசிவத்தின் திருமுடியைத் தரிசித்ததாகப் பொய்யும், விஷ்ணுமூர்த்தியானவர் திருவடியைத் தரிசிக்கவில்லையென்று மெய்யும், விளம்பினபடியால், பிரமதேவருக்கு ஆலயமில்லாமல் போகக்கடவதென்று சாபமும், விஷ்ணுமூர்த்திக்கு ரட்சககர்த்தத்துவமுண்டாகக் கடவதென்று ஆசீர்வாதமும் அனுக்கிரகம் பண்ணியதுமன்றி அத்தரிசனமாவது ஒரு முகூர்த்தமப்படியே நிகழ்ந்து மற்றத்தேவர்களெல்லாம் தரிசித்தமையால் லிங்கோற்பவ காலமோர் முகூர்த்தமென்று மேற்படி ஆகமங்களில் விதித்திருப்பது மல்லாமல் இராத்திரிகாலத்தில்பரமசிவம் மகேசுவரமூர்த்தமா யுதித்தபடியினாலே சிவராத்திரியென நாமதேயம் வந்தது.

பரமசிவமானது அக்கினி ஸ்தாணுவில்நின்று உற்பத்தியான தாலும், அந்த ஸ்தாணுலிங்க ஸ்ரூபமானதாலும், லிங்கத்தில் நின்றும் மகேசுவரமூர்த்தமா யுற்பத்தியானதாலும், லிங்கோற்பவமென்று நாமதேயமுண்டாயிற்று. அன்றியும் பிரமதேவனுக்கு இறுதிக்காலமாகியபிரளயத்தில் சீவராசிகள்முழுவதும் ஒழிந்துபோன இராத்திரிகால நான்குசாமத்திலும் பார்வதிதேவியரார் பரமசிவனை பூசித்துமறுபடியும் சிருஷ்டித்தொடங்குக்காலத்தில் பார்வதிதேவியார் பரமசிவத்தைநோக்கி நான் தேவரீரைப் பூசித்தமையா லிதற்குச் சிவராத்திரியென்றும், இந்தக்காலத்தில் விரதமிருந்து பூசிப்பவர்கள் சாயுச்சியம்பெறவுங் கிருபை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டனள். இதன் விவரணம் (உபதேசகாண்டத்திற்) கண்டுக்கொள்க.

மாசிமாதம் அபரபட்ச சதுர்த்தசி திதியில் சூரியோதயகாலத்தில் நித்தியகர்மானுஷ்டானங்களைமுடித்துச்சிவத்தியானத்துடன் அன்றுபகல்முழுவதும் உபவாசமாயிருந்து இராத்திரிநான்குசாமத்திலும் நித்திரையில்லாமல் சிவபூசை செய்யவேண்டும். சிவபூசையில்லாதவர்கள் ஆலயத்திற்சென்றுபரமசிவத்திற்கு அபிஷேகமுதலானதுகள்செய்வித்துத் தரிசனம்பண்ணி மறுநாள் உதயமானவுடன் நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சிவதரிசனஞ் செய்துவந்து பாரணஞ் செய்யவேண்டியது. சிவராத்திரி தினம் இராத்திரி பதினாலுநாழிகைக்குமேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவகாலமாக விதிக்கப்பட்டிருப்பதனால் அந்தக் காலத்தில் அவசியம் சிவதரிசனஞ் செய்யவேண்டும். சிவராத்திரி தினத்தில் பரார்த்தபூசையாவது, ஆத்துமார்த்த பூசையாவது, தங்கள்தங்கள் நியமப்பிரகாரம் நடத்தவேண்டியது. பரார்த்தத்துக்காவது ,ஆத்துமார்த்தத்துக்காவது சூரியதேவர் முதலானவர்களுக்கும், சோமாஸ்கந்தமூர்த்தி முதலானவர்களுக்கும் பூசை நடத்தவேண்டியதில்லை, மார்த்தத்துக்கு மகாலிங்கமுதலான மூலமூர்த்திகளுக்கும், ஆத்துமார்த்தத்துக்கு மகாலிங்கமூர்த்திமட்டும்பூசைநடத்தவேண்டியது. பரார்த்தத்திற்கும் ஆத்துமார்க்கத்திற்கும்,மகாகணபதிக்கு மாத்திரம் நான்கு காலத்திற்கும் பூசை நடத்தலாம்.

முதலாவது காலம்:—அபிஷேகம்-பஞ்ச கௌவியம், வஸ்தி ரம்-செம்பட்டு, பத்திரம்-வில்வம், கந்தம்-பச்சைகர்ப்பூரம் சேர்ந்த சந்தனம், நிவேத்தியம்-பாற்பொங்கல், தூபம்-சாம்பிராணி, சந்த னக்கட்டை, தீபம்-புட்பதீபம்.

இரண்டாவது காலம்:—பஞ்சாமிர்தம், மஞ்சள்பட்டு, குருந் தை, அகில்சந்தனம், பாயசான்னம், குங்குமம், சாம்பிராணி, நட் சத்திர தீபம்.

மூன்றாவது காலம்:—பலோதகம், வெண்பட்டு, கிளுவைவி ளா, கஸ்தூரிசேர்ந்த சந்தனம், எள்ளோதனம், கருங்குங்கிலியம், ஐந்து முகதீபம்.

நான்காவது காலம்:—கந்தோதகம். நீலப்பட்டு, கருநொச்சி, புனுகுசேர்ந்த சந்தனம், சுத்தான்னம், கர்ப்பூரம், வில்வார்த்தி.

மேலெழுதிய நான்குகால பூசைக்கும் விதித்திருக்கிற திரவி யங்கள் சிவராத்திரி விசேஷதினமானதால் இதுகளோடியதாவி தி யான அபிஷேகமுதலானதுகளும் பத்திரபுட்பங்களும் சித்திரான் னங்களும் அப்பவகைகளும் சோடசோபசார தீபாராதனைகளும் நடத்தவேண்டியது. இந்த நான்குகாலபூசைகளும் மகாலிங்கமூர்த் திக்கு அஷ்டபுஷ்ப பூர்வகமாக நடத்தவேண்டியது. அஷ்டபுஷ்ப விதியை ஆசாரியர்மூலமா யுணரவேண்டும். அஷ் ட புஷ்பமென் பது அர்ச்சனைக்காகிய எண்வகைப்புட்பம். அன்றி மந்திரபூர்வமா யுள்ளதென்று முணர்க.

## சுப்பிரமணியர் சஷ்டி விரதவரலாறு.

இது ஐப்பசிமாதம் சுக்கிலபட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையில் ஆறுநாளும் சுப்பிரமணியக்கடவுளை முன்னிட்டு அநுஷ் டிக்கும் விரதமாம். இவ்விரதாநுஷ்டான காலத்தில் ஆறுநாளும் உபவாசம் செய்தல்வேண்டும். அவ்வாறுசெய்ய இயலாதவர்கள் ஒவ்வொரு போதுணவுகொண்டு சஷ்டியில் உபவாசஞ் செய்தல் வேண்டும். சர்வாலயங்களிலும் ஆறுநாளாகிய சஷ்டியில் சுப்பிர

மணியக் கடவுளுக்குச் சூரசம்ஹார மகோற்ஸவம் நடத்தவேண்டும். இவ்விரதத்தை மெய்யன்புடன் ஆறுநாளும் அநுஷ்டித்துப் பூர்த்திசெய்து, 7-ம் நாள் அடியவர்களுக்கு மகேஸ்வரபூசை நடத்தல்வேண்டும்.

மாதந்தோறும்வரும் சுக்கிலபக்ஷத்துச் சஷ்டியிலே சுப்பிரமணியக்கடவுளை வழிபட்டுப் பழவர்க்கம், பானகம், மிளகு இவற்றில் இயன்றதொன்றை உட்கொள்ளல் உத்தமம்.

**சஷ்டிவிரதத்தின் காரணம்:**—ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் சூரபதுமனுடன் போர்புரியத்தொடங்கி ஆறுநாள் போர்புரிந்து ஆறுவதுநாள் அவனை வெற்றிகொண்டாராகலானும், அவ்வாறு நாட்களினும் அவனாற்றுயரடைந்துள்ள தேவர்கள் முனிவர்கள் முதலியோர் துயருற்று வாடி முருகக்கடவுளைத் துதித்துக்கொண்டிருந்தார்களாகலானும், அவ்வைதிகப்படி அவ்வாறுநாளும் உபவாசமாகவிருந்து அம்முருகக்கடவுளின் திருப்புகழ்களையே தோத்திரஞ் செய்துக்கொண்டிருப்பது வழக்கம்.

## கார்த்திகை விரதவரலாறு.

கார்த்திகைமாதம் கார்த்திகை நக்ஷத்திரந்தொடங்கிப் பிரதிமாதக் கார்த்திகை நக்ஷத்திரந்தோறும் முருகக்கடவுளை முன்னிட்டு அநுஷ்டிக்கும் விரதமாம், இதில் உபவாசஞ்செய்ய இயலாதவர்கள் இரவில் பழமுதலிய உணவு கொள்ளல் வேண்டும்.

## விநாயகர் சுக்கிரவார விரத வரலாறு.

இது வைகாசிமாதம் சுக்கிலபட்சத்து முதற்சுக்கிரவாரந்தொடங்கிப் பிரதிசுக்கிரவாரந்தோறும் விநாயகக்கடவுளைக் குறித்து அநுஷ்டிக்கும் விரதமாம். இவ்விரதத்தில் கனிமுதலியன இராப்போதில் உட்கொள்ளல் வேண்டும்,

## மாளயபக்ஷ அமாவாசை விரதவரலாறு.

சாஸ்திரங்களில் கூறியுள்ள தேவவருஷக்கணக்கின்படி புரட்டாசிமாதம் நடுராத்திரி யாகையாலும், நிஸ்ஸப்தமாயிருக்கும் அக்காலமே தேவர்களாராதனைக்கும் பிதிரர்களுபசாரத்திற்கு முரியதென்பது நூன்முறைமையாகையாலும், அம்மாதத்தில் பிதிரர்கள் யாவருக்கும் தர்ப்பணஞ் செய்து அவர்கட்குப் பிரீதியாகும் வண்ணம் பிராமணபோஜனம் செய்விப்பதுவழக்கம். அன்றியும் மாதந்தோறும் வரும் அமாவாசைக்கும் உபவாசமிருந்து பிதிர் தர்ப்பணம் செய்வது மிகவுத்தமோத்தமமே.

## சுக்கிரவார விரத வரலாறு.

இது சித்திரைமாதம் சுக்கிலபட்சத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிப் பிரதி சுக்கிரவாரந்தோறும் உமாதேவியாரை முன்னிட்டு அநுஷ்டிக்கும்விரதமாம். இவ்விரததினத்தில் ஒருபோது பகலில் உணவுகொள்ளல் வேண்டும். இம்மாதத்துப் பௌர்ணமியே சித்திரைப்பௌர்ணமி எனப்படும். அத்தினத்தில் சர்வ சிவாலயங்களிலும் விசேஷ அபிஷேகாதிகள் நடக்கும்.

## பிரதோஷண காரண வரலாறு.

பூர்வம் தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக்கடைந்தபோது அதினின்றும்உண்டான ஆலகாலவிஷமானது உலகங்களையெல்லாம் வருத்த, ஹரி பிரமேந்திராதி தேவர்கள் கண்டஞ்சி அதன் கொடுமையைச் சகிக்கமாட்டாதவராய் பரமேஸ்வரனைச் சரணடைய, எம்பெருமான் அஞ்சன்மினென்று அபயாஸ்தமளித்து ரட்சித்தருளியது சுக்கிலபட்சம்திரயோதசி திதி ரஜனிமுகவேளை (மஞ்சள்வெயில் காயும்வேளை) யாகையால், சூரியன் அஸ்தமயனத்திற்கு முன்னும் பின்னுமுள்ள மூன்றே முக்கால் நாழிகை பிரதோஷகால மெனப்படும்.

## பிரதோஷ விரத வரலாறு.

இது சுக்கிலபட்சம் கிருஷ்ணபட்சம் இரண்டிலும் வருகின்ற திரயோதசி திதியில் சூரியஸ்தமயனத்துக்குமுன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாயுள்ள காலமாகிய பிரதோஷகாலத்தில சிவபெருமானை முன்னிட்டு அனுஷ்டிக்கும் விரதமாம். இவ்விரதம் ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி என்னும் நான்குமாதங்களில் ஒன்றிலே சனிப்பிரதோஷ முதலாகத்தொடங்கி அனுஷ்டித்தல்வேண்டும். இதில்பகற்போதில் போஜனஞ் செய்யலாகாது. சூரியாஸ்தமயனத்திற்கு நான்கு நாழிகைக்குமுன் ஸ்நானஞ்செய்து சிவபூசைபண்ணிச் சிவாலயஞ்சென்று தரிசனஞ்செய்துக்கொண்டு பிரதோஷகாலம் நீங்கியபின் உணவு கொள்ளல்வேண்டும். பிரதோஷகாலத்தில் போஜனம், சயனம், ஸ்நானம், விஷ்ணுதரிசனம் முதலியனசெய்யலாகாது. சூரியாஸ்தமயனத்திற்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையே சிவதரிசனத்திற்கு விசேஷமானது.

## கலியாணசுந்தரர் பங்குனி உத்திர விரதவரலாறு.

இதுபங்குனிமாதத்து உத்திரநட்சத்திரத்திலே கலியாணசுந்தரமூர்த்தியைக்குறித்து அநுஷ்டிக்கும்விரதமாம். இவ்விரததினத்தில் இரவில்ஒருபோது உணவுகொள்ளல்வேண்டும் இத்தினத்தில் சர்வசிவாலயங்களிலும் முக்கியமாய் காஞ்சியில் பிரமோற்சவமும், பத்தாநாள் உத்திரநட்சத்திரத்தில் சிவபெருமானுக்குத் திருக்கலியாணமும், தங்கரிஷபவாகன மகோத்ஸவமும், இம்மாதத்தில்திருமயிலையிலும், திருவான்மியூரிலும் பிரமோத்ஸவமும் நடக்கும்.

## விநாயகர் சஷ்டி விரதவரலாறு.

இது கார்த்திகைமாதம் கிருஷ்ணபட்சத்துப் பிரதமைமுதல் மார்கழிமாதம் சுக்கிலபட்சத்துச் சஷ்டியீறாகிய இருபத்தொருநாளும் விநாயகக்கடவுளைக்குறித்து அநுஷ்டிக்கும்விரதமாம். இதில் இருபத்தோரிழையாலாகிய கயிற்றைப் புருஷர்கள் வலக்கரத்திலும் ஸ்திரீகள் இடக்கரத்திலும் கட்டிக்கொண்டு முதல் இருபதுநாளும் ஒவ்வொருபொழுது உணவுகொண்டு முடிவுநாளாகிய சஷ்டியில் உபவாசம் செய்தல்வேண்டும்.

## மகிழடி உற்சவச் சுருக்கும்.

திருவொற்றியூரில் தியாகேசப்பெருமானுக்கு மாசிமாதத்தில் நடக்கும் பிரம்மோத்ஸவத்தில் ஒன்பதாம்நாள் மகநட்சத்திரத்தில் திருக்கலியாண மகோத்ஸவம் நடப்பது வழக்கம். இவ்வாறிருக்க, ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலி நாச்சியாரை மணம்புரியும் பொருட்டு "நான் உன்னைப்பிரியேன்" என, அங்குள்ள மகிழமரத்தினடியிற் சபதஞ்செய்துதந்ததும், அதேமாதம் அதே நட்சத்திரமாகையால், அவ்வைதிகத்தின்படி, அன்றைக்கே ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளையும் எழுந்தருளச்செய்து மகிழடிசேவை செய்விப்பதும் சாம்பிரதாயம். ஆனல் பூர்வம்இமாசலத்தில் உமாமகேஸ்வரர் திருக்கலியாண காலத்தில், தேவர்கள் ரிஷிகள் மனிதர்கள் முதலிய சமஸ்தஜனங்களும் அங்கு ஒன்று கூடியிருந்தமையால், வடதிசை தாழ்ந்து தென்றிசையுயர, அப்போது எம்பெருமான் அகஸ்தியரைத் தென்றிசைக்கண் சென்றிருந்து பூமியைச் சமநிலைப் படுத்தும்படி ஏமுனிவர் பெருமான் சுவாமியைநோக்கி, அம்மையப்பர் திருமணக்கோலத்தைத் தரிசிக்கும் புண்ணியம் பெறுமைக்கு மனம்வருந்தி நிற்க, இக்கோலத்தை மாசி மகநட்சத்திரத்தில் திருவொற்றியூரில் உனக்குக் காட்டியருள்வோம் என்று திருவாய் மலர்ந்தனர். அவ்வாறே அம்முனிவர் பெருமான் திருவொற்றியூரின்கண் சென்று தம்பெயரால் ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து தவம்புரிந்துவருகையில், கண்ணுதற்பெருமான் தாம் வாக்களித்த வண்ணமே மேற்படி தலத்தில் மாசி மகநட்சத்திரத்தில் மகிழடியின் கீழ் திருமணக்கோலத்தைக் காட்டியருளினர். இந்த ஐதீகமும் இப்பொழுது நடந்து வருகின்றது.

## அங்கம்பூம்பாவை உற்சவச் சுருக்கும்

திருமயிலையிற் கபாலீசருக்குப் பங்குனிமாதம் நடக்கும் பிரமோற்சவத்தில் ஒன்பதாம் நாள் உத்திரநட்சத்திரல் திருமண மகோற்சவம் நடப்பது வழக்கம். நிற்க, ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்திசுவாமிகள் காலத்தில், அவருக்குத் திருமணம் செய்விக்கஎண்ணிவளர்த்துவந்தசிவநேசச்செட்டியாரின் அருமைப்புதல்வி அங்கம் பூம்பாவை யென்பவள் தனது சேடியருடன்பூங்காவிற்சென்றுபூக் கொய்யுங்கால் கடவுட்செயலாய் அரவந்தீண்டிமரித்தனள். அன்ன

வன் தந்தை அப்பெண் உயிர்பெற்றெழ எவ்வளவோ முயன்றும் பயன்படாமையான் மனம்வருந்தி மகளைச் சுட்டெரித்துச் சாம்பரையும் என்பையும் ஓர் பாண்டத்திற்பெய்துவைத்து ஸ்ரீதிருஞான சம்பந்தமூர்த்திகளின் வரவை அதி ஆவலுடனெதிர் பார்த்திருந்தனன். பின்னர் சுவாமிகள் திருவொற்றியூர்க் கெழுந்தருளி யிருப்பதை யுணர்ந்த செட்டியார் அங்குசென்று மூர்த்திகட்கு வந்தனை வழிபாடியற்றித் தமது குறையை விண்ணப்பித்தவுடன் அம்மூர்த்திகள் திருவுளமிரங்கித் திருமயிலைக்கெழுந்தருளி, "மட்டிட்ட புன்னையங்கானல்" என்னும்ருப்பதிகமோதி அப்பெண்ணின் என்பைச்சேமித்துவைத்திருந்த குடத்தினின்றும் பெண்ணுருக்கொண்டு வரும்படியருளினர். அன்று கபாலீசருக்கு திருக்கலியாண மகோற்சவ தினமாகையால், அம்மகோற்சவத்துடன் இவ்வைதிகத்தையும் நடத்தவே அப்போதுநாயன்மார்களனைவரும் அக்காட்சிக் கெழுந்தருளினார்களாகலான் அறுபத்துமூன்று நாயன்மார்களுத்சவமெனப்படும். (இப்பூம்பாவையின் சரித்திரவிரிவை ஸ்ரீதிருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரின் வைபவத்தாலுணர்க.)

## வால்மீகரிஷியின் நடனதரிசனச் சுருக்கம்.

திருவொற்றியூரில் தியாகராசர் திருநடனத்தைத் தரிசிக்கும் பொருட்டு வால்மீகமகாரிஷியானவர் நெடுங்காலம் தவம்புரியாநிற்கையில், சுவாமி அவருடைய தவத்திற்கிரங்கிப் பிரத்தியக்ஷமாகி அம்முனிவரைநோக்கி நீயாதுவேண்டித் தவம்புரிகின்றனை என்று வினவ எம்பெருமானே உமது திருநடனத்தைத் தரிசிக்கவேண்டி செய்கின்றேனென, ஆனால் அந்த நடனசேவையைத் திருவான்மியூரின்கண் காட்டுகிறோமென்று திருவாய்மலர்ந்தருள அவ்வாறே யங்குசென்று தரிசித்தனர். சுவாமி வால்மீகரிஷிக்கு நடனஞ்செய்து காட்டினமையால் வால்மீகர் நடனமென வழங்குகின்றது.

## ஔவையாரை ஆஸ்ரயித்திருந்த ஒரு ஏழைப் பெண்ணின் விவாக விசித்திரம்.

ஔவையார் தன்னைவெகுநாளாய் ஆஸ்ரயித்திருந்த ஒருஏழை பெண்ணின் விவாகத்திற்குச் சேரன், சோழன், பாண்டியன் முத

விய சகல அரசர்களையும் வரவழைக்கவேணுமென்னு மெண்ணத்தோடு அவர்களுக்கு மணவோலை யனுப்பினள். அதுகண்டு அரசர்களும் ஔவை கவீஸ்வரியாகையாலே அவள் பேச்சைத் தடுக்கவொண்ணாதெனக்கருதி அதிக வினயத்துடனே சதுரங்கசேனைகளுஞ்சூழக் கலியாணத்திற்கு வந்தார்கள். விவாக முகூர்த்தமானவுடனே ஔவையார் அவர்களுக்கு அதிக பிரியவசனங்களைச்சொல்லிச் சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளால் தக்கபடியுபசரித்து "அப்பன்மார்களே! நீவிரெல்லீரும் எப்படி இக்கிழவியை அருமைபெருமைப்படுத்தினீர்களோ அப்படியே இவ்வேழையிடம் அற்ப வுணவையுண்டு களித்து இச்சுறுமியர்களுடன் சுகமாய் வாழக்கடவீர்கள்" என்று ஆசீர்வதித்தது,

"ஆய்ன் பதியி லரன்பதிவந் துற்றளகம்
மாயனூ துங்கருவி யாலும் - தூயமணிக்
குன்றுபோல் வீறு குவிமுலையா டன்னுடனீர்
இன்றுபோ லென்று மிரு."

அதற்கவர்கள் பரிகாசமாயும், ஔவை திறத்தை யறியவேண்டியும், நீ உணவுசெய்விப்பது உண்மையாயின் இப்போது நுங்கு தருவித்தாற் புசிப்போமென்றார்கள். அது நுங்குண்டாவதற்கு அகாலமானபடியால் அவர்கள் மனோபீஷ்டப்படி நிறைவேற்றவேண்டி வெட்டி விறகாய்க்கிடந்த சில பனந்துண்டங்களை நோக்கிப் பின்வரும் கலித்தாழிசை அல்லது ஐந்தடிக் கலித்துறைப்பாவைச் சொல்லினள்:

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே.

உடனே கீழே விழுந்திருந்த அப்பனந்துண்டங்கள் குருத்துவிட்டுப் பச்சோலை சலசலவென் றசைய நுங்குக் குலைகளைத் தாங்கிக்கொண்டு நின்றதைக்கண்டு அரசர்கள் வெட்கமுஞ் சந்தோஷமும் அடைய அங்கு வந்திருந்த எல்லோரும் அளவிடற்கரிய ஆச்சரியத்தை யடைந்தார்கள்.

இல்லற சாரசங்கிரகம்-முற்றுப் பெற்றது.

# அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| சிறப்புக்கவி | 2 |
| முகவுரை | 5 |
| கணபதிதோத்திரம், கடவுள் வணக்கம், சிறப்புப்பாயிர | 5 |
| ஆடவர் தருமம் | 6 |
| விபூதி மான்மியம் | 18 |
| உருத்திராக்க மான்மியம் | 23 |
| அனுட்டானஞ்செய்யும்விதி | 28 |
| சூரிய நமஸ்காரவிதி | 33 |
| சிவாலய தரிசனவிதி | 35 |
| தேகாரோக்கிய விதி | 41 |
| வஸ்திரம் உடுக்கும்விதி | 49 |
| மாதர் தருமம் | 50 |
| வருஷப்பிரப்பின் வரலாறு | 69 |
| ஸ்ரீவரலட்சுமிவிரதவரலாறு | 70 |
| விநாயகர் சதுர்த்தசிவிரதவர | 73 |
| நவராத்திரி விரத வரலாறு | 74 |
| தீபாவளி விரதவரலாறு | 77 |
| கேதாரி கௌரி விரதவரலா | 80 |
| கார்த்திகை தீபதரிசனவிரத | 85 |
| சோமவார விரத வரலாறு | 88 |
| ஆருத்ரா தரிசனவிரதவரலா | 90 |

| | பக்கம். |
|---|---|
| ஏகாதசி விரத வரலாறு | 91 |
| போகிபண்டிகைவிரதவரலா | 97 |
| சங்கிராந்தி விரத வரலாறு | 97 |
| சிவராத்திரி விரதவரலாறு | 99 |
| சஷ்டிவிரத வரலாறு | 101 |
| கார்த்திகை விரதவரலாறு | 102 |
| விநாயகர் சுக்கிரவாரவிரத | 102 |
| மாளயபக்ஷ அமாவாசைவி | 103 |
| சுக்கிரவார விரத வரலாறு | 103 |
| பிரதோஷகாரண வரலாறு | 103 |
| பிரதோஷ விரதவரலாறு | 104 |
| கலியாணசுந்தரர் பங்குனி உத்திர விரத வரலாறு | 104 |
| விநாயகர் சஷ்டி விரதவர | 104 |
| திருவொற்றியூர்மகிழடிஉற் | 105 |
| திருமயிலை அங்கம் பூம்பாவை சுருக்கம் | 105 |
| திருவான்மியூர் வால்மீகரிஷியின் நடனதரிசனசருக் | 106 |
| ஔவையாரை ஆஸ்ரயித்திருந்த ஏழைப்பெண் விவாக விசித்திரம் | 106 |



## ஜயம்பெற்ற சுந்தரவல்லிக் கதை.

இதனால் சகலமான கனதனவிற்பன விவேகிகளுக்குத் தெரிவிப்பது யாதெனில் மேற்கண்ட கதையானது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயும் என்றுமகேட்டிராததாயும், பொதுநோக்குள்ளதாயும், பல அரிய நூல்களின் மேற்கோள்களைப் பொருந்தினதாயும், புருஷர்களுக்கு ஸ்திரீகள் அடங்கிநடக்கும்வழியினையும் ஸ்திரீகள் தங்கள்கற்புக்கு பழுதுநேரிடாதவண்ணம் காத்துக்கொள்ளும்திறத்தையும் கற்பிப்பதாயும் அதர்மத்தை விலக்கி தர்மசம்பந்தங்களை விளக்குவதாயும் அநேகநீதிகளை யுணர்த்துவதாயும் படிப்பவர்கட்கும் கேட்பவர்கட்கும் ஆநந்தத்தைக் கொடுக்கக்கூடியதாயும் நூதனமாய் இயற்றப்பட்டிருக்கிறது. இதைநேரில்வாங்கி வாசித்தவர்களுக்கே இதன் அருமை தெரியும். இதன் விலை அணா 8.



SUN OF INDIA PRESS, CHOOLI MADRAS.



77400

# நூதனபுத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| நலாயிரப் பிரபந்தம் | 3 | 8 | 0 |
| திருவிளையாடற்புராணவசனம் 64-படங்களுடன் | 2 | 8 | 0 |
| பெரிய மில்டேறி பாகசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| சைவ பாகசாஸ்திரம் | 0 | 12 | 0 |
| இல்லற சார சங்கிரகம் சுத்தப்பிரதி | 0 | 10 | 0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதம் கவி | 3 | 8 | 0 |
| ஸ்ரீமத் கம்பாரமாயண வசனம் 1-வால்யம் | 4 | 0 | 0 |
| இராமாயணவசனம் 7-காண்டம் 2-வால்யம் | 6 | 0 | 0 |
| மேற்படி செய்யுள் ,, ,, | 7 | 0 | 0 |
| ஸ்ரீ மகாபாகவத வசனம் படத்துடன் 1-வால்யம் | 4 | 0 | 0 |
| மேற்படி திக்கு 2-வால்யம் | 6 | 0 | 0 |
| சிவக்ஷேத்திர யாத்ரா விளக்கம் | 0 | 5 | 0 |
| பிரபஞ்ச உற்பத்தி | 2 | 0 | 0 |
| ஸ்ரீபுருஷ சாமுத்திரிகாலக்ஷணம் | 0 | 10 | 0 |
| பாரதம் ராயல் கிளேஸ் 4-வால்யம் | 8 | 0 | 0 |
| மேற்படி 2-வால்யம் | 7 | 0 | 0 |
| பாரதம் டிம்மி ரப்பு 4-வால்யம் | 12 | 0 | 0 |
| மேற்படி திக்கு | 15 | 0 | 0 |
| நல்லாப்பிள்ளை பாரதம் செய்யுள் 2-வால்யம் | 10 | 0 | 0 |
| பாரதச்சுருக்க வசனம் | 2 | 8 | 0 |

இன்னும் இதில் காணாத புஸ்தகங்களும் மருந்துகளும் அத்தர் வாசனை திரவியங்களும் உயர்ந்த ரப்பர் ஸ்டாம்புகளும் ரெயில்வே ரிகுலேடர் என்னும் உயர்ந்த கெடியாரங்களும் தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

முழு கேட்டலாக் வேண்டியவர்கள் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

சிவனேசன் அண்டு கோ.,

ஞபி, அச்சுக்கூடத்தலைவர்,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.